பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 10, ஞாயிற்றுக்கிழமை 23.04.2017 | கதிர் 168


எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் அட்சய திருதியை நன்னாளில் தங்கத்தை அள்ளிச் செல்ல வாரீர்
சன்சிகா நகையகம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# அரசமைப்பு முயற்சி முடிவுறும்வரை சம்பந்தனை விட்டு விலகோம்!



## புளொட் சித்தார்த்தன் திட்டவட்டம்

(வவுனியாவில் இருந்து எஸ்.நிதர்சன்)

"ஈழத்தமிழ் அரசியலில் எத்தகைய முரண்பாடுகள், மாற்றங்கள் ஏற்பட்டாலும் அரசமைப்புச் சீர்திருத்தம் கொண்டு வரப்படும்வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமையையும்விட்டு நாம் துளிகூட நகரமாட்டோம்"

- இவ்வாறு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட் அமைப்பின்) தலைவரும் எம்.பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். பக்கம் 22 »



## நல்லாட்சி அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கினால் தமிழருக்கு அநீதி இழைத்தோர் ஆட்சிக்கு வந்துவிடுவர்

### மாவையின் சஞ்சலம் இது

"இந்தஅரசாங்கத்தைநெருக்கடிக்குள்ளாக்கினால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்தவர்கள் மீண்டும் பதவிக்கு வந்து விடுவார்கள். அதுதான் எங்களுக்கு தற்போது இருக்கின்ற ஒரு சஞ்சலம்."

பக்கம் 22 »



## மயங்கிச் சாய்ந்தார் மாவை



யாழ்ப்பாணம், ஏப்.23

அண்மைக்காலமாக சுகவீனமுற்றிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மீண்டும் ஒருதடவை நீண்ட நேரம் ஆக்ரோஷமாகப் பேசி மயங்கிச் சாய்ந்தார்.

பக்கம் 22 »

## அளப்பு அருணாசலம்



அப்ப.. லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வருவார் போலை....!

## வரலாற்றில் மிகப்பெரிய மேதினம் காலிமுகத்திடலில் என்கிறார் நாமல்!



கொழும்பு, ஏப். 23

வரலாற்றில் மிகப் பெரிய மேதின நிகழ்வு, கொழும்பு - காலி முகத்திடலில் இம்முறை நடத்திக் காட்டப்படும் எனச் சூளுரைத்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ. பக்கம் 22 »

## மீதொட்டமுல்ல குப்பைமேடு அனர்த்தம்: நாடாளுமன்றத்தில் தனியாக விவாதம்!

கொழும்பு, ஏப்.23

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்த அனர்த்தம் குறித்து நாடாளுமன்றத்தில் தனியாக விவாதம் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

கூட்டு எதிரணி இந்த விவாதத்துக்கான கோரிக்கையை முன் வைத்திருந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான சம்மதத்தை வழங்கியிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

அதனையடுத்து அடுத்த மாத முற்பகுதியில் இவ்விடயம் தொடர்பாக தனியாக பக்கம் 22 »


ஆறுதலின் கருத்தூன்றல் களம்

'ஆங்கில மொழிக் கற்றல் மற்றும் தமிழ் மொழிக் கல்வி அபிவிருத்தி'

கல்வியியல் கருத்தாடல்

இடம்:- நாவலர் கலாசார மண்டபம், நல்லூர்.
காலம்:- 24,25,26,27,28 ஏப்ரல்2017 தினசரி. மாலை 5.00 - 7.00 மணி.

வளவாளர்களாக இந்தியப் பேராசிரியர்களான
சாம் மோகன்லால்
என்.நடராஜபிள்ளை
உட்படப் பல கல்விமான்கள்
அனைவரும் வருக!!

தொடர்புகளுக்கு 021 221 7092

## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் பிரேரணை

பிரஸல்ஸ், ஏப்.23

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்கும் முயற்சிகளுக்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒன்று சேர்ந்து இந்தப் பிரேரணையை முன்வைத்திருக்கின்றனர்.

28 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில் உள்ள 751 உறுப்பினர்களில் 376 பேர் இந்தப் பிரேரணையை ஆதரிப்பார்களாயின், பக்கம் 22 »

## இந்திய ஜனாதிபதி பதவி ரஜினிக்கு?



சென்னை, ஏப்.23

இந்தியாவில் அடுத்த ஜனாதிபதிப் பதவிக்கான ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் நடிகர் ரஜனிகாந்தின் பெயரும் முன்னிலையில் இருப்பதாக சில இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தற்போதைய ஜனாதி பக்கம் 22 »

50 வருட காலமாக யாழ்குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைப்பெற்ற உங்கள் அபிமான



மைதிலி நகை மாடம்

தங்கத்திருநாளாம் அக்ஷயதிருதியை கொண்டாட்டம்

அன்றைய தினத்திற்கான (28,29 ஆம் திகதிகளில்) விசேட சலுகைகள்

1 ஆம், 2 ஆம், 3 ஆம், பரிசுகள் தங்கநாணயங்கள் மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

இம்மாதம் 29.04.2017 ஆம் திகதி வரை எம்மிடம் நகைவாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விசேட பரிசில்கள் காத்திருக்கின்றன.

இரண்டு பவுணுக்குமேல் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் பவுண்காசு அன்பளிப்பாக வழங்கப்படும்.

இல.39V, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7902 | யாழ் மைதிலி ஜுவலர்ஸ்-இல.797, செட்டியார்தெரு, கொழும்பு 11. தொ.பே: 011 239 623

# முள்ளிக்குளம் மக்களின் நிலங்களை ஒப்படைக்க விரைவில் நடவடிக்கை



## வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவிப்பு

மன்னார், ஏப்.23

மக்களின் சொந்தக் காணிகள் மீண்டும் மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளார். அதற்கமைவாக முள்ளிக்குளம் மக்களின் நிலங்கள் மீண்டும் மக்களிடமே மீள ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இல்லத்தின் அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் மாலை முள்ளிக்குளம் சென்று, நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் முள்ளிக்குளம் கிராம மக்களை சந்தித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மக்களினுடைய பூர்வீக நிலம் மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அதே போன்று நாட்டின் பாதுகாப்பும் இருக்க வேண்டும்.

மக்களின் காணிகள் விடுவிப்பு குறித்து யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அவசர கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர்.

அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று மக்களின் பாதிப்புக்கள் குறித்து விவரங்களை பெற்றுக்கொள்வது என்று அனைவரும் இணைந்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்.

அதற்குப் பிற்பாடு அந்த விவரங்கள் அனைத்தும் ஜனாதிபதிக்கு அனுப்பி உரிய தீர்வை பெற்றுக்கொள்ளுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முள்ளிக்குளம் மக்களின் காணி பிரச்சினை தொடர்பான சகல விவரங்களும் என்னிடம் வழங்கப்பட்டுள்ளன.

நான் இந்தப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடவுள்ளேன். அப்போது முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினை தொடர்பில் அவருக்குத் தெளிவுபடுத்துவேன்.

இந்த அரசுக்கு மக்களது காணிகள் தேவையில்லை. கடந்த காலங்களைப் போன்று படையினருக்கு அதிக காணிகள் தேவையில்லை.

இராணுவ அதிகாரிகளுக்கு மக்களின் காணிகளை மீள மக்களிடம் வழங்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது.

எனவே, முள்ளிக்குளம் மக்களின் காணி பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்து நல்லதொரு முடிவொன்றை பெற்றுக்கொண்டு மீண்டும் முள்ளிக்குளம் மக்களாகிய உங்களைச் சந்திக்க இங்கு வருவேன். -என்றார். (ஐ)

## மே தினக் கூட்டம்; ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஆதரவாளர்கள்!

கொழும்பு, ஏப்.23

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கண்டியில் நடைபெறவுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு 2 ஆயிரத்து 800 பஸ்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஆதரவாளர்கள் அழைத்து வரப்படவுள்ளனர் என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த முறை நடத்தப்படவுள்ள மே தினக் கூட்டங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டமே மிகப் பெரிய கூட்டமாக இருக்கும்.

இதில் தற்பொழுதே பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்கின்றனர் என உடன்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## சைவ மாநாடு இறுதிநாள் நிகழ்வுகள் இன்று ஞாயிறு

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நடத்தும் இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை சமகால ஆய்வு அமர்வுகள் இடம் பெறும். பிற்பகல் 2 மணிக்கு நிறைவு நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி தகைசார் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சென்னைப் பல்கலைக் கழக சைவசித்தாந்தத்துறை பேராசிரியர் முனைவர் எஸ்.பி. சபாரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

சிறப்புரைஞர்களாக இந்திய பேரூர் ஆதீன இளையபட்டம் வண. சீர்வளசிர் மருதாசல அடிகளார், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பேராசிரியர் முனைவர் வீ. ஜெயபால் ஆகியோர் கலந்துகொள்வர்.

வாழ்த்துரைகளை பேராதனைப் பல்கலைக் கழக தத்துவத்துறை கலாநிதி மல்லிகா இராஜரட்ணம், மீள் குடியேற்ற புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் ஆகியோர் வழங்குவர். தொடர்ந்து விருந்தினர் கௌரவிப்பு, மாநாட்டு மதிப்பீட்டுரை, கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும்.





## மணலாறு பிரதேச வைத்தியசாலையில் சிறுநீரக நோய்க்கான சிகிச்சை நிலையம்

30 கோடி ரூபா செலவில் மணலாறு பிரதேச வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட சிறுநீரக நோய்க்கான சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் மணலாறு பிரதேச வைத்தியசாலையில் 30 கோடி ரூபா செலவில் சிறுநீரக நோய்க்கான சிகிச்சை நிலையம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கத்தால் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப் பட்டது. பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜயதிலக்க உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## சு.கவின் மே தினக் கூட்டத்துக்கு மஹிந்த, சந்திரிகாவுக்கும் அழைப்பு!

கொழும்பு, ஏப்.23

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியால் கண்டி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தின கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



கட்சி உறுப்பினர்களின் விருப்பத்துக்கு அமைய இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மே தின பேரணி அரசியல் நோக்கத்துக்காக மாத்திரம் மேற்கொள்ளப்படும் ஒன்றாகும். தொழிலாளர்களுக்காக நடத்தப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் முன்னாள் தலைவர், யுத்தத்துக்குத் தலைமை வழங்கிய கட்டளை தளபதி என்று மஹிந்தராஜபக்ஷவுக்குக் கட்சியில் பலத்த வரவேற்பு உள்ளது என்று முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# வவுனியா புதிய பஸ் நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்குக!


## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

வவுனியா, ஏப்.23

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்தை மீண்டும் பயன்படுத்தும் வகையில் மத்திய மற்றும் மாகாண போக்குவரத்து அமைச்சுக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய பஸ் நிலையத்தை மக்கள் பாவனைக்குப் பயன்படுத்துவது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா யாழ். வீதியில் 19 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியில் புதிய பஸ் நிலையம் கடந்த ஜனவரி மாதம் மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.



எனினும், தனியார் போக்குவரத்துசபைக்கும், இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் இடையில் இடம்பெற்ற முரண்பாடு காரணமாக புதிய பஸ் நிலையம் கடந்த மூன்று மாதங்களாகச் செயற்படாமல் உள்ளது.

இந்த புதிய பஸ் நிலையம் கடந்த 3 மாதங்களாக செயற்பாடாதமை தொடர்பாக இளைஞர் குழுவொன்றுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது செயற்படாமலுள்ள புதிய பஸ் நிலையத்தை மீள ஆரம்பிப்பதற்கான பணிகளை மத்திய மற்றும் மாகாண போக்குவரத்து அமைச்சுக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தியுள்ளார். (ஐ-100)

# கூட்டமைப்பின் தலைமைப் பாத்திரங்கள் வவுனியாக் கூட்டத்தைப் புறக்கணித்தனர்

## சம்பந்தன், சுமந்திரன், சேனாதிராசா, செல்வம் வரவில்லை

(எஸ்.நிதர்ஷன்)

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற அரசியல் கலந்துரையா டலைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைமைப் பாத்திரம் வகிப்பவர்கள் என்று கூறப்படும் 4'S'கள் புறக்கணித்தமை தொடர்பாகக் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. அந்தக் கூட்டத்தில் அவர்கள் பங்குபற்றா மையால் அங்கு அவர்கள் மீது அதிக விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டன.

'தடுமாறும் தமிழ்த் தலைவர் களால் தள்ளாடுகின்றார்களா தமிழ் மக்கள்? அடுத்தது என்ன?' - என்ற தலைப்பில் மன்னார் பொது அமைப்புக் களின் ஒன்றியத்தினால் ஏற் பாடு செய்யப்பட்ட கலந்துரை யாடல் நேற்றுக் காலை வவு னியா நகர விருந்தினர் விடுதி யில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக் குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரு மான செல்வம் அடைக்கல நாதன், கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், மாவை.சோ.சேனாதி ராசா ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

கலந்துரையாடலில் கட்டா யம் பங்குபற்றுவார்கள் என அவர்கள் முன்னரே அறிவித் திருந்தார்கள் என்றும், இறுதி நேரத்தில் அவர்கள் வருகை தரவில்லை எனவும், நிகழ்வு ஏற்பாட்டாளர்களால் தெரிவிக் கப்பட்டது. அவர்களின் இத்த கைய செயற்பாடு தொடர்பாக, அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர் கள் கடும் அதிருப்தி வெளியிட்ட னர்.

மக்கள் முன் தோன்ற முடி யாத அவர்கள் மக்களுக்காக எப்படிக் குரல் கொடுக்க முடியும் எனவும் அவர்கள் கேள்வி எழுப் பினர். அவர்கள் செயல் தொடர் பாகக் கூட்டமைப்பின் பங்கா ளிக் கட்சிகளும் கடும் அதிருப்தி வெளியிட்டன. (ம-100)



காரைநகர் கமநல சேவை நிலையத்தில், நஞ்சற்ற விவசாய விளைபொருட்கள் மற்றும் மகளிர் கைவினைப் பொருட்களின் உள்ளூர் உற்பத்திக் காட்சிப்படுத்தல் சந்தை, கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது, காரை. மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் மங்கல விளக்கு ஏற்றுவதையும் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம். (ம)

## வடமராட்சி - துன்னாலையில்

# கோஷ்டி மோதலில் ஈடுபட்டவர்களை கைதுசெய்து ஆஜர்ப்படுத்த உத்தரவு!

நெல்லியடி, ஏப்.23

வடமராட்சி - துன்னாலை யில் கோஷ்டி மோதலில் ஈடுபட்ட அனைவரையும் உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றில் முற் படுத்துங்கள் எனப் பருத்தித் துறை நீதிவான் நளினி கந்த சாமி நெல்லியடிப் பொலிஸா ருக்கு உத்தரவிட்டுள்ளார்.

துன்னாலை கிழக்கு வேம் படிப் பகுதியில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பு பின்னர் பெரும் கோஷ்டி மோதலாக மாறியது. இரு தரப்பினரும் கூரிய ஆயுதங்கள், கொட்டன் கள் கொண்டு தாக்கிக் கொண் டனர். போத்தல்களும் வீசப்பட் டன.

இதில், இரு சிறுவர்கள் உட் பட ஆறுபேர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

நெல்லியடிப் பொலிஸாரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போகவே, ஏனைய பொலிஸ் நிலையங்களில் இருந்தும் மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

இந்த நிலையிலேயே, மோத லுக்குக் காரணமானவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் படுத்தப் பொலிஸாருக்கு உத்தர விடப்பட்டது.

எனினும், நேற்றிரவு வரை பொலிஸாரால் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரி விக்கப்பட்டது. (ம-40)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு எச்சரிக்கை

# 80 வீத வரவை உறுதிப்படுத்தாவிடின் மகாபொல புலமைப் பரிசில் இரத்து

இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் 80 வீத வரவை உறுதிப்படுத்தாவிட்டால் அவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் உதவித் தொகையை இரத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான்த சில்வா தெரிவித்தார்.

அரசால் வழங்கப்படும் புலமைப் பரிசிலைப் பெறும் மாணவர்கள் பின்பற்ற வேண் டிய சட்ட விதிமுறைகள் காணப் படுகின்றன. இந்த சட்ட விதி முறைகளுக்கு உடன்பட்டு நடந் தாலேயே அந்நிதியத்தின் உதவியைப் பெற மாணவர்கள் தகுதி பெறுகின்றனர்.

இதில் பிரதான அம்சம், உதவி பெறும் சகல மாணவர் களும் 80 வீதம் விரிவுரைகளுக் குச் சமுகமளித்தல் வேண்டும் என்பதாகும். அனேகமான மாண வர்கள் இதனை முறையாகக் கடைபிடிக்காமல் உள்ளனர். அது தொடர்பாக முறைப்பாடு கள் வந்துள்ளன. இதனை யடுத்து குறித்த மாணவர்களின் புலமைப் பரிசிலை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வின் தலைவர் மேலும் கூறி னார்.

அரச பல்கலைக்கழகங் களில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் மாணவர் கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா மகாபொல புலமைப் பரிசிலாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### அரசமைப்பு கருத்தரங்கு

யாழ். முகாமையாளர்சம்மே ளனத்தின் ஏற்பாட்டில் 'புதிய அரசமைப்பும் தற்போதைய சூழ் நிலையும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நல்லூர் கமத் தொழில் சேவைகள் நிலைய ஒழுங்கையில் உள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இன்று மாலை 5 மணிதொடக்கம் நடைபெறவிருக்கின்றது.

அரசமைப்பு மறுசீரமைப் புத் தொடர்பான மக்கள் கருத் தறியும் குழுவின் தலைவர் சட் டத்தரணி லால் விஜேநாயக்கா இந்நிகழ்வில் கருத்துரை வழங் குவார். (உ)

# கால் சறுக்கி குளத்தில் வீழ்ந்த சிறுவன் பரிதாபகரமாக மரணம்

## கனகராயன்குளத்தில் சம்பவம்

கிளிநொச்சி, ஏப்.23

கனகராயன்குளம் - குறிசுட்ட குளம் பகுதியில் அணைக்கட்டு வழியாக நடந்து சென்ற சிறுவன் ஒருவன் கால் சறுக்கி குளத்தில் வீழ்ந்து உயிரிழந்தான்.

நேற்று இடம்பெற்ற இச்சம் பவத்தில் கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் குறிசுட்ட குளம் கிராமத்தைச் சேர்ந்த பாலசந்திரன் கவிப்பிரியன் (வயது 10) என்ற சிறுவனே உயி ரிழந்தான்.

இந்தச் சிறுவன் அப்பகுதி யில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு அணைக்கட்டு வழியாக நடந்து சென்றபோது சறுக்கிக் குளத்தில் வீழ்ந்தான். அவனை மீட்பதற்கு அங்கு யாருமே இல்லாத நிலை யில், அவனுடன் சென்ற சிறுவர் கள் கிராமத்திற்கு ஓடிச் சென்று தகவலைத் தெரிவித்தனர். கிரா மத்தவர்கள் குளத்திற்குச் சென்று சிறுவனை மீட்டபோது அவன் உயிரிழந்தமை தெரிய வந்தது.

மேற்படி சம்பவம் தொடர்பா கக் கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங் கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் பிரேத பரி சோதனைக்காக ஒப்படைத்துள் ளனர். (ம)

# பொலிஸ் அதிகாரிகள் நால்வருக்கு இடமாற்றம்

பொலிஸ் அதிகாரிகள் நால் வருக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் அறி வித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பரிந் துரைக்கமைய பொலிஸ் ஆணைக்குழுவினால் இந்த இடமாற்றங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன எனவும் தலைமை யகம் தெரிவித்துள்ளது.

சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் ஆர். டீ.எம். சிறில், மட்டக்களப்பு வல யத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் ஏ.ஏ. வஹீட், மாத்தறை வலயத்தில் கடமை யாற்றிய இன்ஸ்பெக்டர் டப்ளியூ. பி.ஏ. சனத்குமார, இன்ஸ்பெக்டர் யூ.ஜி. ஜயவிக்ரம ஆகியோ ருக்கே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)

# கிளிநொச்சி - இரத்தினபுரத்தில் நேற்றிரவு விபத்து; ஒருவர் பலி!



கிளிநொச்சி, ஏப்.23

கிளிநொச்சி இரத்தினபுரம் சந்திக்கு சமீபமாக நேற்றிரவு 9.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஆண் ஒருவர் பலியா னார். மோட்டார் சைக்கிளும் உழவு இயந்திரமும் மோதி விபத் தில் சிக்கியதில் மோட்டார் சைக் கிளில் சென்றவரே பலியானார்.

இரத்தினபுரம் சந்திக்கு அருகாமையில் உள்ள வாகன திருத்தகத்தில் இருந்து திருவை யாறு நோக்கிச் செல்ல முற்பட்ட உழவு இயந்திரத்துடன் திருவை யாறு பக்கத்தில் இருந்து கிளி நொச்சி நோக்கிச் சென்ற மோட் டார் சைக்கிள் மோதியது.

இதனால் மோட்டார் சைக் கிளைச் செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே பலியா னார். அவர் நேற்றிரவு வரை அடையாளம் காணப்பட வில்லை. அவரது சடலம் கிளி நொச்சி மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந் தது.

மேற்படி விபத்துத் தொடர் பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# வவுனியாவில் நேற்று விபத்து பெண், முதியவர் படுகாயம்

வவுனியா கண்டி வீதியில் நேற்றுப் பகல் இடம்பெற்ற விபத்து ஒன்றில் பெண் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந் தனர். அவர்கள் இருவரும் சிகிச் சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

வவுனியா இலங்கை போக் குவரத்துச்சபையின் சாலைக்கு முன்பாக இருந்து வீதியின் மறு பக்கத்திற்குச் செல்ல முற்பட்ட முதியவர் மீது கண்டி வீதியூடாக வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத் துக்குள்ளானது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய பெண் மற்றும் முதியவர் ஆகியோர் படு காயமடைந்தனர். இச் சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (ம)

### புத்தாண்டு விளையாட்டு

மூளாய் கிழக்கு ஒளி சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில், புதுவருட விளையாட்டுப் போட்டி நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் சி.மு.பரமலிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ளது. இதன் போது இளைஞர், யுவதிகள் பங்குபற்றும் விளையாட்டு நிகழ் வுகள் இடம்பெறும். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## புறமொதுக்கப்படும் இணையம்

அரசியலிலும் சரி, பிற விடயங்களிலும் சரி, ஒரு பண்பியல்பு நம் மத்தியில் இப்போது தென்படுகிறது.

பெரும் யுத்த வேளையிலும், மோசமான நெருக்கடி சமயத்திலும், இக்கட்டுகளுக்கு மத்தியிலும், இந்த மண்ணில் நின்று பிடித்து, இந்த மண்ணுக்காக உயிராபத்துக்கு நடுவிலும் பணியாற்றிய சேவையாளர்களைத் துச்சமென நினைத்துப் புறம் ஒதுக்கும் பண்பியல்புதான் அது.

நெருக்கடி காலத்தில் இந்த மண்ணை நினைத்துப் பாராத - இந்தப் பக்கமே தலை காட்டாத - தரப்புகளை மட்டும் தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடும் ஒரு செயற்போக்கு நம் மத்தியில் வேகமாகப் பற்றி வருவதைக் காணமுடிகிறது.

சமூக விடயங்களாயினும் சரி, பொது விவகாரங்களாயினும் சரி, அரசியலானாலும் சரி, இக்கட்டுக் காலத்தில் இந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்காமல் - இந்த மக்களையும் இந்தப் பிரதேசத்தையும் பற்றிக் கவலைப்படாமல் - தம் நலத்திலும், தமது தனிப்பட்ட வாழ்விலும் இமயங்களைத் தொடுவதற்காக வாழ்ந்தவர்களை, இப்போது இந்த மண்ணுக்குப் பல்வேறு விடயங்களிலும் தலைமை தாங்குவதற்கான விசேட தகைமையாளர்களாக நோக்கும் ஒவ்வாத போக்குத்தான் அது.

அதாவது, யுத்த - நெருக்கடி - காலத்தில் இந்த மண் பற்றிக் கவலைப்படாமல் - அலட்டிக் கொள்ளாமல் - இருந்தமை இப்போது இந்த மக்களைத் தலைமை தாங்கி வழிநடத்துவதற்கான தனித்துவமான தகைமையாக - Qualification ஆக - நமது சமூகம் நோக்கும் நிலைமை வந்து விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

யுத்த காலத்தில் நமது ஒட்டுமொத்தத் தமிழ் மண்ணே விடுதலைப் போராட்டத்துடன் - அதற்கு ஆதரவாக - நின்றது. அதனால் இப்போது புதிதாக வருபவர்கள் "நாங்கள் அந்த விடுதலைப் போராட்டத்துடனோ - அதை முன்னெடுத்த புலிகளுடனோ - தொடர்புபட்டவர்கள் அல்லர்; அதற்கு ஆதரவாளர்களாகச் செயற்பட்டவர்களும் அல்லர்" - என்று தமது தகுதியைச் சொல்லாமல் சொல்லி, முன்நிறுத்தும் போக்கு இங்கு கட்டவிழ்கின்றது.

நமது சமூகம் தன்னுடைய தற்போதைய செயற்போக்குப் பண்பியல்பினால், விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும், அவர்களுக்காகக் குரல் எழுப்பியவர்களையும் மட்டும் இன்று புறம் ஒதுக்கவில்லை; புலிகளின் காலத்தில் விடுதலைப் போராட்ட மண்ணில் நின்று பிடித்தவர்களைக் கூட அந்தக் காரணத்தினால் புறம் ஒதுக்குகின்றதோ என்று எண்ணக் கூடிய வகையில்தான் இங்கு விடயங்கள் அரங்கேறுகின்றன.

'தகுதிக்கும் திறமைக்கும்தான் முதன்மை; இங்கு நின்று தாக்குப் பிடித்த அனுபவத்துக்கு அல்ல' - என்ற அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுமானால் அது தவறில்லைதான். ஆனால், காரியங்கள் அப்படியும் நடப்பதில்லை. இந்த மண்ணுடனும், மக்களுடனும், அவர்களின் மேன்மையான போராட்டத்துடனும் இயைந்து நின்றமை தகுதியீனமாகக் கருதப்படும் நிலைமைதான் உண்மையில் இங்கு காணப்படுகின்றதோ என்று எண்ண வேண்டி உள்ளது.

பெயர்களை நாம் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. நமது அரசியலில் - நமது தமிழ் மக்களின் தெரிவும், தெளிவும் - அதையே புட்டுப்போட்டுக் காட்டுகின்றன. அனந்தி சசிதரன் போல ஒரு சில புறநடைகள் இருக்கக் கூடும். அவ்வளவே.

சுமார் இருபது ஆண்டுகால யுத்த நெருக்கடி சமயத்தில் இந்த மண்ணில் குறிப்பிடத்தக்களவு துணிச்சலோடும், அரசியல் பக்கச் சார்பின்றியும் செயற்பட்ட ஒரு சிவில் கட்டமைப்பு இருந்தது. அது யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

இந்தத் தலைமுறைக்குச் சில சமயம் அந்த இணையத்தின் உன்னத சேவை - மாண்பு - தெரியாமல் இருக்கலாம். ஆனால், ஆயுதங்களுடன் மிக மோசமாக மோதிக் கொண்டிருந்த இரண்டு தரப்புகளுக்கு மத்தியில் - பக்கம் சாராமல் - அதேநேரம் நமது தமிழ் மக்களின் அன்றாட அவலங்களைத் தீர்ப்பதற்காக அந்த அமைப்புத் துணிச்சலுடன் ஆற்றிய பணி அளப்பரியது; விதந்து போற்றத் தக்கது.

யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கு மட்டுமல்ல, ஐ.நா. முகவர் அமைப்புகள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்ற சர்வதேசக் கட்டமைப்புகள், இராஜதந்திர வட்டாரங்கள் போன்ற அனைத்துப் பக்கத்தினருக்கும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இந்தக் கால் நூற்றாண்டு காலத்தில் ஆற்றிய அரும்பணி - வியத்தகு சேவை - நன்கு தெரியும்.

ஆனால், அந்த இணையம் இன்று இதே தரப்புகளால் எவ்வாறு புறம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இன்றைய எமது நாளிதழின் பிறிதொரு பக்கத்தில் அந்த அமைப்பே விசனத்துடன் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

யுத்த காலத்தில் தனித்து நின்று பிடித்து, துணிச்சலாகப் பணியாற்றிய ஒரு சிவில் கட்டமைப்பு அரசினாலும், இராஜதந்திர வட்டாரங்களினாலும், ஐ.நா. முகவர் அமைப்புகளினாலும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்ற சர்வதேச அமைப்புகளினாலும் மட்டுமல்ல, நமது மக்களினாலும், அரசியல் தலைமைகளினாலும் கூட புறம் ஒதுக்கப்படுகின்றமை மிக மோசமான அநீதியாகும்.

பாதிக்கப்பட்ட நமது சமூகத்தின் மீள்கட்டுமானத்துக்கும், நிலைத்த சமாதானத்துக்கும், மீள் நல்லிணக்கத்துக்கும், நிலைமாறு கால நீதி நிலை நாட்டப்படுவதற்கும் இத்தகைய உண்மையான - நேர்மையாகவும், நீதியாகவும், பக்கச் சார்பின்றியும் பணியாற்றிய - அமைப்புகளை உள்வாங்கி சமூகம் சரிவரப் பயன்படுத்திக் கொள்வது மிகமிக அவசியமாகும். அது முகிழ்த்து வீச்சோடு எழுவது எப்போது...?

# 2020 இல் ஆட்சியைக் கைப்பற்றுவது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்

### அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவைத் தோற்கடிக்க நாம் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. 2020 இல் எவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் என்ற வகையில் நாம் சிந்திக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இரண்டு கட்சிகளின் ஊடாக தேசிய அரசு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தலின் போது தற்போது இருக்கும் ஜனாதிபதிக்காக நாம் பணியாற்றவில்லை. அவரைத் தோல்வியடையச் செய்யவே நாம் செயற்பட்டோம் என்பது அனைவருக்கும் தெரியும்.

மஹிந்த ராஜபக்ஷவுக்காக நாம் செயற்பட்டோம். ஆனால், எம்மால் வெற்றிபெற முடியாமல் போனது. இரண்டாவது முறை மேலும் 11 லட்சம் வாக்குகளால் நாம் தோல்வியடைந்தோம்.

இவ்வாறாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் என்ற முறையில் இரண்டு தேர்தல்களில் தோல்வியடைந்தோம் என்பதை மனதில் கொண்டே நாம் செயற்பட வேண்டும்.

நாம் தோல்வியடைந்தமை சிலருக்கு மறந்துபோயுள்ளது. ஏன் தோற்றோம் என்பதை ஆராய வேண்டும். ஆனால், அதைக் கூட இன்னும் ஆராயவில்லை.

இவ்வாறான நிலையில், அடுத்து எவ்வாறு வெற்றி பெறுவது என்பதை சிந்திக்க வேண்டும். அதற்கு ஒரு முறைமை உள்ளது. குறுகிய பாதை எமக்கு இல்லை. அரசமைப்பும் சட்டமும் உள்ளது.

இவற்றுக்கு அப்பால் சென்று எம்மால் செயற்பட முடியாது. 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய, ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பன 2020 ஆம் ஆண்டிலேயே நடைபெறும்.

அதுவரை நாம் பொறுத்திருக்க வேண்டும். 2020 இல் எவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது குறித்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் என்ற வகையில் நாம் சிந்திக்க வேண்டும். - என்றார். (ஐ)

# அரசமைப்பு மறுசீரமைப்பு தெளிவூட்டல் மக்களுக்கு!

### நடவடிக்கை ஆரம்பம் என்கிறார் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர்

கொழும்பு, ஏப். 23

அரசமைப்பு மறுசீரமைப்புத் தொடர்பாகப் பொது மக்களிடையே நிலவும் விளக்கமின்மை குறித்து மக்கள் சபை ஊடாகத் தெளிவூட்டல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் தெளிவூட்டல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பாக மக்கள் கருத்துறியும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு தொடர்பில் பொது மக்களிடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைக்கின்றன.

சமயத்துக்கு வழங்கப்படும் முன்னுரிமை வழங்கப்படுமா? நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுமா? ஆட்சி முறைமை எவ்வாறானது என்பது குறித்தே பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் என்று லால் விஜேநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மாகாண அதிகாரம் தொடர்பில் முதலமைச்சர்கள் தீர்மானம்

### விரைவில் நிறைவேற்றப்படும் என கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசு பறிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, முதலமைச்சர்கள் அனைவரும் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதனைத் தெரிவித்துள்ளார்.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டுச் சரிவு தொடர்பில் மத்திய அரசின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

இந்த நிலையில், மாகாண சபையின் அதிகாரங்களை பறிக்க முயற்சிப்பது எந்த வகையில் நியாயமானது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாகாண அரசின் அதிகாரத்தைப் பறித்தெடுக்கும் மத்திய அரசின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளைமறுதினம் 25 ஆம் திகதி மாகாண சபையில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது என்றும் கிழக்கு முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# டெங்கு தடுப்பூசி பிரான்ஸில் இருந்து இறக்குமதி

பிரான்ஸில் இருந்து இலங்கைக்கு டெங்கு நோய்த் தடுப்பூசி இறக்குமதி செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயாளர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட இந்தத்தடுப்பூசி, உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியுடன் இறக்குமதி செய்யப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசியை, இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பாக, இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவருடன் முன்னதாகவே கலந்துரையாடியுள்ளார் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அத்துடன், பிரான்ஸ் நாட்டின் உற்பத்தியான இந்தத் தடுப்பூசியை பரிசோதனை செய்த பின்னர், அதுகுறித்த அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் சர்ஜிகல் பெல்ட்டுகளைகொள்வனவு செய்ததில் சுகாதார அமைச்சுக்கு 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று அரச மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறைந்த விலைகளை முன்வைத்திருந்த விநியோகத்தர்களிடம் சர்ஜிகல் பெல்ட்டுகளை கொள்வனவு செய்யாது அதிக விலைகளை முன்வைத்த விநியோகத்தர்களிடம் கொள்வனவு செய்தமையே இந்த நஷ்டத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



விபத்தற்ற பயணமே
விருப்பத்துக்குரிய பயணம்!
இளைஞனே!
மோட்டார் சைக்கிளில் சாகசம் காட்ட முயல வேண்டாம்!
அடுத்தவன் வீட்டை சாவீடாக ஆக்க வேண்டாம்!!
சாரதிமாரே! உங்களுக்கும் பிறருக்கும் ஏற்படும் ஆபத்துகள் பற்றிச் சிந்தியுங்கள்!!
தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

24.04.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ. 10.13 வரை
திதி: திரயோதசி மு.இ. 10.09 வரை

சுபநேரம் : 12.00 - 1.30 வரை
இராகுகாலம்: 7.30 - 9.00 வரை

# கிளிநொச்சிக் குளத்தை விட ஆழமாக உள்ளது வாய்க்கால்!

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள குளத்தின் நீர் வெளியேறும் வாய்க்கால் ஆழமாகவும் குளம் ஆழம் குறைந்தும் இருப்பதால் துருசு திறக்கப்படும் போது முழுநீரும் வெளியேறும் அபாயம் உள்ளது.

இந்த நிலையில் குளத்தில் மணல் மற்றும் மண் படிமங்களை அகற்றி மூன்று அடியாக ஆழப்படுத்தப்படவேண்டும்.

இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. அந்தச் சம்மேளனம் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-




கிளிநொச்சி குளம் இரணைமடு நீரை உள் வாங்கி வெளியனுப்பும் குளமாகவும், கனகாம்பிகைக் குளத்தின் வான் நீரையும், ஏனைய பிரதேசத்து மழை நீரையும் உள்ளீர்த்து வெளியனுப்பும் குளமாகவும் காணப்படுகிறது. கூடுதல் காலத்துக்கு நீரைப் பெறும் குளமாகவும் இது இருக்கிறது.

இந்த நிலையில், குளத்தின் துருசைத் திறந்து விட்டால் முழு நீரும் வெளியேறிவிடும். இதற்குக் காரணம் குளம் மண் நிரம்பி திட்டாக உள்ளமையே. இதனால் நகர் மற்றும் புறநகர் பகுதி கிணறுகளின் நீர் மட்டம் குறைவடைகிறது.

எனவே, குளத்தைத் துருசு மட்டத்திலிருந்து மூன்று அடிக்கு ஆழப்படுத்தித் தருமாறு கோருகின்றோம் என்று அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கேட்டபோது, இது தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாகக் குளம் சீர் செய்யப்படாமையால் மண் படிந்து துருசு மட்டத்தை விட உயர்ந்து காணப்படுகிறது. எனவே, குளம் ஆழப்படுத்த வேண்டிய பணி கட்டாயம்செய்யப்படவேண்டியது. அதனை எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டும். அதற்கான நிதியீட்டங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றோம்.- என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-70)

# திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கு மத்திய அதிகார சபைக்கு அதிகாரம்!

## வழங்குமாறு பணித்துள்ளார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப்.23

நாட்டில் நிலவும் திண்மக் கழிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிக்குமாறும் இந்த விடயத்தில் மத்திய அதிகார சபைக்கு அதிகாரத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

அனர்த்தத்துக்கு உள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

மீதொட்டமுல்லை குப்பைமேடு சரிந்து விழுந்ததன் காரணமாக அனர்த்தத்துக்கு உள்ளான மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டம் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது.


இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும்வரை ஒவ்வொரு வாரமும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.



அந்த வகையில், இந்தக் கலந்துரையாடல் அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில்பிரேமஜயந்த, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மஹிந்த சமரசிங்க, பைஸர் முஸ்தபா, சாகல ரத்னாயக்க, வஜிர அபேவர்தன, ஏ.எச்.எம்.பௌசி, மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# நாளை மின்தடை



யாழ்ப்பாணம், ஏப்.23

நாளை திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5.30 மணிவரை **மன்னார் பிரதேசத்தில்** கொன்னையன் குடியிருப்பு, எருக்கலம்பிட்டி பிரதேசம், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)


# நொதேண் சென்றல் வைத்தியசாலை

உலகத்தரம் வாய்ந்த எலும்பியல் சத்திர சிகிச்சைப்பிரிவு

நீங்கள் மூட்டுக்களில் நோவு, இறுக்கம், வீக்கம் போன்ற உபாதைகளால் அவதிப்படுகிறீர்களா?

தகுந்த வைத்திய ஆலோசனைகளின் பின்னர் காலதாமதமின்றி உங்களுக்கு ஏற்ற நேரத்தில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.

உலகத்தரம் வாய்ந்த எலும்பியல் சத்திர சிகிச்சைகள் உங்கள் காலடியில்!

- நொதேண் சென்றல் வைத்தியசாலையில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய எலும்பியல் சத்திர சிகிச்சைக்கூடங்கள்
- அனைத்து வகையான எலும்பியல் பிரச்சனைகளுக்குமான ஆலோசனைகளும் சிகிச்சைகளும்




- Total Knee replacement (TKR)
- Total Hip replacement (THR)
- Open reduction internal fixation (ORIF- plates and screws)
- Dynamic hip screw fixation (DHS)
- Proximal femoral nailing (PFN)
- External fixation
- Austin moor prosthesis of hip (AMH)
- Anterior cervical decompression and fusion (ACDF)
- Lumbar microdectomy and screw fixation
- L4-L5 microdissectomy
- Intramedullary nailing
- Arthroscopy

நரம்பியல் சிகிச்சைப்பிரிவு

- பாரிசவாதம், பார்க்கின்சன் நோய், தலைவலி, நித்திரைக் கோளாறுகள், வலிப்பு நோய், கை,கால் மற்றும் இடுப்பு வலி, விறைப்பு போன்ற அனைத்து நரம்பியல் உபாதைகளுக்கும் வடக்கின் முன்னணி விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை மற்றும் சிகிச்சைகள்
- காலதாமதமின்றி நரம்பியல் சத்திர சிகிச்சைகளையும் மேற்கொள்ளமுடியும்
- அனைத்து நோய்களையும் துல்லியமாகக் கண்டறியும் தொழில்நுட்பங்கள்
  - MRI and CT SCAN
  - Electroencephalogram (EEG)
  - Sleep lab
  - Electromyography (EMG)
  - Nerve Conduction Studies (NCS)




<u>இரத்த சுத்திகரிப்புச் சேவை (Dialysis)</u>

நீங்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இரத்த சுத்திகரிப்புச் சேவையை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கிறீர்களா?
கவலை வேண்டாம்
நொதேர்ன் சென்ட்ரல் வைத்தியசாலை கொழும்பு வெஸ்டேர்ன் வைத்தியசாலையுடன் இணைந்து இரத்த சுத்திகரிப்புச் சேவையை யாழ் மாவட்டத்திலேயே, குறைந்த செலவு, சிறந்த தரம், மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் நடாத்தி வருகிறது
உங்கள் வசதிகளுக்கேற்ப முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**Northern Central Hospital**
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677
e-mail:nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com

# அரசியல்வாதிகளின் அடிமைகளாக மாறியிருக்கின்றனர் இளைஞர்கள்

## மஸ்தான் எம்.பி.கவலை

வவுனியா, ஏப்.23

இன்றைய இளைஞர்களில் பலர் அரசியல்வாதிகளின் அடிமைகளாக மாறி போலி முக நூல்களை உருவாக்கி அவர்களுக்காக ஏனைய அரசியல்வாதிகளை விமர்சிக்கத் தொடங்கியிருக்கின்றனர். உண்மையிலே அவ்வாறு செயற்படும் இளைஞர்களுக்கு தைரியம் இருந்தால் தங்களது சொந்த முகநூல்கள் மூலமாக விமர்சிக்க வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலை வருமான கே.காதர் மஸ்தான், தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட இளைஞர்கள் சேவை மன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இளைஞர் கழக சம்மேளனக் காரியாலயத் திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இளைஞர்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியை நல்லாட்சியாக்கினாலும், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களாகக் கடந்த அரசிலும் பல்வேறான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். எனினும் இளைஞர்களால் அவ்வாறானவர்களை வீட்டுக்கு அனுப்ப முடியும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் இளைஞர்களது திறமைகள் ஒருபுறம் வெளிப்பட்டாலும், மறுபுறம் அவர்களைப் பிழையாக வழிநடத்திச்செல்லும் செய்திகளையே நாம் அதிகமாகக் காண்கிறோம்.

உதாரணமாக சமூக ஊடகங்களை இளைஞர்கள் கையாளும் விதம் மிகவும் பயங்கரமானதும் கோழைத்தனமானதுமாகக் காணப்படுகிறது. சிலர் பாலியல் ரீதியாகவும், சிலர் அரசியல் ரீதியாகவும் அடிமையாக்கப்பட்டுள்ளனர். எனினும், சிலரே நாட்டினதும், சமூகத்தினதும், அபிவிருத்தி தொடர்பாகவும் நல்ல விடயங்களுக்காக இவ்வூடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள இளைஞர்கள் சில அரசியல்வாதிகளின் அடிமைகளாக போலி முகநூல்களை உருவாக்கி அவர்களுக்காக ஏனைய அரசியல்வாதிகளை விமர்சிக்கத் தொடங்குகின்றனர்.

உண்மையிலே அவ்வாறு செயற்படும் இளைஞர்களுக்கு தைரியம் இருந்தால் தங்களது சொந்த முகநூல்கள் மூலமாக விமர்சிக்க வேண்டும். அல்லது நேரில் சென்று அவர்கள் இழைக்கும் தவறுகளை குறித்த அரசியல்வாதிகளிடம் சுட்டிக் காட்ட வேண்டும். இதுவே அரசில்வாதிகளை அணுகும் அல்லது தவறுகளைச் சுட்டிக் காட்டும் முறையாகும்.

அதை விடுத்து பணத்திற்கு விலை போகும் இளைஞர்களாக மாற்றமடைவது சிறந்ததாக அமையாது.

தொழில்நுட்பம் ஊடாகத் தங்களது திறமைகளைச் சரியான முறையில் வெளிக்கொணரும் இளைஞர்களுக்கு நிச்சயமாக சமூகத்தில் அங்கீகாரமும் அதற்கான பிரதிபலனும் கிடைக்கும்.- என்றார்.

(ம-100)

## நிழற்குடை அமைக்குமாறு கோரிக்கை

புதுக்குடியிருப்பு - கைவேலிச் சந்தியில் பயணிகளுக்கான நிழற் குடையின்றி, தங்கள் பயணத்தை மேற்கொள்ள வருபவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

வீதியின் இரு மருங்கிலும் நிழற்குடைகள் இல்லாதமையால் மதிய வேளைகளில் வேலியோர மரநிழல்களிலும் ஒதுக்குப்புறமாக நிற்பதாலும் பயணத்தை மேற்கோள்ள வரும் பயணிகள் தமக்கான பேருந்துகளைத் தவறவிடுகின்றனர்.

கைவேலிவாழ் மக்களும் மற்றும் திம்பிலி குடியேற்றத் திட்டத்தில் வசிப்பவர்களும் பிரதான சந்தியில் நின்றே தங்கள் பயணத்தை மேற்கொள்கின்றமையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து செயற்பட வேண்டும் என்று கைவேலி வாழ் மக்கள் கேட்டுள்ளனர்.





ஐக்கிய இராச்சியத்தில் இயங்கிவரும் சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தினரால் ஒவ்வொன்றும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஏழு பிறேயில் எழுது கருவிகள் சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் இயங்கி வரும் வாழ்வக நிறுவனத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன. இவை அண்மையில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனால் வாழ்வக நிறுவனத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

# மோட்டார் சைக்கிளில் வந்தோரால் கடத்தப்பட்டார் 15 வயதுச் சிறுமி!

## கிளிநொச்சி பிரமந்தனாறில் சம்பவம்

கிளிநொச்சி, ஏப்.23

கிளிநொச்சி பிரமந்தனாறில் வசிக்கும் 15 வயதுச் சிறுமி ஒருவர் மோட்டார் சைக்கிள்களில் வந்தோரால் கதறக் கதறக் கடத்திச் செல்லப்பட்டார். கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உருத்திரபுரம் மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிலும் சிறுமியே கடத்தப்பட்டவராவார்.

மேற்படி சைவச் சிறுவர் இல்லத்தில் இருந்து விடுமுறையில் வீட்டுக்குச் சென்ற சிறுமி சம்பவதினம் காலை 10 மணியளவில் வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள்களில் அங்கு சென்ற 13 பேர் வரையானோர் சிறுமியை இழுத்து ஏற்றிச்சென்றனர் எனக்கூறப்படுகின்றது.

அங்கு சென்றவர்கள் தங்கள் முகங்களைக் கறுப்புத் துணிகளால் மறைத்திருந்தனர் எனவும் இதனால் அவர்களை அடையாளம் காண முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


சிறுமி கடத்தப்பட்டமை தொடர்பாக தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லை எனச் சிறுமியின் தாய் தெரிவித்தார்.

சிறுமி தொடர்பாகத் தகவல் தெரிந்தவர்கள் தனது 077537 6875 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தாருங்கள் எனவும் தாயார் உருக்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

# நீண்ட கால சுகாதாரத் திட்டத்தைத் தயாரித்த ஒரே மாகாணம் வடக்கு!

## அமைச்சர் சத்தியலிங்கம் பெருமிதம்





இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களின் சுகாதார அமைச்சுக்களில் தனக்கென ஒரு நீண்டகால தந்திரோபாய அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து அதன் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஒரே மாகாண அமைச்சு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு என்பதில் பெருமையடைகின்றேன்.

-இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சத்திரசிகிச்சை பிரிவுக்கான கட்டடத் தொகுதியை கடந்த வியாழக்கிழமை திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கு மாகாண சபை என்ன செய்தது என்று குறைகளை மட்டுமே கூறிவருபவர்களுக்கு ஒன்றைத் திட்டவட்டமாகக் கூறவிரும்புகின்றேன். சுகாதார அமைச்சை நான் பொறுப்பேற்ற பின்னர் நவீன விஞ்ஞான முறையிலான திட்டமிடலை துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடி முன்னெடுத்து வருகிறோம்.

இதற்காக 17 துறைசார் உப குழுக்களை அமைத்து, அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக நீண்டகால தந்திரோபாய திட்டம் ஒன்றையும் தயாரித்துள்ளோம்.

மாகாண சுகாதார அபிவிருத்தி தொர்பாக தயாரிக்கப்பட்ட இந்த மூன்றாண்டு செயற்றிட்டத்தின் அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இன்று இந்த வைத்தியசாலையில் ஒன்றரைக் கோடிரூபா செலவில் சத்திர சிகிச்சை பிரிவுக்கான கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளோம். தற்போது இந்த வைத்திய சாலையில் சிறுநீரக நோய் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மிக விரைவில் அதனையும் மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கவுள்ளோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்தில் ஒரு புனர்வாழ்வு வைத்தியசாலை ஒன்று அமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் கொடிய யுத்தத்தால் அங்கவீனமடைந்த எமது உறவுகள் பயன் பெறமுடியும்.

இதுவும் இலங்கையில் அமைக்கப்படும் முதலாவது நவீன வசதிகளைக் கொண்ட புனர்வாழ்வு வைத்தியசாலையாகும். இதற்கான நிதியுதவி நெதர்லாந்து அரசால் வழங்கப்படவுள்ளது. இங்கு ஹைட்ரோதெறப்பி முறையிலான சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.- என்றார்.

மல்லாவி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ)

# நாட்டில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு அமைந்துவிடக்கூடாது!

## நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 23

புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பு நாட்டில் பிரச்சினைகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்துவிடக் கூடாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு புதிய அரசமைப்பு குறித்து நேற்றைய தினம் கருத்துத் தெரிவிக்கும் பொழுதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்பில் தமிழர் தரப்பைத் தொடர்ந்தும் நிராகரிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படக் கூடாது.



இதேவேளை, புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் சகல மக்களின் பிரதிநிதித்துவமும் பலமடையும் வகையில் பிரதான இரண்டு கட்சிகளும் செயற்பட வேண்டும்.

பிரதான இரண்டு கட்சிகளும் தனித்தனியாக ஆட்சியை நடத்திய போதிலும் அதேபோல் இப்போது இரண்டு கட்சிகளும் இணைந்து கூட்டு ஆட்சியை முன்னெடுத்து வரும் நிலையிலும் தேசிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று இன்னும் எட்டப்படவில்லை.

இப்போது புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் நீண்டகால தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முயற்சித்து வருகின்றது.

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆனால், அவ்வாறு உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு நாட்டின் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்க்கக் கூடிய வகையில் அமையப்பெற வேண்டும்.

மாறாக, பிரச்சினைகளைப் பெரிதாக்கி மீண்டும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது. நாட்டின் தேசிய பிரச்சினைகளைச் சரியான வகையில் கையாள வேண்டும். சிறுபான்மை இனங்களைப் பாதுகாக்கும் வகையில் அமைய வேண்டும்.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தாண்டு சுபநேர விவகாரம்: கலாசார அமைச்சர் நாவின்ன மஹிந்தவுக்கு பகிரங்க சவால்!

கொழும்பு, ஏப். 23

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு, சுதேச விவகார மற்றும் கலாசார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிங்களப் புத்தாண்டு சுப நேரங்களை இழிவுபடுத்தாது சுப நேரங்களில் ஏதேனும் குழப்பங்கள் இருந்தால் அது குறித்து பகிரங்க விவாதம் நடத்தப்பட வேண்டும். குறைகள் இருந்தால் அது தொடர்பில் பகிரங்க விவாதம் நடத்த நாம் தயார்.

சிங்கள புத்தாண்டு சுப நேரங்களை இழிவுபடுத்துவது இந்த நாட்டின் கலாசாரத்தை உதாசீனம் செய்வதாகும்.

புத்தாண்டு சுப நேரங்களை அமைச்சராகிய நானோ அல்லது ஜனாதிபதி, பிரதமரோ தயாரிக்கவில்லை.



கலாசார அமைச்சில் கடமையாற்றிவரும் 30 பேரைக் கொண்ட சிரேஷ்ட ஜோதிடர்களே இந்த நேரங்களைக் கணித்தனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆட்சியில் இருந்த போது அனைத்து சுப நேரங்களும் காலியில் இருந்த சுமணதாச ஜோதிடருக்குத் தேவையான வகையில் கணிக்கப்பட்டன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு தற்போது அது மறந்து போய்விட்டது.

குறுகிய அரசியல் லாபத்தை ஈட்டிக்கொள்ள சிங்கள பௌத்த கலாசாரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம்.- என்றும் அமைச்சர் நாவின்ன, மஹிந்தவிடம் கோரியுள்ளார்.

# பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை ஆண்டு இறுதிக்குள் 600 ஆக உயரும்

கொழும்பு, ஏப். 23

நாட்டின் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதிக்குள் 600 ஆக உயர்த்தப்பட உள்ளது.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது நாட்டின் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 438 ஆகக் காணப்பட்டது.

தற்போது நாட்டின் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 478 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் மேலும் மூன்று பொலிஸ் நிலையங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 25 பொலிஸ் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில வாரங்களில் இந்த பொலிஸ் நிலையங்களும் அங்குரார்ப்பணம் செய்யப்பட உள்ளன.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹல்துமுல்ல, அம்பகஸ்தூவ மற்றும் போகஹாபுர ஆகிய இடங்களில் நேற்று பொலிஸ் நிலையங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

# அம்பாந்தோட்டை துறைமுக திருத்தப்பட்ட உடன்பாட்டு வரைவு அமைச்சரவையில்!

கொழும்பு, ஏப். 23

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடுவது தொடர்பான, திருத்தப்பட்ட உடன்பாட்டு வரைவு, நாளை மறுதினம் (25 ஆம் திகதி) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.




துறைமுகங்கள் அமைச்சு மற்றும் ஏனைய தரப்புகளின் யோசனைகளைக் கருத்தில் கொண்டு உடன்பாட்டு வரைவில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை குத்தகைக்கு விடும் காலத்தை 99 ஆண்டுகளில் இருந்து 50 தொடக்கம் 60 வரையான ஆண்டு காலத்துக்குக் குறைக்கும் வகையிலும், குத்தகைக்காலம் முடிவடைந்த பின்னர் திரும்பக் கையளிக்கும் வகையிலும், குத்தகை உரிமையை, 80 : 20 என்ற விகிதத்தில் இருந்து, 60 : 40 அல்லது 51 : 49 எனக் குறைக்கும் வகையிலும், துறைமுகத்தின் பாதுகாப்புக்கு சிறிலங்காவே பொறுப்பு என்ற வகையிலும் உடன்பாட்டு வரைவில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட உடன்பாட்டு வரைவை சிறப்புத் திட்டங்கள் அமைச்சர் கலாநிதி சாத் அமுனுகம அமைச்சரவையில் முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மஹிந்தவின் பாவத்தின் கடனையும் நாம் செலுத்த வேண்டியுள்ளது!

## கூறுகிறார் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க



கொழும்பு, ஏப். 23

மஹிந்த செய்த பாவத்தின் கடனையும் நாம் செலுத்த வேண்டியுள்ளது என துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதியும் பிரதமரும் அரசை ஒற்றுமையாக முன்நகர்த்திச் செல்கின்றார்கள்.

மஹிந்த செய்த பாவத்தையே நாம் இன்று போக்குகின்றோம். மஹிந்த சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு துறைமுகத்தை அவர்களுக்குக் கொடுக்க முயற்சித்தார்.

என்னாலும் இவற்றிலிருந்து விலகி, சீன நிறுவனத்துடன் கைச்சாத்திட்டு 50 இலட்சம் அல்லது 80 இலட்சத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றிருக்கலாம். அதுவே பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பாகும்.

கடந்த காலத்தில் அமைச்சர்கள் இதனையே செய்தார்கள். அன்று அவர்கள் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் பிரதியின் விளைவையே நாம் தற்காலத்தில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாம் இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம். துறைமுக அதிகார சபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைத்துள்ளோம்.- என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் தடை செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் பறிமுதல்!

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் தடை செய்யப்பட்ட அதிகதிறன் கொண்ட வாகனங்களின் பாவனை தொடர்பில் கடந்த சில நாள்களாகத் தகவல் வெளியாகி இருந்தது.

இந்த நிலையில், பிலியந்தலைப் பிரதேசத்தில் பயணித்த இவ்வாறான அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் அதிகாரியால் அவ்வாறான அதிகதிறன் கொண்ட வாகன இலக்கமற்ற மோட்டார் சைக்கிள் ஒன்று ஓட்டிச் செல்லும் புகைப்படங்கள் சில ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

அண்மையில் வெளியான தகவல்களுக்கு அமைய இந்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாறான மோட்டார் சைக்கிளை பொலிஸார் பரிசோதனை செய்து பறிமுதல் செய்ய அதிக அக்கறை செலுத்துவதில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

பிலியந்தலைப் பிரதேசத்தில் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.



# தொழில்நுட்பக்கதிர்

## விரைவில் அறிமுகமாகின்றது கூகுள் ஏர்த்தின் புதிய பதிப்பு!

Google Earth

கூகுள் நிறுவனத்தால் வழங்கப்படும் கூகுள் ஏர்த் சேவை பற்றி அறிந்திராதவர்கள் அரிது என்றே கூறலாம்.

அந்த அளவிற்கு பயணங்களின் போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.

இச் சேவை அறிமுகம் செய்யப்பட்டு ஏறத்தாழ 15 வருடங்கள் ஆகின்றன.

அதாவது 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி இச் சேவை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வாரம் கூகுள் ஏர்த்தின் இந்தப் புதிய பதிப்பை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் வெளியிடப்படாத நிலையில் Virtual Reality தொழில்நுட்பம் இணைக் கப்படலாம் என நம்பப்படுகின்றது.

## விற்பனைக்கு வரும் Xiaomi Mi 6



பிரபல Xiaomi கைபேசி நிறுவனத்தின் புதிய தயாரிப்பான Xiaomi Mi 6 கைபேசி இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக ஏற்கனவே அறிவித்தது. அந்தத் கைபேசி இம்மாதம் வெளியிடப்படவுள்ளது.

Snapdragon 835 processor- கொண்ட இந்தக் கைபேசி ஆண்ட்ராய்ட் 7.1.1 Nougat இயங்குதளத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், 3000mAh திறன் கொண்ட பற்றரி, மற்றும் 4GB of RAM மற்றும் 64GB மொபைல் மெமரியையும் கொண்டுள்ளது.

இக்கைபேசியின் பின்புறக் கமரா 12MP மற்றும் முன்புறக் கமரா 8MP என்ற அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## HTC அறிமுகப்படுத்தும் புதிய கைபேசி



அப்பிள் மற்றும் சாம்சுங் போன்ற முன்னணி வகிக்கும் ஸ்மார்ட் கைபேசி வடிவமைப்பு நிறுவனங்களுக்கு போட்டியாக சிறந்த கைபேசிகளை HTC நிறுவனம் அறிமுகம் செய்துவருகின்றது.

இந்நிறுவனம் தற்போது HTC U எனும் புதிய ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.


இக் கைபேசி 5.5 அங்குல அளவுடைய QHD தொடுதிரையைக் கொண்டுள்ளது.

அத்துடன் Snapdragon 835 Processor, பிரதான நினைவகமாக 4 GB RA, 64/128GB சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இவை தவிர 16 மெகாபிக்சல் கொண்ட பிரதான கமரா மற்றும் 12 மெகாபிக்சல் உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான முன்பக்கக் கமரா, நீடித்து உழைக்கக்கூடிய 4000 mAh கொண்ட பற்றரியும் காணப்படுகிறது.

கூகுளின் Android 7.0 Nougat இயங்குதளத்தில் செயற்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## விண்டோஸ் இயங்குதளத்தை முந்தியது கூகுளின் அன்ரோயிட்




மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் இயங்குதளமே கணினிகளில் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது.

அதே போன்று இணையப் பாவனையிலும் அதிகம் விண்டோஸ் இயங்குதளங்களைக் கொண்ட கணினிகளே பயன்படுத்தப்பட்டு வந்தன.

எனினும் கூகுளின் அன்ரோயிட் இயங்குதளம் அறிமுகமாகிய பின்னர் மொபைல் சாதனங்களில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இதனால் ஏனைய இயங்குதளங்களை விடவும் குறுகிய காலத்தில் மிகவும் பிரபல்யமடைந்தது.


தற்போது இணையப் பாவனையில் முன்னணியில் காணப்படும் இயங்குதளம் என்ற பெயரை விண்டோஸ் இயங்குதளம் முந்தியதன் ஊடாகப் பெற்றுள்ளது.

இந்த தகவலை StatCounter எனும் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

தரவுகளின்படி 37.93 சதவீதம் அன்ரோயிட் இயங்கு தளமும், 37.91 சதவீதம் விண்டோஸ் இயங்குதளமும் இணையப் பாவனையில் காணப்படுகின்றது.

இவற்றுக்கு அடுத்ததாக iOS, OS X என்பன காணப்படுகின்றன.

## வாட்ஸ் அப் போன்று அறிமுகமாகியுள்ள புதிய ஆப்



வாட்ஸ் அப் பயன்படுத்தாத ஸ்மார்ட்போன் பயனாளர்கள் மிகக் குறைவு. அதிலும் புதிது புதிதாக வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப மாற்றங்கள் உட்புகுத்தப்படுகின்றன.


வாட்ஸ் அப்-ஐ போன்று புதிதாக Signal – Private Messenger என்னும் ஆப் அறிமுகமாகியுள்ளது.

ஆண்ட்ராய்ட் தளத்தில் இயங்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஸ்மார்ட்போன் (Smart phone), ஐபாட் (iPad) ஆகியவற்றிலும் பயன்படுத்தலாம்.

மெசேஜ் (message), வீடியோ கோல் (video call) ஆகியவற்றை மேற்கொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

Signal messenger மூலமாக மற்றவர்களுடன் போட்டோக்கள், பைல்கள் போன்றவற்றையும் நாம் பகிர்ந்து கொள்ள முடியும். இதில் End to End Encryption முறை பயன்படுத்தப்படுவதால் நமது தகவல்கள் திருடப்படுவது தடுக்கப்படும்.

## சர்க்கரை அளவை கண்காணிக்க அப்பிளின் புதிய சென்சர் கருவி



தொழில்நுட்பச் சந்தையில் முன்னணி வகிக்கும் அப்பிள் நிறுவனம் சர்க்கரை அளவை கண்காணிக்கும் புதிய சென்சர் கருவியைத் தயாரிக்கும் முயற்சியில் களமிறங்கியுள்ளது.

இதற்காக பயோ மெடிக்கல் பொறியியல் வல்லுநர்கள் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆராய்ச்சிக் குழுவினர் கூறும் போது, இரத்தத்தில் குளுக்கோஸின் அளவைக் கண்டுபிடிக்கும் சென்சர்கள் மூலம் இன்சுலின் அளவு கண்காணிக்கப்படும்.

இந்தக் கருவியில் இணைக்கப்பட்ட மற்றைய கருவியிலிருந்து தேவைப்பட்ட இன்சுலின் இரத்தத்தில் கலக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெருக்கடிக்குள் செயற்பட்ட சிவில் சமூகத்தை ஏன் புறக்கணிக்கிறீர்கள்?

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சர்வதேச சமூகத்திடம் கேள்வி

இங்கு காலம் காலமாக - நெருக்கடிகளுக்கு மத்தியில் - செயற்பட்ட சிவில் சமூகத்தைப் புறுக்கணித்து, வெளியிலிருந்த புற்றீசலாக முளைத்து வரும் அமைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஏன்?

சர்வதேச நாடுகளின் தூதர்களிடமும், ஐ.நா. அமைப்புகளிடமும் சர்வதேச நிதிக் கொடையாளர்களிடமும், இலங்கை அரசாங்கத்திடமும், வடக்கு மாகாண சபையிடமும் இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றது யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த 25 வருடங்களுக்குமேலாக இயங்கிவருகின்றஒரு கூட்டமைப்பாகும்.

28 தன்னார்வத் தொண்டுப் பணி நிறுவனங்களின் ஒன்றிணைந்த அமைப்பாகக் கட்சி அரசியல் சாரா அமைப்பாக அது இயங்கிவருகின்றது.

கடந்தகாலங்களில் யாழ். மாவட்டத்தின் மக்கள் நலன் சார்ந்த சேவைகளை ஒன்றிணைக்கின்ற பணிகளைமேற்கொண்டதோடு மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்காகத் தொடர்ந்து தேர்ச்சியாக அது குரல் கொடுத்தும் வந்திருக்கின்றது. இடப்பெயர்வு, சுனாமி, யுத்தஅனர்த்த காலங்களில் மக்களின் நலனுக்காக அயராது உழைத்திருக்கிறது. இதனால் கடந்த அரசினால் பலநெருக்கடிகளுக்கும் ஆளாகியிருந்தது. அந்தக் கால கட்டத்தில் சிவில் சமூகங்களின் தன்னார்வத்தொண்டுப் பணிகளை முடக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட பலவகையான கட்டுப்பாடுகள் மற்றும் மறைமுகமான அழுத்தங்கள் காரணமாகத் தன்னார்வத் தொண்டுப் பணிகளை பல சிவில் சமூக அமைப்புக்கள் இடைநிறுத்திக் கொண்டன. அப்போது மிக நெருக்கடியான சூழலுக்குள் சிவில் சமூக அமைப்புக்கள் தள்ளப்பட்டன. குறிப்பாக உள்ளூரில் பணியாற்றிய பல சர்வதேச நிறுவனங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஐ.நா நிறுவனங்களும் மக்கள் பணியிலிருந்து விலகவேண்டிய, ஒதுங்கவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டன.

அதேவேளை உள்ளூர் நிறுவனங்கள் மீதுவிதிக்கப்பட்ட கடுமையான கட்டுப்பாடு காரணமாக உள்ளூர் நிறுவனங்கள் பணிசெய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு, ஒருவகையில் செயலிழந்துபோயின. இருந்தாலும், உள்ளூர் நிறுவனங்கள் தமது தன்னார்வத் தொண்டுப் பணிகளைத் தமது இயல்பாற்றலுக்கு ஏற்பச் செயற்படுத்தி வந்தன.

இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடைபெற்று புதிய அரசு பொறுப் பேற்றுக் கொண்டது. அதன் வழி சுதந்திரமான சூழல் சிருஷ்டிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஜனநாயகப் பண்பு நிலையும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான வாய்ப்பு நிலைகளும் உருவாக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இலங்கை மக்கள் மத்தியில் இருந்தது. அந்தச்சூழலில் சிவில் அமைப்புகளும் தமது மக்களுக்கான தன்னார்வத் தொண்டுப் பணிக்கான சூழல் உருவாகும் என்று எதிர்பார்த்தன. இந்தப் புதிய அரசியல் சூழலில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மக்களின் நலன் சார்ந்த பணிக்கான வளங்கள், குறிப்பாக, நிதிக் கொடை நிறுவனங்களின் நிதிகள், நிபுணத்துவ உதவிகள் மற்றும் பௌதீகவளங்கள் வடக்கு, கிழக்கை நோக்கிவந்தடையும் என்ற எதிர்பார்ப்புக் காணப்பட்டது.

சிவில் அமைப்புக்கள் வலுவடைவதே நிலைத்த சமாதானத்துக்கான மற்றும் ஜனநாயகச் செயற்பாட்டுக்கான சிறந்த வழியாக எப்போதும் அமையும் என்பது யாவரும் அறிந்த ஒரு விடயம். இதற்குப் பாதிக்கப்பட்ட சமூகத்தின் சிவில் அமைப்புக்கள் வலுவடைதல் முக்கியமானதாகும். இதனை யாழ். மாவட்டஅரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் நம்புகின்றது.

ஆனால், இந்த நிலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை எனலாம்.

இது மிகவும் கவலையளிக்கின்ற விடயமாகும். கடந்த அரசால் நிர்மூலமாக்கப்பட்ட சிவில் அமைப்புக்களினது தன்னார்வத் தொண்டுப் பணிகளின் மீள் கட்டுமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் நிர்மூலமாக்கப்பட்ட சிவில் அமைப்புக்களை மீள் கட்டு மானப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு ஆதரவுஅளிக்கப்படவில்லை.

அது பற்றிய கரிசனைகளை சர்வதேச நிதிக் கொடையாளர்கள், ஐக்கியநாடுகள் சபையின் அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேசநாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், இலங்கை அரசு,வடக்கு மாகாண சபை போன்ற பலரும் கவனம் செலுத்தவில்லை எனலாம்.

ஆனால், இதே காலகட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்களின் முக்கியத்துவம் பற்றி அதிகளவில் பேசப்பட்டிருக்கின்றது. சிவில் சமூக அமைப்புக்களின் கருத்துக்களின் முக்கியத்துவம் உணரப்பட்டிருக்கின்றது. சிவில் சமூக அமைப்புக்களின் குரல்கள் ஐ.நா. சபையின் மனித உரிமை சபையில் முக்கியம் பெற்றிருக்கின்றன.

இந்தச் சூழலில் யுத்தத்தினாலும், கடந்த அரசின் செயற்பாடுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்த சிவில் அமைப்புக்களின் மீள் கட்டுமானத்துக்குப் போதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல். புதிய சிவில் அமைப்புக்கள் புற்றீசல் போல உருவாக்கப்பட்டன.

புதிது புதிதாகச் சிவில் சமூகக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை அல்லது மிக மிகக் குறைந்த வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன எனலாம்.

அவ்வாறான புதிய சிவில் அமைப்புக்களை நோக்கி வளங்கள் திசை முகப்படுத்தப்பட்டன.இந்த நுட்பமான செயலியக்கத்தினால் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்களால் கொழும்பை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சிவில் அமைப்புகள் வளங்களைத் தமதாக்கிக் கொண்டன.

நிர்வாகச் செலவுகளுக்காக அதிகளவு வளங்கள் ஒதுக்கப்பட்டன. புதிது புதிதாகப் பல காரியாலயங்கள் உருவாக்கப்பட்டு குறுங்காலத்தில் மூடப்பட்டன. வெறுமனே நிகழ்ச்சிகளில் பங்குபற்றிக் கையொப்பமிடும் பங்காளர்களாக மட்டுமே பாதிக்கப்பட்ட மக்கள் கருதப்பட்டார்கள்.

நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதிலோ அதனை நடைமுறைப்படுத்துவதிலோபாதிக்கப்பட்ட சிவில் சமூகத்தின் கருத்துக்களும், பங்களிப்புக்களும் கோரப்படவில்லை.

சில கண் துடைப்பு நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டவர்கள் தமது செயற்பாடு என்று சொந்தங் கொண்டாடக் கூடிய அளவிற்கு எந்தவொரு திட்டமும் உருவாக்கப்படவில்லை எனலாம். ஒருவகையில் பாதிக்கப்பட்டமக்கள் ஏமாற்றப்பட்டார்கள்; தொடர்ந்தும் ஏமாற்றப்படுகிறார்கள்.

இதனைப் பல்வேறு நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், சர்வதேச நிதிக் கொடை நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் ஏன் புரிந்து கொள்ளவில்லை என்ற கேள்வி உண்டு. இது பாதிக்கப்பட்டவர்கள், திட்டமிட்டு ஏமாற்றப்படுகிறார்களா என்ற பலத்த சந்தேகத்தை எழுப்புகின்றது.

பாதிக்கப்பட்ட சமூகத்திடம் ஆலோசனைகளைப் பெற உண்மையானதும், நேர்மையானதும், செயல் முனைப்புள்ளதுமான செயன்முறை ஏன் பின்பற்றப்படவில்லை?

திட்டங்களை அவர்களே உருவாக்குவதற்கும், நிர்வகிப்பதற்கும் வாய்ப்புக்களை ஏன் வழங்க மறுக்கிறார்கள்? வடக்குக் கிழக்கில் சிவில் சமூக அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு வடக்குக் கிழக்கில் தொடர்பில்லாத அமைப்புக்களுக்கு வளங்களை அள்ளி வழங்குவதன் நோக்கம் என்ன என்பதான கேள்விகள் எழுகின்றன. கிள்ளித் தெளிக்கும் செயன்முறை ஏன் ஊக்குவிக்கப்படுகின்றது என்பது புரியாத புதிராகவுள்ளது.

ஆகவே, யாழ்.மாவட்டத்தின் 28 அமைப்புக்கள் சார்பாகச் சர்வதேச நாடுகளின் உயர்ஸ்தானிகர்களுக்கும், ஐ.நா. சபையின் அமைப்புக்களுக்கும், சர்வதேச நிதிக் கொடையாளர்கள், இலங்கை அரசாங்கம் மற்றும் வடக்கு மாகாண சபை போன்றோரிடம் பின்வரும் விடயங்களை விநயமாக முன் வைக்கின்றோம்:-

1. கடந்தஆட்சியாளர்களால் நிர்மூலமாக்கப்பட்ட வடக்குக், கிழக்கின் சிவில் சமூகங்களை மீள் நிர்மாணம் செய்வதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த மீள் நிர்மாணம் என்பது பாதிக்கப்பட்ட பகுதிகளின் சிவில் அமைப்புக்களின் பங்கு பற்றுதலுடன் திட்டங்களை வடிவமைத்தல், அவர்களிடமே பொறுப்புக்களை ஒப்படைத்தல், அவர்களே செயற்பாடுகளுக்குச் சொந்தம் கொண்டாடுதல் என்ற அடிப்படையில் அமைதல் வேண்டும்.

> சிவில் அமைப்புக்கள் வலுவடைவதே நிலைத்த சமாதானத்துக்கான மற்றும் ஜனநாயகச் செயற்பாட்டுக்கான சிறந்த வழியாக எப்போதும் அமையும் என்பது யாவரும் அறிந்த ஒரு விடயம். இதற்குப் பாதிக்கப்பட்ட சமூகத்தின் சிவில் அமைப்புக்கள் வலுவடைதல் முக்கியமானதாகும். இதனை யாழ். மாவட்டஅரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் நம்புகின்றது.

2.பாதிக்கப்பட்ட சமூகம் சாராதஅல்லதுநீண்டயுத்தத்தின் அனுபவங்களோடு தொடர்பில்லாத வெறுமனே வளங்களைத் தமதாக்கிக் கொள்வதற்காகப் புற்றீசலாக வடக்கு, கிழக்கை நோக்கிப் பறந்து வருபவர்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். அவர்களின் செயற்பாடுகள், திட்டங்கள் தொடர்பான வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்கு உதவ வேண்டும்.

3. புற்றீசலாக முளைக்கின்ற சிவில் சமூக அமைப்புக்களுக்குப் பின்னால் ஒரு திட்டமிடப்பட்ட வலையமைப்பும், அரசியலும் உள்ளது என்பதைப் புரிந்து கொண்டு பாதிக்கப்பட்டோரின் நலன் சார்ந்து செயற்படுவதற்கான வழிப்படுத்தும் ஆற்றலைப் பெறுதல் வேண்டும்.

4.ஆங்கிலத்தில் பேசுதல், ஆங்கிலத்தில் நன்றாக அறிக்கையிடுதல் என்ற தகுதிகளைக் கொண்டிருக்கின்ற - பாதிக்கப்பட்ட சமூகம் சாராதோர் - வளங்களைச் சுருட்டிக் கொள்வதற்கான வாய்ப்புக் களைத் தடுத்துப் பாதிக்கப்பட்ட சமூகத்தின் மீள் நிர்மாணத்துக்கு உதவுவதற்கான வழிகளைக் கண்டு கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் வலுவடைவதற்கான வாய்ப்புக்களுக்கான உறுதிப்பாட்டை நிலை நிறுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட சமூகத்தின் மீள்கட்டுமானமே நிலைத்த சமாதானத்திற்கும், மீள் நல்லிணக்கத்திற்கும், நிலைமாறு கால நீதிக்கும் வித்திடும்.

மாறாகக் கண் துடைப்பாக அவை மேற்கொள்ளப்படாமல் இருக்கஅனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனம் அழைப்பு விடுக்கின்றது. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 157

பொன்.வேணு கிருஷ்ணா

சிரிய மீதான அமெரிக்கத் தாக்குதலின் அப்பட்டமான சட்டவிரோதத் தன்மையை பொறுத்தவரையில், அதுவொரு பிரச்சினையே இல்லை என்பதாக கையாளப் பட்டது. வெள்ளிக்கிழமை ஐ.நா. பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில், ஐக்கிய நாடுகள் சபைக்கான சிரியாவின் தூதர் அந்தத் தாக்குதல்களை ‘‘ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் அத்துடன் சகல சர்வதேச விதிமுறைகள் மற்றும் சட்டங்களை’’ மீறிய ‘‘வெளிப் படையான ஆக்கிரமிப்பு நடவடிக்கை’’ என்று குறிப்பிட்டார்.

இதற்கு விடையிறுப்பாக, ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹலே ‘‘சர்வதேச சமூகம் கூட்டாக செயற்படுவதற்கான அதன் கடமையில் இருந்து தொடர்ந்து தவறும் போது, அரசுகள் அவற்றின் சொந்த நடவடிக்கையை எடுக்க நிர்ப்பந்திக்கப்படும் காலம் ஏற்படுகிறது,’’ என்று சர்வசாதாரணமாக அறிவித்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அமெரிக்கா ஏதேனும் ஒரு சாக்குபோக்கைக் கொண்டு அது தேர்ந்தெடுக்கும் எந்தவொருநாட்டிற்கு எதிராகவும் ஆக்ரோஷப் போரை நடத்த அதற்கு உரிமை இருப்பதாக கருதுகிறது.

இந்தப் போக்கு ஊடகங்களில் எதிரொலித்தன, ‘‘மனிதாபிமான’’ போருக்கான என்றென்றுக்குமான பிரசாரகரான டைம்ஸ் கட்டுரையாளர் நிக்கோலஸ் க்ரிஸ்டோஃப் அறிவிக்கையில், ‘‘சிரியாவிற்கு எதிரான ஜனாதிபதி ட்ரம்பின் விமானத் தாக்குதலின் சட்டபூர்வத்தன்மையில் சந்தேகம் இருந்தன என்றாலும் அவற்றில் பெரும்பாலானவை, சரியானவையே,’’ என்றார்.

சிரியா மீதான விமானத் தாக்குதல்களுக்குப் பின்னால் இருக்கும் நிஜமான உள்நோக்கங்களை புரிந்து கொள்ள, அவற்றை ஒரு பரந்த வரலாற்று உள்ளடக்கத்தில் நிறுத்துவது அவசியமாகும்.

அமெரிக்கா ஒரு கால் நூற்றாண்டுக்கும் அதிகமாக தொடர்ந்து போரில் ஈடுபட்டு வருகிறது. இந்த போர்கள் ஒவ்வொன்றிலும், அமெரிக்க அரசாங்கம் அது ஏதோவொரு உடனே நிகழவிருந்த பேரழிவைத் தடுப்பதற்காக அல்லது ஏதேனும் ஒரு சர்வாதிகாரியை பதவியிலிருந்து நீக்குவதற்காக தலையீடு செய்து வந்ததாகக் கூறியது.

1991 இல், ஈராக்கிய இராணுவம் குவைத் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட அட்டூழியங்களைத் தடுப்பதற்காக என்ற பெயரில் எண்ணெய் வளம் மிகுந்த ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. பின்னர் 1999 இல் யூகோஸ்லாவியாவில் ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசிவிக்கின் இனச் சுத்திகரிப்பைத் தடுப்பதற்காக என்ற பெயரில் யூகோஸ்லேவியா மீது குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

2001 இல், செப்ரெம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமான குற்றவாளிகளுக்குத் தலிபான் இடமளித்திருந்தது என்ற பொய் சாக்குப்போக்கின் அடிப்படையில் புஷ் நிர்வாகம் ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தது. இதையடுத்து இரண்டாவது ஈராக் படையெடுப்பு வந்தது, இது ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் ‘‘பாரிய பேரழிவு ஆயுதங்களைக்’’ கொண்டிருப்பதாக கூறிய பொய் வாதங்களை நியாயப்படுத்தியது.

ஒபாமாவின் கீழ், லிபியா மீது குண்டுவீசிய அமெரிக்கா, ஜனாதிபதி மௌம்மர் கடாபியின் துருப்புக்கள் பெங்காசியில் உடனடியாக ஒரு படுகொலையை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக கூறிய பின்னர் அவரை அதன் இஸ்லாமிய பினாமிகளைக் கொண்டு படுகொலை செய்தது.

இந்த எல்லா போர்களிலும், அமெரிக்காவின் உலகளாவிய புவிசார் மூலோபாய நலன்களைப் பின்தொடர்வதற்காக, ஆட்சி மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மனிதாபிமான பாசாங்குத்தனங்கள் தான் பயன்படுத்தப் பட்டன. இவை 10 லட்சத்தில் அதிகமான மக்கள் கொல்லப்படுவதிலும் மற்றும் ஒட்டுமொத்த சமூகங்களும் அழிக்கப்படுவதிலும் போய் முடிந்துள்ளன. அமெரிக்க முதலாளித்துவத்தின் நீண்டகால வீழ்ச்சியை மாற்றும் முயற்சியில், அமெரிக்க ஆளும் வர்க்கம் பிராந்திய மோதல்களில் ஒரு நாடு மாற்றொரு நாட்டின் மீது படையெடுத்துள்ளது அல்லது குண்டுவீசி உள்ளது, இவை விரைவிலேயே சீனா மற்றும் ரஷ்யா உட்பட அதன் பெரிய போட்டியாளர்களுடன் ஒரு மோதலுக்குள் வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றன.

டொனால்ட் ட்ரம்பின் வார்த்தைகளில் கூறுவதானால் ‘‘அழகிய மழலைகளை’’ பாதுகாப்பதற்காக அமெரிக்கா

ருந்தன.

வெளியுறவுக் கொள்கை மீது ஆளும் வர்க்கத்திற்குள் நிலவும் கடுமையான மோதல், பகுதியாக தீர்க்கப்பட்டிருப்பது, இராணுவத் தலையீட்டிற்குரிய ட்ரம்பின் விருப்பப் பகுதியான ஆசியாவில் இராணுவ தலையீட்டைத் தீவிரப்படுத்தாது என்று அர்த்தமல்ல. NBC செய்திகள் வெள்ளியன்று மாலை ஒரு முக்கிய பகுதியைத் தாங்கி வந்தது, ‘‘வடகொரியாவின் அணுஆயுதத்திட்டங்களுக்கு விடையிறுப்பதற்கான விருப்பத் தெரிவுகளை தேசிய பாதுகாப்புக் கவுன்சில் ஜனாதிபதி ட்ரம்பிடம் முன்வைத்துள்ளது - இதில் தென் கொரியாவில் அமெரிக்க அணுஆயுதங்களை நிலைநிறுத்துவது அல்லது சர்வாதிகாரி கிம் ஜோங்-உன் ஐ கொல்வது ஆகியவையும்

மீது குண்டுவீசுவதற்கு அழைப்பு விடுத்ததுடன், விமானங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்ட பகுதியை ஏற்படுத்துவதற்கு அவரது ஆதரவையும் வலியுறுத்தி இருந்தார், இது ரஷ்யாவுடன் போருக்கு இட்டுச் செல்லக்கூடுமென உயர்மட்ட அமெரிக்கத் தளபதிகளே தெரிவித்துள்ளனர்.

சிரிய விமானத்தளத்தின் மீது அமெரிக்கா ஒரு தூண்டுதலற்ற மற்றும் சட்டவிரோதத் தாக்குதல் நடத்தப்பட்டு வெறும் ஒரு நாள் கழித்து, இந்த சம்பவமானது, அணுஆயுத ரஷ்யாவுடன் ஒரு நேரடி மோதலுக்கான சாத்தியக்கூறுடன், இன்னும் பரந்த இராணுவ தீவிரப்பாட்டிற்கு ஒரு வெள்ளோட்டம் மட்டுமே என்பது தெளிவாகி உள்ளது.





மற்றொரு போரைத் தொடங்கி இருப்பதாக, இப் போது, மீண்டுமொருமுறை, அமெரிக்க மக்கள் நம்ப வைக்கப்பட இருக்கிறார்களென எதிர்பார்க்கலாம்.

சிரிய சம்பந்தமாக கூறுவதானால், ஈரான் மற்றும் ரஷ்யாவின் ஒரு கூட்டாளியான பஷர் அல்-அசாத் அரசாங்கத்தைப் பதவியிலிருந்து இறக்கும் நோக்கில் சிஐஏ தூண்டிய ஐந்தாண்டு கால நீண்ட போர் படுபயங்கரமான இரத்த ஆற்றையும் மற்றும் அகதிகள் நெருக்கடியையும் ஏற்படுத்தி உள்ளன. 2013 இல், விமானத் தாக்குதல்கள் நடத்துவதற்காக சிரிய அரசாங்கம் மீது பொய்யாக இரசாயன ஆயுதத் தாக்குதல் குறித்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பெரும் மக்கள் எதிர்ப்பை எதிர்கொண்டதாலும் மற்றும் இராணுவத்தலையீட்டை அங்கீகரிக்கும் ஒரு தீர்மானம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் எதிர்பாராமல் தோல்வி அடைந்ததாலும், ஒபாமா நிர்வாகம் முடிவில் பின் வாங்கியது.

ஆனால் பின்வாங்க வேண்டியிருந்ததால் தோல்வி முகத்தை மறைப்பதற்காக செய்யப்பட்ட புட்டின் உடனான ஒபாமாவின் உடன்படிக்கையை இராணுவம் மற்றும் அரசியல் ஸ்தாபகத்தின் செல்வாக்கான பிரிவுகள் ஒரு மோசமான பின்னடைவாகக் கருதின.

ட்ரம்ப் தேர்வாகி பதவியேற்றதற்குப் பிந்தைய மாதங்களில், அவரொரு ‘‘சைபீரிய வேட்பாளர்’’ என்றும் மற்றும் ஒரு ‘‘ரஷ்ய செல்லப் பிராணி’’ என்றும் கூறப்பட்ட ஜனநாயகக் கட்சியினரின் குற்றச்சாட்டுக்கள், சிஐஏ மற்றும் இராணுவ ஸ்தாபகத்தின் கோரிக்கைகளின் வரிசையில், பிரதானமாக ரஷ்யாவிற்கு எதிராக மற்றும் சிரியாவில் இன்னும் ஆக்ரோஷமான கொள்கையை நிர்பந்திப்பதை நோக்கமாகக் கொண்டி

உள்ளடங்கும்.’’ இதுபோன்ற எந்தவொரு நடவடிக்கையும் ஆசிய பசுபிக்கை வேகமாக முழு முதலான போருக்குள் இட்டுச் செல்லும்.

பொதுமக்களின் கருத்துக்கள் மீது அரசியல் ஸ்தாபகமும் மற்றும் ஊடகங்களும் அலட்சியமாக இருப்பது தான் சிலசமயம் மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. ஏதோஎழுதிகொடுக்கப்பட்டதன் அடிப்படையில் செயல்படுவதைப் போல -அவர்கள் அவ்வாறு செயல்படக் கூடியவர்கள் தான்- இந்தப் பிரசாரம் அந்தளவிற்கு மிகவும் அப்பட்டமாகவும், தொடர்ச்சியாகவும் உள்ளது. அரசாங்கம் பொய்களை விற்று வருகிறது என்பதை மக்களின் பரந்த பிரிவுகள் பெரும்பாலும் நடந்தால் நடக்கட்டும் என்று எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஜனநாயகக் கட்சி மற்றும் அமைப்புரீதியில் அதனுடன் இணைந்த துணை அமைப்புக்களின் செயற்பாடுகள் மூலமாக, போருக்கு எதிரான பெரிய எதிர்ப்பு அரசியல்ரீதியில் கலைக்கப்பட்டுள்ளது. பெருந்திரளான பரந்த மக்களின் நனவு மட்டத்திற்கும் அதி தீவிர அபாயகரமான உலக நிலைமைக்கும் இடையே ஓர் இடைவெளி நிலவுகிறது. ஏகாதிபத்திய போர் மற்றும் இறுதியில் அதற்கு காரணமான முதலாளித்துவ அமைப்புமுறையை எதிர்ப்பதில், தொழிலாள வர்க்கத்தின் ஒரு பெரிய அரசியல் இயக்கத்தைத் திட்டமிட்டு அவசரமாக அபிவிருத்தி செய்வதன் மூலமாக, இந்த நிலைமை தலைகீழாக மாற்றப்பட வேண்டும்.

**மூன்றாம் உலகப் போருக்கான ஒரு வெள்ளோட்டம் தொடங்கி விட்டதா?**

ஜனநாயகக் கட்சி முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன், “வரவிருக்கும் நாட்களில் அசாத் கொடூர அட்டூழியங்களில் ஈடுபடுவதைத் தடுக்க, உலகம் இன்னும் அதிக நடவடிக்கை எடுக்க வேண்டியது இன்றியமையாததாகும்.’’ என்று அறிவித்தார். அத்தாக்குதலுக்கு ஒரு நாள் முன்னதாக, கிளிண்டன், சிரிய விமானப்படைத் தளங்கள்


வெள்ளியன்று (07.04.2017) அமெரிக்க ஊடகங்களும் அரசியல் ஸ்தாபகமும், ஒரே குரலில், ட்ரம்பின் நடவடிக்கையை மட்டும் வரவேற்கவில்லை, மாறாக அதை விரிவாக்கவும் அழைப்புவிடுத்தன. ஜனநாயகக் கட்சி முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன், ‘‘வரவிருக்கும் நாள்களில் அசாத் கொடூர அட்டூழியங்களில் ஈடுபடுவதைத் தடுக்க, உலகம் இன்னும் அதிக நடவடிக்கை எடுக்க வேண்டியது இன்றியமையாததாகும், என்று அறிவித்தார். அந்தத் தாக்குதலுக்கு ஒரு நாள் முன்னதாக, கிளிண்டன், சிரிய விமானப்படைத் தளங்கள் மீது குண்டுவீசுவதற்கு அழைப்பு விடுத்ததுடன், விமானங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்ட பகுதி ஏற்படுத்துவதற்கு அவரது ஆதரவையும் வலியுறுத்தி இருந்தார், இது ரஷ்யாவுடன் போருக்கு இட்டுச் செல்லக்கூடுமென உயர்மட்ட அமெரிக்க தளபதிகளே தெரிவித்துள்ளனர்.

பிரதிநிதிகள் சபை ஜனநாயகக் கட்சி தலைவர் நான்சி பிலோசி ட்ரம்பின் நகர்வை பாராட்டிய அதே வேளையில், கூடுதல் நடவடிக்கைக்கு நிறைய சட்டபூர்வதன்மை வழங்குவதற்காக இராணுவப் படை பிரயோகத்திற்கு புதிய அங்கீகாரம் வழங்க காங்கிரஸிற்கு அழைப்புவிடுத்தார். குடியரசுச் கட்சி செனட்டர்கள் ஜோன் மெக்கெயின் மற்றும் லின்ட்செகிரஹாம், சிரியாவில் போரை இன்னும் கூடுதலாக தீவிரப்படுத்த ட்ரம்பிற்கு அழைப்புவிடுக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். ‘‘அசாத்தின் விமானப் படையை சண்டையிலிருந்து முழுமையாக வெளியேற்ற’’ ட்ரம்ப் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அந்நாட்டில் ‘‘பாதுகாப்புப் பகுதிகளை’’ உருவாக்க வேண்டுமென்றும் (இதற்காக கணிசமான அளவிற்கு தரைப்படை துருப்புக்களை அனுப்ப வேண்டியிருக்கும்) அவர்கள் எழுதினர்.

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




124

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### 'ஜெயசிக்குறுச்' சமர்: மரணத்தின் நெடுஞ்சாலை

புளியங்குளத்தை வெற்றி கொள்ள முடியாத இரும்புக் கோட்டையாக மாற்றி, மறிப்புச் சண்டைகளையும் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக நடத்தி வந்தமையால் ஜெயசிக்குறுச் சமர் பெரும் நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டது. குறித்த கால வரையறைகளை மீறியதாக, முடிவில்லாத தொடர்கதையாக, சமர் நீண்டு செல்வது அரசுக்குப் பெரும் சங்கடத்தைக் கொடுத்தது. அடுத்ததாக, பொருதுகளங்களில் உயிரிழந்த, காயமடைந்த படையினரின் தொகை பெருகி வந்தது. இதனால், சிங்கள மக்கள் மத்தியில் போருக்கு எதிரான வெறுப்புணர்ச்சி மேலோங்கி வளர்ந்ததுடன், அரசின் இராணுவ அணுகுமுறையிலும் மக்களுக்கு நம்பிக்கை தளர்ந்தது. சிங்களப் படைத் தலைமையை விரக்திக்கு உள்ளாக்கிய இன்னொரு விடயம் என்னவென்றால், சமர் தொடங்கிப் பல மாதங்கள் ஆகிய போதும் இராணுவத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில் குறிப்பிடத்தக்க கள வெற்றிகளை ஈட்ட முடியாது இருப்பதாகும். இப்படியான கள யதார்த்தத்தை நன்கு பரிசீலித்த படைத் தலைமை ஜெயசிக்குறுவின் போர்த் தந்திரோபாயத்தை மாற்றியமைக்க முடிவு செய்தது. வன்னி நெடுஞ்சாலையைக் கைப்பற்றும் குறிக்கோளுடன், ஒரே பாதையால், ஒரே முனையில் படைகளைக் குவிக்காது, புதிதாக வேறு களமுனைகளைத் திறந்து போரிட முடிவு எடுக்கப்பட்டது. களமுனைகளை விரிவாக்கம் செய்தால், விடுதலைப் புலிகளின் படையணிகளைச் செறிவாக்கி, அவர்களது தாக்குதல் வலுவைக் குறைத்து இராணுவத்தின் வெற்றிக்கு வழி சமைக்கலாமெனப் படைத் தலைமை சிந்தித்தது. இந்தத் தந்திரோபாயத்துக்கு அமைய ஒரு புதிய களமுனையைத் திறப்பதென முடிவாகிற்று. ஏ-9 வன்னி நெடுஞ்சாலையின் கிழக்குப் புறமான பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரச் சிங்கள இராணுவம் முடிவு எடுத்தது. நெடுங்கேணியிலிருந்து கரிப்பட்டமுறிப்பு வரையிலான பகுதியைக் கைப்பற்றினால், புலிகளின் பிரதான வழங்கல் பாதைகளில் ஒன்றான முல்லைத்தீவு - மாங்குளம் வீதியைத் துண்டிப்பதுடன், மாங்குளத்தை நோக்கிப் படைகளை நகர்த்தவும் ஏதுவாக அமையும் என இராணுவத் தலைமை எண்ணியது. இந்தத் திட்டத்துக்கு அமையக் கரிப்பட்டமுறிப்பைக் கைப்பற்றும் நோக்குடன் கரப்புக்குத்தி விஞ்ஞானகுளப் பகுதியை வழங்கல் மையமாக்கி, அங்கு படைகளைக் குவித்தது சிறிலங்கா இராணுவம். புதிய களமுனை திறக்கும் ஜெயசிக்குறுப் படையினரின் தந்திரோபாய நகர்வைப் புரிந்து கொண்ட விடுதலைப் புலிகள், இந்த நகர்வை முறியடிக்கும் நோக்குடன் கரப்புக்குத்தி - விஞ்ஞானகுளப் பகுதியிலுள்ள இராணுவத்தின் வழங்கல் மையம் மீது பெரியதொரு வலிந்து தாக்குதலை நடத்தப் புலிகள் திட்டமிட்டனர். எனினும், எமது தாக்குதலுக்குக் குறிப்பிட்ட தினத்துக்கு முதல் நாளே படையினர் கரிப்பட்டமுறிப்பைக் கைப்பற்றினர். 1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் நாளன்று, பத்துக் கிலோமீற்றர் தூரம் வரை, இரவின் இருளில் காட்டுப் பாதைகளூடாக நடந்து சென்ற படையினர் தமது இலக்கை அடைந்தனர். மறுநாள், ஒக்ரோபர் மாதம் 5 ஆம் நாளிரவு, ஏற்கனவே திட்டமிட்டபடி கரப்புக்குத்தி - விஞ்ஞானகுள வழங்கல் மையம் மீது விடுதலைப் புலிப் படையணிகள் பெரிய தாக்குதல் ஒன்றை நிகழ்த்தினர். வழங்கல் மையத்தைக் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்த வெடிபொருள்களையும், இராணுவத் தளபாடங்களையும், வாகனங்களையும் தம் வசமாக்கினர்.

கரிப்பட்டமுறிப்புச் சந்தியும் அதன் சுற்றுப்புறங்களும் படையினரிடம் வீழ்ச்சியடைந்தமை ஜெயசிக்குறுச் சமரில் ஒருதிருப்பத்தை ஏற்படுத்தியது.



மாங்குளத்துக்குக் கிழக்கே ஐந்து மைல் அருகில் ஜெயசிக்குறுப் படைகள் நிலையெடுத்துக் கொண்டமை புலிகளுக்கு ஒரு புதிய சவாலாக அமைந்தது. இதனால் எதிர்ப்புச் சமரின் தந்திரோபாயத்தில் சில மாற்றங்களைச் செய்யப் பிரபாகரன் முடிவெடுத்தார். இராணுவம் புதிதாகத் திறக்கும் களமுனைகளுக்குப் படைகளை நகர்த்திப் போராட புலிகளிடம் பெரிய அளவு ஆள்பலம் இருக்கவில்லை. புலிகளின் எதிர்ப்புச் சக்தி பரவலாக்கப்பட்டு பலவீனப்படுவதையே எதிரி விரும்புகிறான் என்பதும் பிரபாகரனுக்குத் தெரியும். புதிய நிலையிலிருந்து மாங்குளத்தைக் கைப்பற்றுவதே படையினரின் குறிக்கோள் என்பதால், சில தந்திரோபாயப் பின் வாங்கல்களைச் செய்து மாங்குளத்தைப் பலப்படுத்தப் பிரபாகரன் முடிவெடுத்தார். இதன்படி, புளியங்குளத்தில் நிலைகொண்டிருந்த படையணிகளை கனகராயன்குளம் வரை பின்வாங்கச் செய்ததுடன், மாங்குளப் பகுதியை மிக இறுக்கமான பாதுகாப்புப் படைத் தளமாக மாற்றி அமைத்தார் பிரபாகரன்.

விடுதலைப் புலிகளின் படை விலகலைத் தொடர்ந்து புளியங்குளத்தில் நிலைகொண்ட படையினர், கனகராயன்குளத்தைக் கைப்பற்றப் பல்வேறு படை நகர்வுகளை மேற்கொண்டனர். இவற்றையெல்லாம் புலிப் படையணிகள் தீர்முடன் போராடி முறியடித்தன. இந்த முறியடிப்புச் சண்டைகளில், கனகராயன்குளத்துக்குச் சமீபாகவுள்ள மன்னங்குளத்தில் நிகழ்ந்த மோதல் முக்கியமானது. இந்தப் பகுதியில் முன்னேறிய படையினரை எமது போராளி அணிகள் வழி மறித்து நிகழ்த்திய மூர்க்கமான தாக்குதலில், அமெரிக்காவில் பயிற்சி பெற்ற 300 சிறப்பு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் 37 போராளிகள் களப் பலியாகினர்.

வன்னிப் பிரதேசத்தின் கேந்திர மையமாக மாங்குளம் விளங்கியது. இதனைக் கைப்பற்றும் நோக்குடன், ஜெயசிக்குறுப் படைகள் பெரும் படையெடுப்புகளை நிகழ்த்தலாமெனக் கருதிய புலிகளின் தலைமை, மாங்குளத்தை மறிப்புத் தாக்குதலுக்கான பெரும் தளமாக மாற்ற முடிவு எடுத்தது. அத்துடன் இந்தத் தளத்துக்குப் படைவலுச் சேர்க்கும் பொருட்டு, கனகராயன்குளத்தில் நிலைகொண்டிருந்த புலிப் படை அணிகளை மாங்குளத்துக்குப் பின்நகரச் செய்தது தலைமை.

1998 ஆம் ஆண்டின் உதயத்துடன் பல மாதங்கள் வரை மாங்குளத்தைக் கைப்பற்றும் தந்திரோபாயக் குறிக்கோளுடன் சிங்களப் படையணிகள் மேற்கொண்ட பல்வேறு படை நடவடிக்கைகளை எமது போராளிகள் அபாரமான துணிவுடன் எதிர்த்துப் போராடி முறியடித்தனர். புதிய வியூகங்களை அமைத்துப் பெரிய எடுப்பில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களும் தோல்வி கண்டன. சிங்கள ஆயுதப் படைகள் தமது அசுர பலத்தைப் பிரயோகித்தும் மாங்குளம் படைத் தளத்தை அசைத்து விட முடியவில்லை.

ஜெயசிக்குறுச் சமர் ஓராண்டைப் பூர்த்தி செய்தது. 365 நாள்கள் வரை தொடர்ச்சியாக முழுப் பலத்தையும் பிரயோகித்துப் போராடியும் 35 கிலோமீற்றர் நீளப் பாதையையே அரச படைகளால் கைப்பற்ற முடிந்தது. ஓராண்டுச் சமரில் 1350 படையினரைப் பலிகொடுத்ததாக அரசு இராணுவத்தின் உயிரிழப்பைக் குறைத்துக் கூறியது. மூவாயிரம் படையினருக்கும் மேல் கொல்லப்பட்டனர் என விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையை நம்பகமானதென உலக இராணுவ நிபுணர்கள் ஏற்றுக் கொண்டனர். வன்னி நெடுஞ்சாலைப் பாதுகாப்புச் சமரில், தமது தரப்பில் 1300 போராளிகள் களப் பலியாகினர் என விடுதலைப் புலிகள் அறிவித்தனர். ஓராண்டு காலமாக, ஓயாத தாக்குதல்களை மேற்கொண்ட போதும், நெடுஞ்சாலை மீதான புலிகளின் அழுங்குப் பிடியை இராணுவத்தினால் அசைக்க முடியவில்லை. கிளிநொச்சியின் தென்புறப் பகுதியிலிருந்து மாங்குளம் சந்தி வரையான நெடுஞ்சாலை புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இந்த ஓராண்டுச் சமரில் சிங்கள இராணுவத்தின் சிறப்புப் படையணிகள் சிதைவுற்றன. 'எயார் மொபைல்' அதிரடிப் படைகளையும், வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற சிறப்புப் படையணிகளையும் கொண்ட 53 ஆவது 'டிவிசன்' படைப் பிரிவு பெரும் இழப்புகளைச் சந்தித்தது.

ஜெயசிக்குறுச் சமர் விடுதலைப் புலிகளின் போரியல் வளர்ச்சிக்கு வளம் சேர்த்தது என்றே சொல்லலாம். பெரும் படை நகர்வுகளைச் செய்து, பல்வேறு படையணிகளை ஒருங்கிசைவாகச் செயற்பட வைத்து, பீரங்கி போன்ற கனரக ஆயுதங்களை மிக நுட்பமாகக் கையாளச் செய்து, மரபு வழிப்போர் முறையில் புலிப் படை வீரர்களுக்குப் பயிற்சியும் தேர்ச்சியும் பெற ஜெயசிக்குறுச் சமர்க்களம் அமைத்துக் கொடுத்தது. இந்த வன்னிப் பெரும் சமரின் ஓராண்டு நிறைவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளைக் களப்பலி கொடுத்த போதும் புலிகள் இயக்கத்தின் போர் வலு குன்றிவிடவில்லை. அந்த ஓர் ஆண்டு காலத்தில் ஆள்சேர்ப்பும் போர்ப் பயிற்சியும் முடுக்கிவிடப்பட்டு எமது இயக்கம் ஆள் பலத்தைப் பெருக்கியது. ஆயுத பலமும் பல மடங்கு அதிகரித்தது. பீரங்கிகள், பெருந்தொகையில் மோட்டார்கள் (81 எம்.எம்., 60 எம்.எம். மோட்டார்கள்), நூற்றுக்கணக்கான இயந்திரத் துப்பாக்கிகள், ஆயிரக்கணக்கில் தானியங்கித் துப்பாக்கிகள், பெரும் தொகையில் பீரங்கி, மோட்டார் எறிகணைகள், உந்துகணை செலுத்திகள், கைக்குண்டுகள் எனப் பெரும் தொகையான ஆயுதங்களை இந்தச் சமரில் புலிகள் கைப்பற்றினர். இவ்விதம் ஆள் பலமும், ஆயுத பலமும், மன பலமும் எல்லாவற்றுக்கும் மேலாக கள அனுபவமும் பெற்று விடுதலைப் புலிகள் இயக்கம் வலுமிக்க போராட்ட சக்தியாக எழுச்சி பெற்றது.

வன்னி மாநிலத்தில் பெரிய அளவு நிலப்பரப்பை ஜெயசிக்குறுப் பூதம் விழுங்கியுள்ளபோதும் விடுதலைப் புலிகளின் தலைமை அதுபற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. வன்னியில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களைத் திரும்பவும் மீட்டெடுக்கலாம் என்பதில் பிரபாகரன் நம்பிக்கையுடன் இருந்தார். கிழக்கு மாகாணத்திலிருந்து குறிப்பாக மட்டு. - அம்பாறை மாவட்டத்திலிருந்து பெருந்தொகையான படைகளை வன்னிக் களத்தில் அரசு குவித்திருந்தது. இதனால், கிழக்கின் பெரும் பகுதிகளை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். கிழக்கில் இராணுவ நெருக்கு வாரத்தைக் குறைத்து அங்கு புலிகளின் விரிவாக்கத்துக்கு ஜெயசிக்குறுச் சமர் வழிகோலியது எனலாம்.

(தொடரும்..)



# ஒரு கனவு நனவாதல்:

## யாழ். நகர மண்டபம்

**பொ.வாகீசன்,** (மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம் மாநகர சபை)

யாழ்ப்பாணம் நகர சபையானது 1949 ஆம் ஆண்டு மாநகர சபையாகத் தரமுயர்த் தப்பட்ட வேளையில் தனக் கென ஓர் தனித்துவமான யாழ். நகர மண்டபத்தில், வான் பார்வையில் முதலாம் உலக மகா யுத்த விமானம் போன்று காட்சியளித்து பெரு மிடுக்கோடு அமர்ந்திருந் ததை அதனைத் தரிசித்த அனைவரும் அறிவர். 1980 களின் பின்னே பிறந்தவர்கள் புகைப்படங்களில் பார்த்தி ருப்பர். 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டபோது மாநகரசபைக் கட்டடம் சேதங் களுக்கு உள்ளானது. அது தொடர்ந்த யுத்த நிலைமையால் சிறிது சிறிதாக சேதமடைந்து முற்று முழுதாக அகன்று உருவான வெற்றிடை வெளியால் பண்ணைக் கடலின் உப்புக் காற்று உள்நுழைந்து யாழ்நகரை நிரப் பியபோது, அந்த வெள்ளை மாளிகை யின் வெறுமை பலருக்கும் நெஞ்சை முட்டியது. நல்லூர்க் கந்தனின் அருட் கடாட்சம் தொடர்ச்சியாகவே மாநகர சபைக்கு இருந்துதான் வந்துள்ளது போலும். அது இயங்குவதற்கு தள மொன்று இல்லாமல் அங்கலாய்த்து நின்ற போது ஆதரவுக்கரம் தந்தது நல் லூர்ப் பெருங்கோயில். அக்கோயிலின் பெரிய தோட்டக் காணியை ஐம்பது வருடக் குத்தகைக்குப் பெற்று அதில் மாநகர சபை தனது அலுவலகங்களை இங்கொன்றும் அங்கொன்றுமாகத் ஸ்தாபித்து இயங்கி வருகின்றது.

யுத்த நிலைமை குறைந்த அல்லது இல்லாதிருந்த காலங்களில் இம்மாநகர சபைக் கட்டடத்தை மீள நிர்மாணிக்க பல்வேறு எத்தனங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அதில் ஒரு வடிவ மாதிரி இன்னும் கண்ணாடிப் பேழை ஒன் றுக்குள் வைக்கப்பட்டு மாநகர சபை யின் மாநாட்டு மண்டப முன்றிலில் வைக்கப்பட்டுள்ளது. இன்னும் இரு வடிவ மாதிரிகள்; ஆவணங்களிலுள் ளன. இவற்றுள் இறுதியான, மாநகர சபை இயங்கிய காலத்தில் உருவாக் கப்பட்ட, வடிவமைப்பு ஒன்றினை மக்கள் கருத்துக்கு விட வேண்டிய தேவை ஒன்று எவ்வாறு எழுந்தது என்பது கீழே விவரிக்கப்படுகின்றது.

தற்போது செயற்பட்டு வரும் உலக வங்கியின் மூலோபாய நகரங்கள் அபி விருத்திக் கருத்திட்டத்தினுடைய உரு வாக்கலின்போது குறித்த நகர மண்ட டப் பகுதியினுடைய அபிவிருத்திக்காக வும் ரூபா 30 கோடி ஒதுக்கீடொன்று செய்யப்பட்டது. அதேநேரம் நிதி வழங்குநர்கள் பொதுவாகக் கேட்கும் மாநகர சபைப் பங்களிப்பாக ரூபா 10 கோடியை வழங்கக்கூடிய நிலைமை இருந்தது. இந்த நிதிக்கூட்டு, நகர மண்டபக் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கப் போதுமானதென்பதுடன் நல்லதொரு ஆரம்பம் பாதி நிறைவுற் றதற்குச் சமன் என்ற ஆங்கிலப் பழ மொழியும் நினைவுக்கு வந்திருந்தது. கிடைத்த வாய்ப்பினை நழுவவிடாது, இறுதியாக இருந்த நகர மண்டப வடிவமைப்பைப் பொதுமக்கள்கருத்து களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட ஆலோ சனை அமர்வொன்றில் மாநகர சபை வழங்கியது. இது கடந்த 2016ஆம் ஆண்டு வைகாசி மாத இறுதியில் நடந்தது. அங்கே பல்வேறு விதமான கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதில் பிரதான மாக நோக்கி நின்ற விடயம் மீள்நிர் மாணத்தின்போது பழைய நகரமண்ட பத்தை நினைவூட்டுவனவும், தற் போதைய அதிகரித்த இடத் தேவையும் கருத்திற்கொள்ளப்படவேண்டுமென் பதாகும். ஆலோசனை அமர்வின் முடி வில் முதல்வமைச்சரின் செயலாளராக இது தொடர்பில் இறுதி முடிவு எடுத்த லுக்காகக் குழுவொன்று நியமிக்கப் பட்டது. அக்குழுவில், யாழ்ப்பாணம் மாநகரசபையின்தேவைப்பாடுகளையும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளையும் உள்வாங்கி கட்டடக் கலையம்சங்களுடன் வடிவ மைக்கவென கௌரவ பொறுப்பேற்ற சிரேஷ்ட கட்டடக்கலை நிபுணர் சயந்தன் குமாரதாஸ் அவர்களும் ஓர் அங்கத்தவராகியிருந்தார். குழுவின் ஆலோசனைகளுடன் உருவான நகர மண்டப வடிவமைப்பு கடந்த பெப்ரவரி 12ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் நான்கு பத்திரிகைகளின் (தினக்குரல், காலைக்கதிர், வலம்புரி, உதயன்) ஊடக அனுசரணையுடன் பிரசுரிக்கப்பட்டு பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கோரப்பட்டன. பிரசுரத்தில் அறிவிக்கப் பட்ட இறுதித்திகதியன்று எழுத்துருவில் எதிர்பார்க்கப்பட்ட கருத்துக்கள் பெறப் பட்டபோதும், இன்னும் பலர் இந்நகர மண்டப மீள்நிர்மாணத்தை எதிர்பார்க் கும் தங்கள் ஆதரவை மனதாரத் தெரி வித்தனர். ஒருவர் என்னுடைய வாழ் நாளுக்குள் இதனை நேரில் தரிசிக்க வழிசெய்யப்படுமா? என வினவி யிருந்தார். கிடைக்கப்பெற்ற கருத் துக்கள் மற்றும் ஆலோசனைகளை எடுத்து நோக்கியபோது, அவை தங்களுக்குள் நகர மண்டபத் தேவை குறித்த பொதுவான நிலைப்பாட்டில் இருந்தாலும், அதன் கட்டடக்கலை தொடர்பில் முரண்பாடான நிலைகளும் காணப்பட்டன. சிலர் தூய திராவிடக் கட்டடக் கலை (Dravi dian Architecture) அலங்காரங்களுடன் இருந்தால் சிறப்பு என்று கருத்துத் தெரிவித்திருந்த அதே நேரம், இன்னும் சிலர் திராவிடக்கட்டடக்கலை அல்லாத எளிதும் காலனித்துவக் கட்டடக்கலை அம்சங்களின் (Colonial Style) உட் செருகலுடன் கூடிய எளிமையான கட்டடமாக இருத்தல் நன்று என்றனர். இந்நிலையில் இவ்விரு கருத்துக்களில் பொதிந்துள்ள விடயங்களை மிக அவதானத்துடன் உள்வாங்குகின்ற அதே நேரம், குறித்த நகரமண்டபம் இவ்விரு கருத்து முரண் நிலைகளின் சாதாரணகலவையாக மாத்திரம் இருந்து விடக்கூடாது என்பதிலும் கவனம் எடுக்கப்படுகிறது. அது தற்காலத்தி லுள்ள தேவைகளைச் சமாளிக்கக் கூடிய மரபு வழி வந்த நவீன நயம் வாய்ந்த கட்டடக்கலைப் பாங்கினைக் கொண்டதாக (Neo Classical Style) தனக்கே உரித்தான கலை அம்சத்தைத் தாங்கி நிற்க வேண்டும் எனத் தீர்மானிக் கப்பட்டது தவறென்றாகாது.

சாம்பலிலிருந்து எழுவது என்று மாநகர மக்களின் ஏகோபித்த எதிர் பார்ப்பை உந்தும் சொற்றொடராக்கி எடுத்துவரும் முயற்சிகள் இதுவரை நகர்ந் திருப்பது தொலைந்த அந்தக் கோயிலைத் தேடும் கூட்டுப் பிரார்த் தனையின் பலன் என்றுதான் சொல்ல முடியும்.

மாநகரத்தின் ஏகாந்தமும் எழிலும் நிறைந்த பகுதியில் அமைதியாக அமர்ந்திருந்த நகர மண்டபத்தின் தாமரை இதழ்களை வடிவொத்த கும்மட்டத்தினால் அது மிடுக்கொன்றைப் பெற்றுத்தான் இருந்தது. சாம்பலிலிருந்து எழும்போது முன்னரை விட பன்மடங்கு கம்பீரத்து டனும் முன்னையதை நினைவுறுத்தும் கும்மட்ட அமைப்புடனும் திகழ வேண்டு மென்பதுடன், அது மக்களை வெளி நிறுத்தி சேவைக்குக் கூப்பிடும் அரண் சுவர் போன்று அமையாது, இருகரம் நீட்டி அன்புடன் அழைக்கும் அமைப்பை யொத்து இருக்க வேண்டும் என்ற கட்ட டக் கலை நிபுணரின் 'கருத்துக்களை உள்வாங்கிய கலைப் படைப்பு' பிரமிப்பை ஊட்டுவதாகத்தான் உள்ளது. பிரமாண்ட மான நகர மண்டபக் கட்டடத்திற்குப் பொருந்தக் கூடிய விதமாகப் பழையதை நினைவுறுத்தும் கும்மட்டம் உயர்த்தப் பட்டுள்ளது.

மாநகர சபை எல்லையானது மண் டைதீவுச் சந்தியில் தொடங்குகிறது. அதில் யாழ் நகர் நோக்கி வருபவருக்குத் தென்படும் பிற்பக்கத் தோற்றத்திலும் கணிசமான அளவு சிந்தனையாடல் இருந்தது. நகர மண்டப தென்புறத்தேயுள்ள கடற்கரைப் பகுதியும் காலப்போக்கில் அபிவிருத்தி கண்டு மண்டபத்திற்கு மேலும் எழில் சேர்க்கும் என்பது மாநகர சபையின் நம்பிக்கையாகும். இக்கட்டட வடிவமைப்பில் அதிகம் படாடோபம் காட் டப்படவில்லை என்பதுடன் தேவைப் படும் இடங்களிலெல்லாம் திராவிடக் கட் டடக்கலை உட்புகுத்தப்பட்டிருக்கிறது.

கட்டடக்கலை என்பது தனியே கட் டட வெளித்தோற்றம் என்ற விடயத்தை மட்டும் சார்ந்ததல்ல. அது வெளியிலிருந்து உள்நுழைந்து செல்லும் விவரமான உருவ வியல் தொடங்கி ஆழமான தொழிற் பாட்டியல் சார்ந்த விடயங்கள் சார்ந்தது. மாநகர சபையின் தொழிற்பாட்டுப் பகுதி கள், இட ஒதுக்கீடுகள், இடங்களின் தள ஒழுங்கமைப்பும் அது செல்லும் பாங்கும், பயன்பாட்டுச் சேவை வழங்கலுக்கான ஆயத்தங்கள், தொழிநுட்பத் தேவைப்பாடு கள், குறுக்கான காற்றோட்ட வசதிகள், இயற்கை ஒளிச்செறிவு உள்ளெடுத்தல், உள்அமைப்புகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் சரியான முறையில் ஒருங்கி ணைக்கப்படல் வேண்டும். அப்போது தான் நகர மண்டபம் பூரணத்துவ மான கட்டடக்கலை வடிவமைப் பைப் பெறும். மாநகர சபை யினால் முன்வைக்கப்பட்ட தற்போதைய தேவைப்பாடு கள், அதிகரிக்க வல்ல தேவை வகைப்பாடுகள் மற்றும் சேவை விரிவாக்கங்கள் என்ப னவே கட்டட வடிவமைப்பில் முக்கியத்துவம் பெறுகின் றமை குறிப்பிடத்தக்கது.

மாநகர சேவை வழங்கல் செறிவும் ஆளணியும் 1980 களில் இருந்ததை விட 2010 களில் இன்னும் அதிகரித்துள் ளமையைக் கருத்திலெடுத்தே நகர மண்டபம் மூன்று தளங் களைக் கொண்டும் நான்கா வது தளத்தில் தனியே நவீன வசதிகளுடன் கூடிய கேட் போர் கூடத்தைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதலாவது தளத்தில் மக்கள் நேரடியாக சேவை பெறுகின்ற பகுதி களையும் இரண்டாவது தளத்தில் அம்மக்கள் அனுப்பிய பிரதி நிதிகள் கூடுகின்ற பகுதிகளை யும் மூன்றாவது தளத்தில் மாநகர சபையின் மக்கள் நேரடியாகத் தொடர் புறாத பகுதிகளையும் இவ் வடி வமைப்பு கொண்டமைந் துள்ளது. இங்கே சபைப் பகுதிகளுக்குத் தேவை யான இடஅளவுகள், எதிர்கால விரிவாக்கம் உள்ளிட்ட விடயங் களைக் கருத்திலெ டுப்பதற்கு உள்ளக கருத் தறியும் முறை (Internal Consultation) பின்பற்றப் பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

இதில் திட்டமிடப்பட்டுள்ள இன் னுமொரு விடயம் வரலாறுடன் தொடர்புடையது. வடக்குப் புறமுள்ள பிரதான வாயிலூடாக உள்நுழை கையில் வரும் மண்டபப் பகுதியில் மாநகர சபை உருவாக்கம், பழைய நகர மண்டப கால காட்சிப்படி மங்கள், அழிவுகளின் பதிவுகள், மீள் கட்டியெழுப்ப எடுத்த எத்தனங்களின் தொகுப்பு, எத்தனங்களில் பிந்தியதன் கருத்தறிகணிப்பு முதல் வரிசனைகள் உள்ளிட்ட காலம் வழிசமைக்கும் கால்கோள் விழா வரையான கூடுகள் ஆகியவற்றை நிரந்தர காட்சிப்படுத் தலுக்கான ஏற்பாடே அதுவாகும்.

மேலும் சக்தி சேமிப்பு அம்சங் களைக் கருத்தில் எடுத்தே விவரமான வடிவமைப்பு (Detailed Designs) மேற்கொள்ளப்படுகின்றது. கேட் போர் கூடம் உள்ளிட்ட உள்ளக வடி வமைப்பில் (Interior Designing) கட்டடக்கலை நிபுணரின் நிபுணத் துவ சேவையை மேலும் எதிர்பார்க் கலாம். அந்தக் கேட்போர் கூடம் பல்வேறு நிகழ்வுகளுக்கான தளமாக அமைய வேண்டும் என்பதும் உள்ள கத் தள வரைபடம் அமைய வேண் டிய முறையும் மாநகர சபையினரின் சமரசம் செய்து கொள்ள முடியாத தேவைகளாக என்று கட்டடக்கலை நிபுணருக்குத் தெரியப்படுத்தப்பட்டி ருக்கின்றது. இவ்வாறாக மக்கள் மன்றம் ஒன்று நகர மண்டபமாக சாம் பலிலிருந்து மெல்ல எழுகின்றது.

மாநகரசபையின் வேண்டுகோளுக் கிணங்க பல்வேறு சந்தர்ப்பங்களில் கருத்துக்களையும், ஆலோசனைக ளையும் முன்மொழிந்த சமூகப் பொறுப்புடைய சகலருக்கும் இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித் துக்கொள்வதில் அது பெருமிதங் கொள்கிறது. பொருத்தமான முறை யில் வடிவ மைக்குள்ளான டாக்டர் சுப்பிரமணியம் சிறுவர் பூங் காத்திடலுடன் பொருந்தி கம்பீரமாக, நட்புறவுடன் அமரப்போகும் யாழ். நகர மண்டபம் மாநகர மக்களுக்கு வழங்கப்படும் வரை அவர்தம் கனவு இமயளவும் பிரகாசம் நனவாக யாழ்ப்பாணம் மாநகர சபை அவர் களுடைய வாடிக்கையாளர் பிரதிநிதி யாக (Clients' Representative) என்றும் உறுதியாக நிற்கும். ★



# பெண்களே எதையும் செய்யலாம் எளிதாக...

★ வேலை செய்யும் போது, உங்களுக்கு பிடித்தமான இசையைக் கேட்டுக் கொண்டிருந்தால், களைப்பும் தெரியாது. மனமும் அமைதியாக இருப்பதை உணரலாம்.

★ நடைப் பயிற்சி செய்வது எளிமையான மனதுக்கு இனிமையான பொழுது போக்கு.

★ ஏற்கனவே உங்கள் வாழ்வில் நடந்த மனதுக்கு இனிமையான சம்பவங்களை அவ்வப்போது நினைவு கூறுங்கள். அதன் மூலம், மனதுக்கு புத்துணர்ச்சி ஏற்படும்.

★ பணிபுரியும் பெண்ணாக இருந்தால், உங்கள் பணியிடத்தில் சௌகரியமான தட்பவெப்ப நிலை உள்ளதா எனப் பார்த்துக் கொள்ளுங்கள். அது மிகவும் சூடாகவோ அல்லது குளிர்ச்சியாகவோ இருந்தால், உங்களுக்கு சோர்வையும் உற்சாகமின்மையையும் ஏற்படுத்தும்.

★ கணினியில் பணி செய்யும் போது, கண்களைக் குளிர்ந்த நீரில் கழுவுங்கள். அதுமட்டுமின்றி, உங்கள் கணினிக்கு அவ்வப்போது ஓய்வும் கொடுங்கள்.

★ அமைதியான இடத்தில் அமர்ந்து சிறிது நேரம் கண்களை மூடி தியானம் செய்யுங்கள். தினமும் காலையில் பிராணாயாமம் செய்து பழகுங்கள்.

★ கோபத்தை கட்டுப்படுத்துங்கள். கோபம் அடைந்தால், இரத்த அழுத்தம் அதிகரிக்கும். அதன் விளைவாக உடலில் பல்வேறு கோளாறுகள் ஏற்படும்.

இந்தக் குறிப்புகளை நீங்கள் பின்பற்றுவதன் மூலம், அழகு ராணிகளாய் புத்துணர்ச்சியுடன் நீங்கள் செயற்படலாம். முயற்சி செய்து தான் பாருங்களேன்!

# பட்டுப் புடைவை பராமரிப்பு!



★ பல முறை புடைவையை கட்டி இருந்தால், வெறும் தண்ணீரில் நனைத்து நிழலில் உலர வைக்க வேண்டும்.

★ புடைவையை ஒருமுறை கட்டி அவிழ்த்த பிறகு காற்றோட்டமான பகுதியில் உலர வைத்து பின் மடித்து வைக்க வேண்டும்.

★ சில மாதங்களுக்கு ஒரு முறை மடிப்பை மாற்றி மடித்து வைக்க வேண்டும்.

**பட்டுப் புடைவையின் தரத்தை இப்படி அறியலாம்!**

புடைவையை கறுப்பு நிற பலகையில் தேய்த்தால் வெள்ளியின் நிறத்தில் வெள்ளையாக வந்தால், அது அசல் பட்டு, போலிப்பட்டாக இருந்தால் செம்பு நிறத்தில் வரும்.

பட்டுப் புடைவையின் குஞ்சத்தை நெருப்பில் கொளுத்தினால் தீயில் பொசுங்கி கரியாகி, பூச்சியின் மணம் வந்தால் அது உண்மையான பட்டு. போலிப் பட்டாக இருந்தால் இத்தகைய மணம் வராது. தவிர, சாம்பலும் திரிதிரியாக நிற்கும்.

# இல்லத்தரசிகளுக்கு இனிய யோசனைகள்!



பெண்கள் பொதுவாக சமையலில் வெளுத்து வாங்குவார்கள். அவர்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. இருந்தாலும் அவர்களின் சமையலுக்கு உதவுவதற்காக சில யோசனைகள் இதோ:

★ தேயிலை வைத்திருக்கும் போத்தலில் உபயோகித்த ஏலக்காய் தோல்களைப் போட்டு வைத்திருந்தால் தேயிலை ஏலக்காய் மணத்தோடு சுவையாக இருக்கும்.

★ மழை, குளிர் காலங்களில் வடகம் நீர்த்துப்போய் நன்றாகப் பொரியாது. வெறும் எண்ணெய்யை அடுப்பில் வைத்துச் சூடேற்றி, அதில் வடகத்தைப் போட்டு, சற்றுப் புரட்டி எடுத்து விட்டு, பின்னர் மீண்டும் எண்ணெய்யில் பொரித்தால் நன்றாகப் பொரியும்.

★ வெங்காய ஊத்தப்பம் செய்யும்போது தோசை இரு புறமும் வெந்து இருந்தால்தான் சுவையாக இருக்கும். தோசையின் நடுப் பகுதியில் சிறு ஓட்டை போட்டு எண்ணெய் ஊற்றினால் விரைவில் வெந்தும், சுவையாகவும் இருக்கும்.

★ சமைத்த சோறு மிஞ்சிப் போய் விட்டால் அதைப் போல் இரண்டு மடங்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து அதில் பழைய சோற்றைக் கொட்டி, ஒரு கொதி வந்ததும் இறக்கி வடித்து விடவும். பின்னர் மறுபடியும் 5 நிமிடம் வடித்த சோற்றை அடுப்பில் வைத்து இறக்கினால் நீர்ப்பசை அகன்று புதிதாகச் சமைத்ததைப் போல் இருக்கும்.

★ பருப்பைச் சமைக்கும் போது ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூளையும், ஒரு தேக்கரண்டி நெய்யையும் அதற்குள் சேர்த்து விடுங்கள். அதிலிருந்து வரும் வாசம் பருப்பை விரும்பி உண்ணாதவர்களையும் விரும்பி உண்ண வைக்கும்.

★ பாண் காய்ந்து போய்விட்டால் எடுத்துத் தண்ணீர் கலந்து பிசைந்து விடுங்கள். நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, வெங்காயம், பூண்டு போன்றவற்றுடன் கொஞ்சம் உப்பைச் சேர்த்து மாவாக ஆக்கி விடுங்கள். கொஞ்சம் எண்ணெய்யைச் சுட வைத்து இந்தக் கலவையை வடை சுடுவது போல் போட்டு பொன்னிறமாகும் வரை பொரித்து விடுங்கள்.

★ தேங்காயைச் சரி பாதியாக உடைக்க வேண்டுமா? தண்ணீரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.

★ வெங்காயம் வதக்கும்போது சிறிதளவு சீனி சேர்த்தால் எளிதில் வதங்கி விடும்.

★ வெங்காயத்தைத் தோலோடு குளிர்ந்த நீரில் போட்டு பின்னர் நறுக்கினால் கண்களில் கண்ணீர் வராது.

★ காய்ந்த பழங்களைப் பராமரிக்க அதை வைத்திருக்கும் பாத்திரத்தில் 2-3 கராம்புகளை போட்டு வைத்தால் நீண்ட நாள்களுக்கு ருசி கெடாமல் இருக்கும்.

# லிப்ஸ்டிக் பயன்படுத்துபவரா? புற்றுநோய் ஆபத்து



அழகு சாதனப்பொருள்களில் மிக முக்கியமானது லிப்ஸ்டிக். இதனை உபயோகிப்பதால் வசீகர தோற்றம் கிடைக்கும். ஆனால் இது ஏற்படுத்தும் விளைவுகளோ மிக ஆபத்தானது.

தற்போது தயாரிக்கப்படும் லிப்ஸ்டிக்குகளில் அதிகளவு காரீயம் பயன்படுத்தப்படுகிறது.

இதனால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

குறைந்த அளவில் காரீயம் உள்ள பொருள்கள் உடல்நலத்துக்குத் தீங்கு விளைவிக்காது என்றாலும் அதை தொடர்ந்து பயன்படுத்துவது தவறு என்கின்றனர் ஆய்வாளர்கள்.

லிப்ஸ்டிக் தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள்களிலும், நிறத்திற்காக அதனுடன் சேர்க்கப்படும் பொருள்களிலும் அதிகளவு காரீயம் கலந்துள்ளது.

லிப்ஸ்டிக்கைப் பயன்படுத்தும் போது அதிலுள்ள காரீயம் தோலால் உறிஞ்சப்பட்டு இரத்தத்தில் கலக்கிறது. காரீயம் உடல் உள்ள ஈஸ்ட்ரோன் எனும் ஹோர்மோன் சுரப்பை அதிகரிக்கிறது. இந்த ஹோர்மோன் பெண்களுக்கு அழகு, வசீகர தோற்றம் போன்றவற்றை அளிக்கிறது. மேலும், லிப்ஸ்டிக் உபயோகிக்கும் போது உதட்டின் நிறம் கறுப்பாக மாறினாலோ அல்லது தோல் உரிந்தாலோ அந்த லிப்ஸ்டிக்கைப் பயன்படுத்தவே கூடாது.

மொடலிங் துறையிலும் சினிமாத் துறையிலும் உள்ளவர்கள் லிப்ஸ்டிக் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று. இவர்கள் காரீயம் பயன்படுத்தாத இயற்கைப் பொருள்களை உபயோகிக்கலாம். சிறுவயதிலேயே லிப்ஸ்டிக் உபயோகிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.

லிப்ஸ்டிக் உபயோகத்தைத் தவிர்ப்பதன் மூலம் சிறுநீரகம், கல்லீரல், நீரிழிவு, புற்றுநோய் போன்ற உடல்நல கோளாறுகள் உண்டாவதைத் தடுக்கலாம். காரீயம் கலந்துள்ள லிப்ஸ்டிக்கைக் கண்டறிவதற்கு அதனை சிறிது கையில் மேற்புறத்தில் தடவி அதன் மீது தங்க உலோகத்தைத் தேய்த்தால் கறுப்பு நிறமாக மாறும். அவ்வாறு மாறினால் அதில் காரீயம் உள்ளது.

**அனைத்தையும் புதைத்துவிட்ட மனிதர்களில் கிறிஸ்து**

எங்கெல்லாம் கல்லறையும் சாவும் உறுதியாக நிலைபெற்றுள்ளனவோ அங்கெல்லாம் ஆண்டவர் உயிர் வாழ்கிறார். தங்கள் நம்பிக்கை - கனவு மாண்பு - அனைத்தையும் புதைத்து விட்ட மனிதர்களில் கிறிஸ்து மீண்டும் உயிர்த்தெழுகிறார். இந்த நம்பிக்கை வழியில் நம்மை அழைத்துச் செல்லும் தூய ஆவியாருக்கு நாம் அனுமதி தரவேண்டும்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா 18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

**கல்லறை முன் நின்ற பெண்களின் முகங்களில் நம் முகங்களையும் காணமுடியும்**

கல்லறை முன் நின்ற பெண்களின் முகங்களில் நம் முகங்களையும் காணமுடியும். காயப்பட்டிருக்கும் நாம் மாற்றங்கள் வராது என்ற விரக்தியுடன் கல்லறைகளில் வாழ்வதற்குப் பழகிக்கொள்ளலாம். அல்லது வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்ற நிலைப்பாட்டையும் எடுத்திருக்கலாம்.

# யாழ் மாவட்டத்தில் முதல் இறை இரக்க ஆலயம் கிளிநொச்சி பிரமந்தனாறில் யாழ் ஆயர் இன்று திறப்பு



இன்று இறைஇரக்க பெருவிழா தினத்தில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கிளிநொச்சி பிரமந்தனாறில் யாழ் மறைமாவட்டத்தின் முதல் இறை இரக்க ஆலயத்தை இன்று திறந்து வைக்கின்றார். இது குறித்துபங்குத்தந்தை அ. அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் 'காலைக்கதிர்கிறிஸ்தவ செய்தி இதழுக்குக் கருத்து தெரிவிக்கும் போது -

இடைநடுவில் நிறுத்தப்பட்ட இவ்வாலய கட்டுமானப் பணிகளைக் கடந்த வருடம் திருத்தந்தையினால் பிரகடனப்படுத்தப்பட்ட இரக்கத்தின் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்க இறைவன் வல்லமை தந்தார் என்றார்.

இவ்வாலயமே யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் அமைந்துள்ள முதலாவது இறைஇரக்க ஆலயம் என்பதோடு இந்த மண்ணில் நடந்து முடிந்த யுத்தத்தின் நினைவுச்சின்னம் இதுவாகும். பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களுக்கு இல்லிடம் கொடுத்து அரவணைத்து அவர்களுக்கு நம்பிக்கை கொடுத்த இடம் இவ்வாலயம்'' - என்றும் அவர் கூறினார்.

## இத்தாலி பலியானோ சிறையில் காலடிகளைக் கழுவிய திருத்தந்தை

புனித வியாழனன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பலியானோ சிறைக் கைதிகளுடன் இயேசுவின் இறுதி இரவு உணவுத் திருப்பலியை நிறைவேற்றினார். திருத்தந்தை பிரான்சிஸ் 2013 ஆம் ஆண்டு தான் திருத்தந்தையாக பதவி யேற்ற ஒன்பது நாள்களிலேயே புனித வியாழன் திருப்பலியை உரோம் நகரின் இளையோர் சீர்திருத்தப்பள்ளியிலே நிறைவேற்றி அங்குள்ள இளங்குற்றவாளிகள் 12 பேரின் காலடிகளைக் கழுவினார். 2014 ஆம் ஆண்டு நோயுற்ற முதியோரைப் பாராமரிக்கும் ஓர் இல்லத்துக்குச் சென்ற திருத்தந்தை அங்குள்ளோருடன் காலடிகளைக் கழுவும் சடங்கை நிறைவேற்றினார். 2015 ஆம் ஆண்டு உரோம் நகரின் சிறைக் கைதிகளுடனும் 2016ஆம் ஆண்டு புலம்பெயர்ந் தோருடனும் இச்சடங்கை நிறைவேற்றினார். இவ்வாண்டு ஏறத்தாழ 70 சிறைக்கைதிகள் வாழும் பலியானோ சிறையில் 3 பெண் கைதிகள், ஓர் இஸ்லாமியர், ஓர் அர்ஜென்டீனா நாட்டவர், ஓர் அல்பேனியர் உட்பட 12 சிறைக்கைதிகளின் காலடிகளைக் கழுவினார். இந்த 12 பேரில் இருவர் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளாவர்.

## பாத்திமா நூற்றாண்டு விழாவை ஒட்டி வத்திக்கான் சிறப்புத் தபால் தலை

1917 ஆம் ஆண்டு பாத்திமா நகரில் அன்னை மரியா காட்சியளித்த புதுமை நிகழ்வின் முதல் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் மே மாதம் 13 ஆம் திகதி கொண்டாடப் படுவதையொட்டி மே மாதம் 4ஆம் திகதி வத்திக்கான் நாடு ஒரு சிறப்புத் தபால் தலையை வெளியிடவுள்ளது. 1917 ஆம் ஆண்டு மே மாதம் பாத்திமா நகரில் அன்னை மரியா ஆடு மேய்க்கும் சிறார் மூவருக்குத் தோன்றிய காட்சியை வெளிப் படுத்தும் வகையில் இந்தத் தபால் தலை வடிவமைக்கப் பட்டுள்ளது. இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் முதல் நாளன்று புனித பேதுரு பசிலிக்காவில் திறக்கப்பட்ட புனிதக் கதவருகே முன்னாள் திருத்தந்தையும் தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ஒருவரையொருவர் அணைத்தபடி நிற்கும் காட்சியை ஓவியர் இந்தத் தபால் உரையில் வடிவமைத்துள்ளார். புனிதர்கள் பேதுரு மற்றும் பவுல் இருவரும் உரோம் நகரில் கி.பி. 67 ஆம் ஆண்டு மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டனர் என்ற மரபையொட்டி இவ்வாண்டு சிறப்பிக்கப்படும். 1950 ஆம் ஆண்டு நிறைவின் நினைவாக, இவ்விரு புனிதர்களின்




உருவங்கள் பதிக்கப்பட்ட இரு தபால் தலைகள் மே மாதம் 4 ஆம் திகதி வெளியாகின்றன.

## ஓய்வு நிலை திருத்தந்தையின் 90 ஆவது பிறந்த நாள்



மிகக் கூர்மையான அறிவுத்திறன் - தெளிவான பேச்சுத்திறன் - கனிவான இதயம் - இவையே ஓய்வு நிலை திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அவர்களின் பண்புகள் என்று கடந்த 14 ஆண்டுகளாக 16 ஆம் பெனடிக்ற் அவர்களுக்கு தனிப்பட்ட செயலராகப் பணியாற்றிவரும் பேராயர் அவர்கள் தொலைக் காட்சி பேட்டியொன்றில் கூறியுள்ளார். ஓய்வு நிலை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களின் 90 ஆவது பிறந்த நாளான ஏப்ரல் 16 உயிர்ப்புத் திருவிழா ஏப்ரல் 17 அன்று தன் பிறந்தநாளை மிக எளிய முறையில் தன் நெருங்கிய நண்பர்களுடன் அவர் கொண்டாடினார். இன்றைய சூழலில் திருஅவையை வழிநடத்த சக்தி மிக்க ஒருவர் தேவை என்பதை உணர்ந் தமையாலேயே தன் பொறுப்பைத் துறக்க முடிவுசெய்தார் என பேராயர்அவர்கள் தன் பேட்டியில் மேலும் சுட்டிக் காட்டினார்.

### இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்

- திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

நல்லவராம்இறைவன்கடந்த 90 ஆண்டுகளில் எனக்கு ஆற்றியுள்ள நன்மைகளை நினைக்கும்போது எனது நெஞ்சம் நன்றியால் நிறைந்துள்ளது என ஓய்வு நிலை திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அவர்கள் 17 ஏப்ரல் 2017 அன்று நடைபெற்ற பிறந்த நாள் விழாவில் கூறினார். 2013 ஆம் ஆண்டில் பாப்பிறை தலைமைப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். திரு அவையின் 600 வருட வரலாற்றில் பாப்பிறை தலைமைப் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த முதல் திருத்தந்தையாவார்.

### உண்மையின் எண்ணங்கள்

## இயேசுவின் இறை இரக்கம் தரும் செய்தி

இயேசுவின் இறை இரக்கம் தரும் செய்தி மிகவும் சாதாரணமானது. கடவுள் நம்மை அன்பு செய்கிறார். எமது பாவங்களைக் காட்டிலும் அவரின் இரக்கம் பெரியது என்பதை நாம் உணர்ந்து அவரை நம்பிக்கையுடன் நாடி அவரின் இரக்கத்தைப் பெற வேண்டும். அதை அனுபவித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால் எல்லோரும் அவரின் மகிழ்வில் பங்கு கொள்ள வேண்டும். இது மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது இரக்கத்தைக் கேட்பது - இரண்டாவது இரக்கமாக இருப்பது. மூன்றாவதாக முழுமையாக இயேசுவில் நம்பிக்கைவைப்பது. நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன் என்று இறை இரக்க படத்தில் வரையப்பட்டுள்ளபடி எவ்வளவு தூரம் நாம் நம்பிக்கை வைக்கிறோமோ அவ்வளவு தூரம் இறை வரங்களைப் பெற்றுக்கொள்வோம்.

## மத நம்பிக்கை கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணி

சர்வதேச அளவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் மத நம்பிக்கை கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணி வகிப்பதாக தெரியவந்துள்ளது. இலங்கையில் கருத்துக் கணிப்பில் பங்கேற்ற 99 வீதமானவர்கள் தாங்கள் மத நம்பிக்கையுடையவர்கள் எனத் தெரிவித்துள்ளனர். இலங்கை, எதியோப்பியா, மலாவி, நைகர் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளின் மக்கள், உலகில் அதிகளவு மத நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மத நம்பிக்கை மிகவும் குறைந்த மக்களைக் கொண்ட நாடுகளின் வரிசையில் சீனா முன்னணி வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், 891 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0777165147, info@tcnlnet.com

# இலங்கையில் பாரதி

23

● முருகபூபதி - ஆஸ்திரேலியா

இலங்கையில் பாரதி நூற்றாண்டு விழாக்கொண்டாட்டங்களை முன்னிட்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மேற்கொண்ட சில பயனுள்ள பணிகளில், இலங்கை தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களின் ஒளிப்படக்காட்சியும் முக்கியமானது.

எழுத்தாளர்களின் படங்கள், பிறப்பிடம், வாழுமிடம், அவர்கள் எழுதிய நூல்களின் விவரம், இதர துறைகள் பற்றிய குறிப்புகளை உள்ளடக்கியதாக ஒவ்வொருவருக்கும் தனித்தனி அட்டைகள் தயாரிக்கப்பட்டன.

ஒவ்வொன்றும் A5 அளவில் பெரிதாக உருவாக்கப்பட்டன. கணினி வசதி இல்லாத அக்காலப்பகுதியில் சில ஓவியர்களின் உதவியுடன் குறிப்பிட்ட பதிவுகள் அட்டைகளில் எழுதப்பட்டன. இடது பக்கத்தின் மேல் மூலையில் எழுத்தாளரின் படம் ஒட்டப்பட்டது. இன்றுபோல் அன்று தமிழ் விக்கிபீடியா இருக்கவில்லை. google இல் தேடிப்பெறும் நவீனதொழில்நுட்பமும்இல்லை. மின்னஞ்சல் வசதியோ, உடன் தொடர்புகொள்ளும் கைத்தொலைபேசி வசதிகளோ அன்று இருக்கவில்லை.

பத்திரிகைகளில் செய்திகளை வெளியிட்டும், எழுத்தாளர்களின் முகவரிகளைத் தேடிக்கண்டுபிடித்தும், சங்கத்தின் உறுப்பினர்களின் முகவரிப்பட்டியலின் துணையுடனும் தொடர்பாடல் மேற்கொள்ளப்பட்டது.

அக்காலப்பகுதியில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் யாழ். இலக்கிய வட்டம், தேசிய கலை இலக்கியப் பேரவை, கொழும்பில் கலை, இலக்கிய நண்பர்கள் கழகம் மற்றும் பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வத்தின் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் அமைப்பு, மலையக எழுத்தாளர் மன்றம் ஆகியனவற்றுடன் கிழக்கிலும் தென்னிலங்கையிலும் சில கவிஞர்கள் அமைப்புகள் செயல்பட்டன.

முடிந்தவரையில் தொடர்பாடல்களை மேற்கொண்டாலும், எழுத்தாளர்களுக்கென்றே ஊறிப்போன இயல்புகள் இருந்தமையால் சிலர் தமது படங்களை தந்துதவ மறுத்தனர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் முரண்பட்டிருந்தவர்களின் சார்பில் எஸ்.பொன்னுத்துரையால் உருவாக்கப்பட்ட நற்போக்கு என்ற பெயரளவில் இயங்கிய குழுவினரும் வடக்கில் சித்தாந்த முரண்பாடுகளினால் சங்கத்தின் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருந்தவர்களும் தமது படங்களைத் தந்துதவ மறுத்தனர்.

எனினும் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா தமது மல்லிகை இதழ்களின் முகப்புகளில் ஏற்கனவே பதிவுசெய்த பலரது படங்களைத் தந்துதவினார்.

குறிப்பிட்ட கண்காட்சிக் குழுவில் வேல் அமுதன், லெ. முருகபூபதி ஆகியோர் அங்கம் வகித்தனர். சங்கத்தின் சார்பில் முருகபூபதி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கிருக்கும் எழுத்தாளர்களின் படங்களையும் குறிப்புகளையும் சேகரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தொடர்ச்சியாக இரண்டு நாள்கள் (1983 மார்ச் 19, 20 சனி ஞாயிறு தினங்களில்) நடைபெற்ற இக்கண்காட்சியை நாட்டின் பலபாகங்களிலுமிருந்து வருகைதந்த இலக்கிய ஆர்வலர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் கண்டு களித்து வியந்தனர்.

நூறுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் பற்றிய குறிப்புகளுடன் அவர்தம் படங்களும் இதில் இடம்பெற்றன.

இந்தக் கண்காட்சி பற்றி கொழும்பு பத்திரிகைகளும் பாராட்டி செய்திகளை வெளியிட்டன.



செ. யோகநாதன்



க.சிவப்பிரகாசம்

சுபைர் இளங்கீரன் இக்கண்காட்சி பற்றி தமது "ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும்" என்ற நூலில் விதந்து பாராட்டியுள்ளார்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. சங்கரலிங்கம் இக்கண்காட்சிக்குத் தேவையான மேசைதளபாடங்களையும் தந்து உதவியமையோடு, சில மேல் வகுப்பு மாணவர்களையும் கொழும்பு விழாக்கள் முடியும்வரையில் அவற்றில் தொண்டர்களாக பணியாற்றுவதற்கும் அனுமதியளித்தார்.



அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து செந்தமிழர் இயக்கம் என்ற புதிய அமைப்பை உருவாக்கியவரான வி. பொன்னம்பலம், நாடாளுமன்ற சபாநாயகர் பாக்கீர் மாக்கார், அவரது செயலாளர் அஸ்வர் மற்றும் நீதியரசர்கள் அப்துல்காதர், எச்.வி. தம்பையா, எஸ். வி. சிவசுப்பிரமணியம் உட்பட பெருந்திரளான மக்கள் இதனைக் கண்டு களித்தனர்.

தமிழகத்திலிருந்து வந்திருந்த ரகுநாதன், ராமகிருஷ்ணன், ராஜம் கிருஷ்ணன் ஆகியோர், தமிழகத்தில் கூட இத்தகைய ஒரு காட்சியை தம்மால் நடத்த முடியாதிருப்பதாக வருத்தம் தெரிவித்தமையுடன் சங்கத்தின் முயற்சியால் ஆச்சரியமுற்றனர்.

அவர்களின் அந்த வருத்தத்தின் பின்னணியில் இருப்பது எழுத்தாளர்களுக்கே உரித்தான ஆணவம் கலந்த சுயநலம்தான்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் நெகிழ்ச்சித்தன்மையும் கொண்டவர்.

தனிப்பட்ட விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் அனைவரையும் இந்தக்கண்காட்சியில் அரவணைக்க விரும்பினார். அதனால் பலருடனும் சிநேகபாவத்துடன் உறவாடக்கூடிய இருவரை இக்கண்காட்சிக்குப் பொறுப்பாக நியமித்து சுதந்திரமாக இயங்கச்செய்தார்.

படைப்பு இலக்கியம், விமர்சனம் உட்பட கலை இலக்கியத்துறையில் ஈடுபட்டவர்களின் ( தலைமுறை இடைவெளி பாராமல் ) படங்களும் குறிப்புகளும் இக்கண்காட்சியில் இடம்பெற்றன.

கொழும்பையடுத்து மட்டக்களப்பு, கல்முனை, யாழ்ப்பாணத்திலும் இக்கண்காட்சி நடைபெற்றது.


குறிப்பிட்ட வடிவமைக்கப்பட்ட அட்டைகள் யாவும் கொழும்பு கிராண்ட்பாஸ் வீதியில் வசித்த வேல் அமுதன் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தன. சங்கம் எதிர்காலத்தில் நடத்தவிருக்கும் நிகழ்ச்சிகளிலும் அவற்றை காட்சிப்படுத்தும் எண்ணம் இருந்தது.

அமிர்தலிங்கம் பார்த்துவிட்டுச்சொன்ன தவறவிடப்பட்டவர்களின் பெயர்களும் பட்டியலிடப்பட்டு மேலும் செம்மைப்படுத்தி அந்தக்கண்காட்சியை மீண்டும் நடத்த வேண்டும் என்ற சங்கத்தின் கனவு நனவாகாமல் கனவாகவே போய்விட்டமைக்கு 1983 ஜூலை மாதம் நடந்த இனக்கலவரம்தான் காரணம்.

தலைநகரில் தமிழர்களின் வீடுகள் தாக்குதலுக்கும் எரியூட்டலுக்கும் இலக்காகிய போது வேல் அமுதன் வீடும் பெரிதும் பாதிக்கப்பட்டது. எரிபொருள் எடுத்துவந்து வீடுகளை கொளுத்திய கயவர்களுக்கு குறிப்பிட்ட காகித அட்டைகள் பெரிதும் உதவியிருக்கவேண்டும். அனைத்து ஆவணங்களும் எரிந்து நாசமாயின. வேல் அமுதன் குடும்பத்தினர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

அதன்பின்னர் இலங்கையில் அத்தகையதோர் அரிய கண்காட்சி நடைபெறவேயில்லை. கணினியில் தரவிறக்கம் செய்து ஈழத்து எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றி அறிந்துகொள்ளக்கூடிய நவீன யுகத்தில் நாம் தற்பொழுது வாழ்கின்றோம்.

தமிழினம் அன்று இலங்கையில் சந்தித்த நெருக்கடிக்குள் அரியசேகரிப்புகள் ஆவணங்கள், நூல்கள் அழிந்தன. ஆயினும், மகாகவி பாரதி எம்மவர்க்கு தனது பின்வரும் கவிதை ஊடாக தன்னம்பிக்கை தந்திருக்கிறார்





தேடிச் சோறு நிதந் தின்று
பல சின்னஞ் சிறு கதைகள்
பேசி
மனம் வாடித் துன்பமிக
உழன்று
பிறர்வாடப் பல செயல்கள்
செய்து
நரை கூடிக் கிழப்பருவம்
எய்தி
கொடுங் கூற்றுக் கிரை
யெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப்
போலே
நான் வீழ்வே னென்று
நினைத்தாயோ...?

பாரதி சொல்லியிருப்பது போல் என்றைக்கும் வீழ்ச்சியற்ற சமூகமாக இயங்கி அவரது கனவை புலம் பெயர்ந்து சென்றும் நனவாக்கிக்கொண்டிருக்கிறது இலங்கைத் தமிழினம்.

20- 03 -1983 ஆம் திகதி ஞாயிறன்று மாலை கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ. தம்பையாவின் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம் செயலாளர் பிரேம்ஜியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது.

சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட பாரதி கவிதைகள் நூலை சிங்கள எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் லீல் குணசேகரவெளியிட்டு வைத்தார். பேராசிரியர் சுசந்த மகேந்திர நூல் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

மொழிபெயர்த்த கே.ஜி. அமரதாச, ரத்ன நாணயக்கார ஆகியோரைப் பாராட்டி கண் சிகிச்சை நிபுணரும் கலை இலக்கிய ஆர்வலருமான டாக்டர் (திருமதி) இந்திரா சிவயோகம் உரையாற்றினார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரதி நூற்றாண்டை முன்னிட்டு தினகரன் - வீரகேசரி பத்திரிகைகளின் ஆதரவுடன் குறுநாவல், கவிதைப் போட்டிகளையும் நடத்தியிருந்தன.

அதற்கான பரிசில் வழங்கல் உரைகளை தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதனும், வீரகேசரி ஆசிரியர் க. சிவப்பிரகாசமும் நிகழ்த்தினர். அமிர்தலிங்கம், வி. பொன்னம்பலம் ஆகியோருடன் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த மூவரும் சிறப்புரையாற்றினர்.

சோமகாந்தன் நன்றி நவின்றார்.

பிரேம்ஜி தமது வரவேற்புரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''உலக மகாகவிகளுள் ஒருவராக அறிவுலகம் அங்கீகரித்துள்ள ஒரு மாபெரும் கவிஞனின் நூற்றாண்டுவிழா, அந்தக் கவிஞனின் நினைவுக்குப் பெருமிதம் அளிக்கக்கூடிய வகையில் பெருவிழாவாக நடைபெறுவது அவசியம்.

அந்த மாபெரும் கவிஞன் தமிழ் மக்களுக்கும் மனித குலத்துக்கும் ஆற்றிய பணிகளையும் இலக்கிய அறிவு வளர்ச்சிக்குச் செய்த மகத்தான பங்களிப்பையும் உரிய மதிப்போடு கௌரவிப்பது அனைவரினதும் தலையாய கடப்பாடாகும்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



## 23.04.2017 இல் இருந்து 29.04.2017 வரை

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 10 ஆம் நாள் துவாத சித்திதி பி.இ. 2.26 மணி வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ. 1.40 மணி வரை. பின்னர் உத்தரட்டாதி. சித்தாமிர்தயோகம் முழுவதும். ராகு காலம்: மாலை 4.47 மணி முதல் 6.19 மணி வரை. சுபநேரம்: காலை 8.56 மணி முதல் 10.26 மணி வரை. இன்று வைஷ்ணவ ஏகாதசி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத தேய்பிறை துவாதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூரட்டாதி.

**சந்திராட்டமநாள்:** புனர்பூசம் 4 ஆம் கால், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.



**மேஷம்:** உயர்வான வாரம். கேட்ட இடத்தில் தடையின்றிப் பணம் வரும். எடுத்த காரியத்தில் வெற்றி கிட்டும். சிலருக்கு அரச பதவி கிடைக்கும். எதிரிகளிடமிருந்த தொல்லைகள் நீங்கி, காரியம் எளிதில் நடந்தேறும். பலமிக்க நண்பர்கள் சேர்க்கையும், ஆதரவும் கிடைக்கும். வழக்குகள் முடிவுக்கு வரும். சகோதரர்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் கிடைக்கும். தூரத்து உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகளாகச் செயற்பட்டு வந்தவர்கள் இவர்களுடன் உறவாடுவார்கள். வியாபாரம் நன்கு அபிவிருத்தியடையும்.



**ரிஷபம்:** விருத்தியான வாரம். வருமானம் அதிகரிக்கும். தொழிலில் மந்த நிலை மாறி சுறுசுறுப்பாக இருப்பார்கள். சிறந்த தொழில் வாய்ப்பு கிடைக்கும். வியாபாரம் விருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் விருத்தியடைவார்கள். அமைதியான வாழ்க்கைச் சூழ்நிலை ஏற்படும். சகோதர உறவு மேம்படும். சுய தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றமும், கடனைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் தேடிவரும். எடுத்த காரியங்களில் வெற்றியும், நண்பர்களின் உதவியும் கிட்டும். வாகன யோகம் உண்டாகும். அரச ஒத்துழைப்பு கிடைக்கும்.



**மிதுனம்:** இன்பமான வாரம். பொருளாதாரம் வளமடையும். வெளியூர் செல்லும் சந்தர்ப்பம் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். முக்கிய பிரமுகரின் சந்திப்புப் பயனுள்ளதாக அமையும். வெளிநாட்டு உறவினர்களின் வரவால் குடும்பத்தில் களிப்பும், கலகலப்பும் அதிகரிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்த தேக்க நிலை மாறி நல்ல முன்னேற்றம் கிட்டும். உற்ற நண்பர்கள் உதவியால் புதிய தொழில் தொடங்குவார்கள். பெண்களுக்குப் புதிய ஆடை, அணிகலன்கள் வந்து சேரும். சுயதொழில் செய்பவர்களுக்கு தொழில் வளர்ச்சி உண்டாகும்.



**கடகம்:** கவலையான வாரம். பணவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். உறவினர்கள், நண்பர்கள் பராமுகமாக நடந்து கொள்வார்கள். தொழிலின் அலைச்சல்களால் உடல் நலிவுறும். உத்தியோகத்தர்களுக்கு வசதியற்ற இடமாற்றம் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் தொல்லை கொடுப்பார்கள். மாணவர்களுக்கு ஊக்கம் குறையும். வேலை தேடுபவர்களுக்கு நல்லவேலை கிடைப்பது கடினம். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் உண்டாகும்.



**சிம்மம்:** இவ்வாரம் மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். எதிர்பார்த்த பணவரவு தாமதமாகும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவி செய்து மனக்குறையை நிவர்த்தி செய்வார்கள். வீடு, வாகனம் திருத்தச் செலவுகள் அதிகமாகும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் எடுக்க வேண்டும். வியாபாரத்தில் லாபம் குறையும். அதிக தூரப்பயணம் அசதியைத் தரும்.



**கன்னி:** நன்மையான வாரம். பணப்புழக்கம் தேவையைப் பூர்த்தி செய்யும். முதலீடுகள் நல்ல லாபகரமாக இருக்கும். உற்ற நண்பர்களின் சந்திப்புப் பயனுள்ளதாக இருக்கும். சிலருக்குத் தெய்வ வழிபாடுகளில் ஈடுபாடு அதிகரிக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் நன்மையும், ஒற்றுமையும் நிலவும். தொழிலில் ஏற்பட்ட இன்னல்கள் தீரும். வியாபாரம் நன்கு முன்னேற்றம் அடையும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். விரும்பியபடி புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வார்கள்.



**துலாம்:** இனிமையான வாரம். பணவரவு திருப்தியைத்தரும். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். நீண்ட நாள் தொடர்பில்லாத நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியைத் தரும். எடுத்த காரியத்தை முடிக்கும் வேகம் ஏற்படும். இதுநாள்வரை பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். சகோதர உறவு பலப்படும். உத்தியோகத்தர்கள் பணிபுரியும் இடங்களில் ஒற்றுமையும், ஒருவருக்கொருவர் அனுசரித்துச் செல்லும் பண்பும் நிலைத்திருக்கும். சுற்றத்தாருடன் நேசமாக இருப்பார்கள்.



**விருச்சிகம்:** யோசனையான வாரம். தனவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். மூத்த சகோதரர்களுக்குள் சிறு சச்சரவு தோன்றி மறையும். உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களிடம் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. கொடுக்கல், வாங்கலில் மந்தநிலை ஏற்படும். செய்யும் பணியில் நெருக்கடிகள் உண்டாகும். உறவினர், நண்பர்களின் உதவி, ஒத்தாசைகள் குறையும். சுற்றத்தாருடன் மனவேற்றுமையும், தேவையற்ற சச்சரவும் உண்டாகும்.



**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கும். செலவுகள் மாறிமாறி வரும். வாகனங்களுக்குப் பழுது பார்க்கும் செலவு வரும். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வது நல்லது. வியாபாரம் ஏற்றம், இறக்கமுமாக இருக்கும். சுப காரியங்களுக்கு செல்வதில் செலவு செய்ய வேண்டிவரும். பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளதால் கடன் படாமல் பார்த்துக் கொள்வது நன்மையைத் தரும். சகோதரர்களுடன் அளவாகத் தொடர்பு வைத்துக் கொள்வது நன்மையைத் தரும்.



**மகரம்:** இனிமையான வாரம். பணப்புழக்கம் திருப்தியைத்தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பு கிட்டும். தொழில் சிறக்கும். வெளிவட்டாரப் பழக்கம் நன்மையைத் தரும். உத்தியோகத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் குறையும். நீண்டகாலம் காணாதிருந்த சகோதரரைக் கண்டதால் மகிழ்ச்சி உண்டாகும். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரும். தைரியமும், துணிச்சலும் உறுதுணையாக இருக்கும். சிலர் குடும்பத்துடன் சேர்ந்து இனிய சுற்றுலா செல்வார்கள். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.



**கும்பம்:** அனுகூலமான வாரம். பணவரவு சரளமாக இருக்கும். வியாபாரத்தில் இருந்த தேக்கநிலை மாறி தொழில் மேன்மையடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் புதிய அனுபவங்கள் கிட்டும். கொடுத்த இடத்தில் பணம் வசூலாகும். கடன்களும் தீரும். சிலருக்கு அந்நிய தேசப் பயணம் அனுகூலமாகும். திருமண காரியங்கள் அனுகூலமாகும். பெண்களின் சுயதொழில் முயற்சி வெற்றியடையும்.



**மீனம்:** துன்பமான வாரம். பொருளாதாரம் நலிவடையும். குடும்ப அமைதி குறையும். புத்திரர்களுடன் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது. உடல் உபாதைகளால் தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டிவரும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற அதிக சிரத்தை எடுக்க வேண்டிவரும். சொத்து சம்பந்தமாய் உறவினருடன் சச்சரவு உண்டாகும். மாணவர்களுக்கு ஞாபக மறதி அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த உயர்வுகள் தடைப்படும்.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

சந்தியடியில் வாத்தியார், ஏரம்பர்,ஜீவன்,ரூபன், பேப்பர் தம்பி,கச்சான்விற்கும்செல்லாச்சி என எல்லோரும் கூடியிருந்தனர்.

''நாட்டிலை தேர்தல் கெதியிலை வரும்போலை இருக்கு'' என்று ஆருடம் கூறியபடியே, கச்சான் கடகத்தைத் திறந்தாள் செல்லாச்சி.

''இதென்ன புதுக்கதை, உள்ளூராட்சித் தேர்தல்களும் இப்போதைக்கு இல்லை என்று சொல்லுகினம்.பிறகு எப்பிடித் தேர்தல் வரும்?''என்று கேட்டார் ஏரம்பர்.

இதற்கு சிரித்தபடியே செல்லாச்சி ''எங்கடை தலைவர்மார், திடீரென்று 'மக்களுக்காகப் பதவிகளைக்கூட தூக்கி எறிவம், விலகுவம்' என்றெல்லாம் வீரவசனம் கதைக்கினம்.அதுதான் கெதியிலை தேர்தல் வருமென்றால், கொஞ்ச நாளைக்கு இருக்கிற பதவியை விட்டு விலகிறது நோகாத வேலைதானே'' என்று சொன்னாள்.

''சரி விடுங்கோ,இதையும் சொல்ல உரிமை இல்லையென்றால்,அவையும் எப்பிடித்தான் அரசியல் நடத்திறது?'' என்று கேட்டான் ரூபன்.

''அரசியல்வாதிகளைப்பற்றிக் கதைக்கும்போதுதான்,பாழாய்ப்போன பொலித்தீன் ஞாபகம் வருகுது. பூமிதினத்திலிருந்து பொலித்தீன் பாவனைக்குத் தடையாம்''என்றான் ஜீவன்.

''அதிலை எனக்கு ஒரு சந்தேகம்,பொலித்தீன் பாவனைத் தடை என்று சொன்னால், சாப்பாடு கட்டவும்,சாமான்களை கொண்டு போகவும், பொலித்தீனைப் பாவிக்கக் கூடாது என்று சொல்லுகினம்.ஆனால், கடையிலை விக்கிற சாமான்களிலை முக்கால்வாசி, பொலித்தீனிலைதானே பொதி செய்யப்பட்டிருக்கு.அதுகளுக்குத் தடை இல்லையோ? அதோடை,மாற்றுவழிகளைச் சொல்லும்போது, நடைமுறையோடை ஒத்துவாறமாதிரியும் சொல்ல வேணும். கடும் காத்துக் காலத்திலை, வாழையிலை கிழிஞ்சு தட்டுப்பாடு இருக்கும்.இப்ப பொலித்தீனுக்குப் பதிலாக வாழையிலையைப் பாவிக்கச் சொல்லுறவை, இதுகளையும் யோசிக்க வேணும் எல்லே.மற்றப்படி பொலித்தீன் பாவனைக்குத் தடை கொண்டு வாறதை பாராட்டத்தானே வேணும் ''என்றாள் செல்லாச்சி.

''அதுகளையும் படிப்படியாக நிறுத்துவினம்.எல்லாத்துக்கும் நளினம் விட்டுக் கொண்டிராமல், எங்களாலை முடிஞ்ச வரைக்கும் ஒத்துழைக்க வேணும்''என்று சொன்னார் ஏரம்பர்.

இதனைத் தலையசைப்பால் மறுத்த வாத்தியார் ''பொலித்தீன் தடை என்பது நல்ல விசயம்தான் ஏரம்பர்,அதற்காக எதிர்க்கேள்வியே கேட்கக்கூடாது என்ற நிலையும்,மக்கள் தங்கடை கருத்தைச் சொல்லுவதை சகிக்க முடியாத அதிகார மன நிலையும், பொலித்தீனாலை வாற தீமையை விட மோசமானவை.அரசாங்க நிர்வாகம் என்பது சாதாரண சனத்துக்கு சம்பந்தம் இல்லாத விசயம் மாதிரி இப்ப ஆகீட்டுது. அப்பிடிச் சொல்லுறதை விட, அரசியல்வாதிகளும், அதிகாரிகளும்,தங்கடை சுகத்துக்கு - ஒருத்தரும் தங்களைக் கேள்வி கேட்டுக் குடையக் கூடாது என்பதற்காக -, அப்பிடி ஆக்கீட்டினம். முதலில் மாத்தப்பட வேண்டியது இதுதான்.'' என்று சொல்லியபடியே விறைத்த கால்களை மாற்றிப் போட்டுக் கொண்டார் வாத்தியார்.

''உண்மைதான் வாத்தியார்'' என்று ஆமோதித்த ரூபன், ''அரச அலுவலகமாக இருக்கட்டும் அல்லது தனியார் நிறுவனமாக இருக்கட்டும், அவர்களின் நடைமுறைகளால் அல்லது விதிமுறைகளால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஏதும் கேட்டால், அங்கே வேலை செய்யிறவை,அதனை தங்களோடை தனிப்பட்ட முறையிலை பிரச்சினைப்படுகிற மாதிரி எடுத்துக் கொண்டு, எதிர்வினை காட்டுகிறதுதான் ஏனென்று விளங்குதில்லை.'' என்று நாட்டுநடப்பைச் சொன்னான்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பேப்பர் தம்பி, நீண்டதொரு பெருமூச்சை இழுத்து விட்டான்.பின்னர் கதைக்கத் தொடங்கினான்.

''எங்களுக்குச் சகிப்புத்தன்மைக்கும் அடிமைத்தனத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் போட்டுது.அதையும்விட, அடிமைத்தனத்தை, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு என்று அலங்காரமான பெயர்களுக்குள்ளை ஒளிச்சு வைச்சு, எங்களை நாங்களே ஏமாத்திக் கொண்டிருக்கிறம்.' தமக்கு என்ன நடந்தாலும் கோபப்படாத, அதனை எதிர்த்துக் கேள்வி கேட்காத ஒரு சமூகம், நிச்சயம் பரிணாம வளர்ச்சியில் பின்னோக்கித்தான் பயணிக்கும்' என்று கிட்டடியிலை வாசிச்சனான்.அதாவது,தனக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்பதை அறிந்து, அதனை எதிர்த்து கேள்வி கேட்பதன் மூலமே, ஒரு சமூகம் அடுத்த கட்டத்துக்கு நகர்கிறது'' என்று சொல்லி நிறுத்தினான் பேப்பர்தம்பி.

''என்ன தம்பி செய்யிறது?'' என்று வேதனையாகக் கேட்ட வாத்தியார், ''தனக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தட்டிக் கேட்டாலோ,தனது நியாயமான உரிமைக்காக எதிர்த்துக் கேள்வி கேட்டு,சண்டை போட்டாலோ, அவரை நாகரிகமற்ற காட்டுமிராண்டி என்று மற்றவர்களை நினைக்க வைச்சிருக்கினம். அதேநேரம், தம்மீது திணிக்கப்படும் அடக்குமுறைகளை அமைதியாக ஏற்று, அடங்கிப் போகின்ற ஒருவரை,நாகரிகமானவர் என்றும் பொதுவாக நம்ப வைச்சிருக்கினம்.நாங்களும் அதையே உண்மையென்று நம்பி, தொடர்ந்து மந்தைக்கூட்டமாக அடுத்தவர் பின்னாலையே போகப் பழகி விட்டோம்''என்று சொன்னார்.

''சரியாகச் சொன்னியள்'' என்று சிலாகித்த ரூபன், தனது அனுபவத்தைச் சொல்லத் தொடங்கினான்.

''முந்தநாள் வங்கியொன்றுக்குப் போய்,காசு போட வரிசையிலை நின்றன்.அப்ப ஒரு பெண்மணி வந்தார்.வந்தவ வரிசையின்றை நீளத்தைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினா. பிறகு வரிசையிலை நிக்கிற ஆக்களை உதாசீனப்படுத்திவிட்டு,நேராகக் காசாளரிடம் போய்சிரித்தபடியே, வங்கிப்புத்தகத்தையும் காசையும் நீட்டினார்.நான் உடனே,'அம்மா நீங்கள் செய்யிறது சரியில்லாத செயல்'என்று கொஞ்சம் சத்தமாகச் சொன்னேன்.அவவிட்டை புத்தகத்தை வாங்கக் கையை நீட்டின காசாளரும்,கையை பின்னுக்குஇழுத்துக் கொண்டார். உடனே மற்ற ஆக்களும் சத்தம் போட, அவ பின்னாலை போட்டா. ஆனால், வங்கியிலை வேலை செய்யிற ஒருத்தர் வந்து, 'வங்கியிலை ஏன் சத்தம் போடுறியள், கொஞ்சம் மரியாதையாக நடவுங்கோவன்' என்று எங்களிலை பிழை சொல்லுறார். ஒரு ஆள் விடுற பிழையைத் தட்டிக்கேட்டால், அது நாகரிகமற்ற செயல் என்ற மனப்பான்மை இப்பிடித்தான் உருவாக்கப்படுகுது.'' என்று கூறி முடித்தான் ரூபன்.



## எதிர்க் கேள்வி கேட்காத சமூகத்துக்கு முன்னேற்றம் என்பதே கிடையாது!

''யாருக்குத் தெரியும்.அந்தப் பொம்பிளை,அவருக்கு வேண்டப்பட்ட ஆளாக இருக்கும். அவரிண்டை துணிவிலை தான்,அவ வரிசையை விட்டு முன்னுக்குப் போய் நின்றவ போலை இருக்கு'' என்று சொன்னாள் செல்லாச்சி.

''போராட்டம் என்பதே, ஏதோ மிகப்பெரிய விசயங்களுக்காக மட்டுமே நடத்தபடுவது என்று நாங்கள் தொடர்ச்சியாக நம்ப வைக்கப்படுகிறம்.ஒவ்வொரு தனிமனிதனும் ,தனது உரிமைக்காக,தனதளவில் எதிர்க் கேள்விஎழுப்புவதும் போராட்டம் தான்.இப்படி ஒவ்வொருவரும் கேள்வி எழுப்பினாலேயே போதும்.சமூகம் சரியான பாதையில் போகத் தொடங்கி விடும்'' என்று தீர்க்கமான குரலில் சொன்னான் பேப்பர்தம்பி.

''சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டத்தால் யாருக்குப் பயனோ தெரியாது,ஆனால், இப்ப தெற்கிலை மருத்துவம் படிக்கிற யாழ்ப்பாணத்து மாணவர்களின் பெற்றோருக்குத்தான் துயரம்''என்று புதுக்கதையைத் தொடக்கினான் ரூபன்.

''அந்தப் பிரச்சினைதான் இப்ப நீதிமன்றத்திலை இருக்கு. தீர்ப்பு வந்தால் பார்க்க வேண்டியதுதானே.'' என்றார் ஏரம்பர்.

''பிரச்சினை நீதிமன்றத்தில் இருந்தாலும் போராட்டம் நடத்தா விட்டால் தங்கடை பக்கம் பலவீனமாகப் போய்விடும் என்று சைட்டத்தை எதிர்க்கிறவை கருதுகினமாம். அதனால் அனைத்து மருத்துவபீட மாணவர்களும் கடந்த சில மாதங்களாகவே வகுப்புப் பகிஷ்கரிப்பில் இறங்கியிருக்கினமாம்.அவர்களில் தெற்கில் உள்ள மருத்துவ மாணவர்களைத் தானாம் ஊர்வலங்களுக்கு கூட்டிக் கொண்டு போகினம்.அதனால் வடக்கிலையிருந்து போய் அங்கு படிக்கும் மாணவர்களை ஊருக்குப் போகக் கூடாது என்று சொல்லி மறிச்சு வைச்சிருக்கினமாம். அவர்களுக்கு மாதாமாதம் காசை அனுப்புற பெற்றோர் போராட்டத்திலை ஏதும் நடந்திடுமோ என்றும் பயப்பிட வேண்டியிருக்காம்'' என்று விளக்கினான் ரூபன்.

''எல்லாப் பல்கலைக்கழகங்களிலையும் போராட்டத்தாலை மாணவருக்கு இதே பிரச்சினைதானே. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலை ஒருசில மாதங்களுக்கு முதல் மாசத்திலை ஒரே ஒரு கிழமைதான் பாடங்கள் நடந்ததாம். மற்ற மூன்று கிழமைகளும் வீட்டை போய் நின்றாலும், அறை வாடகை இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவையும் கட்டத்தானே வேணும் என்று பெத்தவை கவலைப்படுகினம். அங்கே வேலை செய்யிறவைக்கு கவலையில்லை.போகாட்டிலும் சம்பளம் வரும். வாக்குப்பொறுக்கிறவைக்கும் இதைப்பற்றிக் கவலையில்லை. அவைக்குப் பல வழிகளிலும் காசு வரும்.அவயின்றை பிள்ளைகள் வெளிநாடுகளிலை தானே படிக்கினம். துன்பம் எல்லாம் சாதாரண சனத்துக்குத் தானே.'' என்று சினந்தார் வாத்தியார்.

''தர்மதேசம் என்று தன்னைத் தானே சொல்லுகின்ற இந்தியாவுக்கு எதிராக,ஆபிரிக்க நாடுகள் கிளம்பியிருக்கிறது தானாம் இப்பத்தையப் பரபரப்புச் செய்தி''என்று இணையத்திலை பார்த்ததைச் சொன்னான் ஜீவன்.

''இந்தியாவை இந்துதேசமாக்க மோடி அரசு கஷ்டப்படுகுது, இந்தநேரத்திலை என்ன பிரச்சினையாம்?''என்று கேட்டார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கினான் ஜீவன்.

''உத்திரப்பிரதேச மாநிலம், நொய்டா என்ற இடத்தில் வெளிநாட்டு மாணவர்களும் படிக்கினமாம்.ஆபிரிக்க நாடான ,நைஜீரியாவில் இருந்தும் சிலர் அங்கு வந்து தங்கிப் படிக்கினம். கொஞ்ச நாளைக்குமுதல், உள்ளூர்மாணவன் ஒருவன் காணாமல் போட்டானாம்.பிறகு போதை மருந்துக்கு அடிமையாகி, அந்த மாணவன் தற்கொலை செய்து கொண்டான் எனத் தெரிய வந்ததாம்.இதற்கு ஆபிரிக்க மாணவர்கள்தான் காரணம் என்று சொல்லி,சிலர் அந்த மாணவர்களை அடிச்சு உதைச்சுப் போட்டினமாம்.பிறகு பொலி ஸாரின் விசாரணையில்,உள்ளூர் மாணவனின் சாவுக்கும்,அடிவாங்கிய நைஜீரிய மாணவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது தெரிய வந்ததாம்.இந்தப் பிரச்சினையை,நைஜீரியா மட்டுமில்லாமல் ஆபிரிக்க நாடுகள் பலவும் சேர்ந்து ஐ.நா. சபை வரை கொண்டு போயிருக்குதுகளாம்''என்று சொல்லி முடித்தான் ஜீவன்.

''இன்றைய நிலவரப்படி இந்தியாவில் 'மதத்தைக் காக்கிறோம்:கலாசாரத்தைப் பேணுகின்றோம்' என்று சொல்லிக் கொண்டு, வன்முறையைக் கையில் எடுக்கிற சம்பவங்கள் அதிகரிச்சுக் கொண்டே போகுதாம்'' என்றான் பேப்பர்தம்பி.

''தம்பி அது தர்மதேசம்,சும்மா வாய்க்கு வந்த மாதிரி கதைக்கக் கூடாது'' என்று வக்காலத்து வாங்கினார் ஏரம்பர்.

அவருடைய அப்பாவித்தனத்தைப் பார்த்துச் சிரித்தபடியே சொல்லத் தொடங்கினான் பேப்பர்தம்பி.

''இந்தியத் தேசியக் குற்றப் பதிவு ஆணையகத்தின் அறிக்கைப்படி,2014ஆம் ஆண்டைவிட 2015ஆம் ஆண்டில் மத வன்முறைகள் அதிகரிச்சிருக்காம்.2016 ஆம் ஆண்டு அறிக்கை இன்னும் வரவில்லை. ஆனால், இந்திய உள்துறை அமைச்சின் அறிக்கைப்படி, 2016ஆம் ஆண்டு மே மாதம் வரை 278 மத வன்முறைகளில் 38 பேர் பலியாகியும்,903 பேர் காயமடைந்தும் இருக்கினமாம். பண்பாட்டைக் காப்பதாகச் சொல்லிக் கொண்டு,வீதியில் நாகரிகமாக நடந்து செல்லும் ஆணையும் பெண்ணையும் கூட, கேட்டுக்கேள்விஇல்லாமல் தாக்குவதுடன், அதனை பெருமையாகப் படம்பிடித்து, சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுகிறார்களாம்'' என்று கூறி முடித்தான் பேப்பர்தம்பி.

''கடவுளே, இந்தநிலைமை இங்கே வந்துவிடாமல் காப்பாற்று'' என்று வாய்விட்டுக் வேண்டிக் கொண்டார் ஏரம்பர்.

''ஒரு நல்ல நாடு, குடிமக்களுக்கு அந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற ஏக்கத்தையும் பிடிப்பையும் பெருமிதத்தையும் அளிக்கவேண்டும்.எங்கேயாவது கடல்கடந்து ஓடிவிடமாட்டோமா என்ற அச்சத்தையும் பதற்றத்தையும்தரக்கூடாது என்று சொல்லுவினம். அப்பிடி ஒரு வாழ்க்கை இந்த மண்ணிலை எங்களுக்கு எப்போது கிடைக்கும் என்பது தானே எங்கடை ஏக்கமாக இருக்கு'' என்று சொல்லியபடி எழுந்து நடக்கத் தொடங்கினார் வாத்தியார்.

மற்றவர்களும் அவரைத் தொடர, கச்சான் கடையைக் கட்டினாள் செல்லாச்சி.

# 30 வருட காலப் போராட்டத்தில் நாங்கள் எதையும் பெறவில்லை

## இழந்தவைதான் ஏராளம் என்கிறார் வட மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன்

வவுனியா, ஏப்.23

30 வருட ஆயுதப் போராட்டம் மற்றும் அஹிம்சை போராட்டத்தில் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. இழந்தவை தான் ஏராளம்.

-இவ்வாறு வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கவலை தெரிவித்தார்.

வவுனியா இளைஞர் சேவைகள் மன்றத்தில் இளைஞர் கழக சம்மேளன அலுவலகத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் எமது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றப்பட்டு எழுச்சி பெற்ற காலத்தில் இளைஞர் சேவை மன்றத்தை தமிழ் மக்கள் நம்ப முடியாத ஒரு கால கட்டம் இருந்தது. அதே போல் சர்வோதயத்தை நம்ப முடியாத கால கட்டமும் இருந்தது.

அதை ஏன் நான் சொல்கின்றேன் என்றால், 1986 அல்லது 1987 இல் நெடுங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த மகேந்திரநாதன் என்பவர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்கு சென்ற காரணத்தால் ஒரு இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு காரணம் அந்த நேரத்தில் இளைஞர் சேவை மன்றத்தை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால், இன்று இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள் இந்த இளைஞர்கள் சேவை மன்றத்துக்குள் உள்வாங்கப்படுகின்ற போது நாங்கள் ஒட்டு மொத்தமாக சிங்களம், தமிழ், முஸ்லிலீம் என்னும் நிலைமை மாறி, நாட்டில் இந்த இளைஞர்கள் சேவைகள் மன்றம் எதிர்காலத்திலே சிறப்பாக நடைபெறும் என்பது எனது நம்பிக்கை.

அண்மையில் இளைஞர்களின் எழுச்சி பல இடங்களில் நிலைநாட்டப்பட்டிருந்தாலும் கூட, அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்வை ஒரு சர்வதேச தரத்துக்கு அல்லது யாருமே எதிர்பாராத விதத்திலே இந்திய மத்திய அரசை அடிபணிய வைத்தவர்கள் இந்த தமிழ் இளைஞர்கள். உங்களிடமும் அந்த சக்தி இருக்கின்றது. அந்த சக்தியை நீங்கள் சரியாகப் பயன்படுத்துங்கள். இந்த இளைஞர்கள் இப்படியான பயிற்சிகளில் கலந்துகொள்கின்றமையைப் பார்ப்பதற்கு சந்தோசமாக உள்ளது. உங்களுடைய காலத்தை வீணாக்காமல் உங்களுக்குத் தெரிந்த அல்லது கற்றுக் கொள்ளும் முயற்சியை எடுத்துக் கொண்டமை பாராட்டத்தக்க விடயம்.

அதே நேரம் இன்னுமோர் ஆபத்தையும் எங்களது சமூகம் சார்ந்து சொல்ல விரும்புகின்றேன். அதாவது, பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் விடயம்.

நீங்கள் தொடர்ச்சியாகக் கல்வியில் அக்கறை செலத்தியிருப்பீர்களானால் இங்கு வந்து பயிற்சி பெற வேண்டிய தேவை வந்திருக்காது. ஆகவே, பொறுப்பு வாய்ந்த எல்லோருக்கும் கடமையிருக்கிறது. நாங்கள் வீட்டுக்கொரு பட்டதாரியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் விடயத்தில் இளைஞர் சேவை மன்றம் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஏனெனில், 30 வருட ஆயுத போராட்டம், 30 வருட அஹிம்சைப் போராட்டம் ஆகியவற்றில் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. இனி எங்களால் கல்வியால் மாத்திரமே முன்னுக்கு வரக்கூடியதாக இருக்கும். கல்விக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுங்கள். உங்களுக்குப் பக்க பலமாக நாங்கள் இருப்போம். - என்றார். (ஐ-100)

## இலங்கையில் பாரதி...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அதேவேளையில் இவ்விழா சம்பிரதாயமானதொரு வைபவமாகவும் மாமூல் சடங்காகவும் மட்டுமிராது, மகாகவி பாரதி விட்டுச்சென்ற பாரம்பரியங்களை, இலட்சியங்களை, வாழ்க்கைத் தத்துவங்களை, இலக்கிய நோக்கங்களை மீள் நிறுவுவதற்கும் அந்த மகோன்னதமான இலக்குகளை வாழ்க்கை யதார்த்தமாக்குவதற்குமான ஓர் இயக்கமாக இந்த விழா அமைதல் வேண்டும்.

''தமிழை நேசித்து, தமிழ் மக்களை நேசித்த மகாகவி பாரதி'' தமிழ்ச்சாதி சகல உரிமைகளுடன் பல துறைகளிலும் ஒப்பு நிகரற்ற வளர்ச்சியை அடைய வேண்டும் என்று விரும்பினான். ஏனைய இனங்களுக்கு ஈடாகவும் சரி நிகர் சமதையாகவும் முன்னேறிச் செல்ல வேண்டுமெனவும் விழைந்தான். தமிழ்த்தேசிய இனம் தன் தலைவிதியைத் தானே நிர்ணயிக்கின்ற சுயநிர்ணய உரிமையுடன் ராஜ்யத்துவத்தை அடைவதன் மூலமே தனக்குரிய மகத்துவத்தை ஈட்டிக்கொள்ள முடியுமென நம்பினான்.-

''அதே வேளையில் தான் பிறந்த நாட்டை அவன் நேசித்தான். அந்த நாட்டின் விடுதலைக்காக, முன்னேற்றத்திற்காக, தர்மாவேசம்கொண்டு போராடினான். தேசத்தின் அரசியல் சுதந்திரம் வெல்லப்படுவதுடன், பொருளாதார சுதந்திரத்திற்காகவும் தேசியத் தொழில்கள் செழித்தோங்குவதற்காகவும் குரல்கொடுத்தான்.

''பெண்ணடிமைத்தனம், சாதிக்கொடுமை, சமூக ஏற்றத்தாழ்வு, இன ஒதுக்கல், வர்க்கச்சுரண்டல், ஒடுக்குமுறை போன்ற சமுதாயத் தீமைகளை ஒழித்து புதிய ஒப்பில்லாத சமுதாயத்தை - உலகுக்கொரு புதிய சமுதாயத்தை - உருவாக்கப் போரிட்டான். இவையே பாரதியின் இலட்சியங்கள்; பாரதியின் பாரம்பரியம்.

''பாட்டுத்திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட விழைந்த பாரதி, இலக்கியத்திற்கு ஆழமான சமுதாயப் பார்வையையும் இலட்சியப்பற்றையும் அளித்தான். பாரதியின் இந்த இலட்சியங்களை இலக்கியத்திலும் சமுதாயத்திலும் அரசியலிலும் வாழ்விலும் மீண்டும் நிலைநாட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக பாரதி நூற்றாண்டு விழா அமையவேண்டுமென நாம் கருதுகின்றோம்.

''இந்த இலட்சிய வேட்கையுடன் பாரதி நூற்றாண்டு விழா நாடெங்கிலும் கொண்டாட இன்றைய ஆரம்ப விழா வழி அமைத்துக்கொடுக்குமென எதிர்பார்க்கின்றோம்.'' என்றார்.

அமிர்தலிங்கம் உரையாற்றியபோது, ''எமது தமிழ்மொழியின் பெருமையைச்சொன்னால், நாம் தமிழரென்று எடுத்தியம்பினால், அதனை வகுப்புவாதம் எனச்சொல்லிவிடுகிறார்கள். உலகிலே பெரிய இனம் ஆரிய இனம். நாமும் தனி இனம். எம்மை நாம் ஆள நினைப்பது இனவெறியல்ல. அன்று நடந்த சத்தியாக்கிரகப்போரில் பனாகொடை தடுப்பு முகாமில் நான் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளையில் என்னிடமிருந்த நூல் பாரதியின் கவிதைகள்தான். பாஞ்சாலி சபதத்தை அங்கு மீண்டும் படித்தேன். அத்துடன் கரும்புத்தோட்டத்திலே கவிதையில், ''நாட்டை நினைப்பாரோ ...?எந்தநாளினிப்போயதைக் காண்பதென்றே அன்னை வீட்டை நினைப்பாரோ...? அவர் விம்மியழுங்குரல் கேட்டிருப்பாய் காற்றே...! என்ற வரிகளை படித்தவேளையில் எனது கண்கள் குளமாகின.

அவ்வாறு மனித உரிமைக்காகவும் மானிட நேசத்திற்காகவும் பாடிய பாரதி, எமக்கெல்லாம் ஒரு தீர்க்கதரிசி. இன்றைய தினம் பாரதியை சகோதர சிங்கள மொழியில் இந்த விழா அறிமுகப்படுத்துகிறது.

நாம் எமது தாய்மொழிக்காகவும் அதன் உரிமைக்காகவும் குரல்கொடுக்கும் அதேசமயம், சகோதர சிங்கள மொழிக்கும் பாரதியை அறிமுகப்படுத்துவதிலிருந்து தெளிவுபெறலாம்.'' எனத் தெரிவித்தார்.

''பாரதிநூற்றாண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட இலக்கியப்போட்டிகளில், காணி நிலம் வேண்டும் (செ.யோகநாதன்), ஒரு தாயின் குரல் (பிரேஸா ஹுஸைன்), அக்கினிக்குஞ்சு (செங்கை ஆழியான்) முதலான குறுநாவல்களை எழுதியவர்களும் கவிஞர்கள் பாண்டியூரான், மு. சோமசுந்தரம்பிள்ளை ஆகியோரும் பரிசுபெற்றனர்.

(தொடரும்)

## நுவரெலியா பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்வனவு தடையால் நஷ்டம்



நுவரெலியா மாவட்ட பசுப் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து கடந்த இரண்டு நாள்களாகப் பசும் பால் கொள்வனவு செய்யாத காரணத்தால் பால் பண்ணையாளர்கள் பெரும் சிரமத்துக்கும் நஷ்டத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதனால் பால் உற்பத்தியாளர்களால் சேகரிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சத்து இருபதாயிரம் லீற்றர் பால், சேகரிப்பு நிலையங்களில் பழுதடையும் நிலையில் அழிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பசுப்பால் பெலவத்த என்ற நிறுவனத்துக்கே வழங்கப்பட்டு வந்ததாகவும் அந்த நிறுவனத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக அவர்கள் பால் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் 21 ஆம் திகதி காலையிலிருந்து மாலை வரை பிரதேச பால் சேகரிப்பாளர்கள் தாங்கள் சேகரித்த பாலை பெற்றுக் கொள்ளுமாறு ரொத்தஸ் பால் பண்ணையில் அருகில் நின்றனர். அவர்கள் பால் பெறாமையால் 10 ஆயிரம் லீற்றர் பால் வீணாக நீரோடையில் விடப்பட்டுள்ளன.

இது குறித்து பால் சேகரிப்பாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,-

கடந்த சில தினங்களாக பெலவத்த பால் கொள்வனவு நிலையம் பசும் பாலைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளது. இதனால் எங்களிடம் இருந்து பால் சேகரிக்கப்படவில்லை.

நாங்கள் நூற்றுக்கணக்கானோர் இந்த பசுப்பாலை நம்பியே வாழ்கிறோம்.

பலர் கடன்பெற்று தான் இந்த சுய தொழிலை செய்து வருகின்றார்கள். ஆனால், திடீர் என்று பசும் பால் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டதால் நாங்கள் என்ன செய்வது? அரசு பால் உற்பத்தியைப் பெருக்குமாறு கூறி ஆலோசனைகளை செய்து வருகிறது.

ஆனால் பாலைக் கொள்வனவு செய்யாவிட்டால் எவ்வாறு பால் உற்பத்தியை பெருக்குவது.

பிரதேச பால் சேகரிப்பாளர்களிடம் சுமார் ஒரு லட்சத்து 2 ஆயிரம் லீற்றர் பால் தேங்கி பழுதடைந்துள்ளது. இதனால் பால் உற்பத்தியாளர்களுக்கு சுமார் 90 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.-என்று தெரிவித்தனர்.

(ஐ)

## வடக்கு மாற்றுத் திறனாளிகளுக்கு கிளிநொச்சியில் விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஏப்.23

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகமும், உயிரிழை நிறுவனமும் இணைந்து வட மாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு விழாவை ஜூலை மாத இறுதியில் கிளிநொச்சியில் நடத்தவுள்ளன.

இது தொடர்பான ஆயத்தக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் மாவட்ட அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக இயங்கும் நிறுவனங்கள், முதியோர் சங்கங்கள், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் உட்படுத்தல் கல்விக்கான ஆசிரிய ஆலோசகர் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். கடந்த வருடம் வவுனியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாகாண விளையாட்டு விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-70)



# தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 140 ஆப்கன் வீரர்கள் பலி!


காபூல், ஏப். 23

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் உள்ள மசார்-ஐ-சரீப் நகரத்திலேயே தலிபான்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 140 இற்கும் மேற்பட்ட ஆப்கன் வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அமெரிக்க இராணுவ செய்தித் தொடர்பாளர் தகவல் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்க தலைமையும், நேட்டோபடைப்பிரிவின் உதவி ஆணையருமான ஜோன் நிக்கோல்சன் இந்த தாக்குதல் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



அந்த அறிக்கையில், மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த வீரர்கள் மற்றும் சமையல் பணிகளில் ஈடுபட்டிருந்த 140 இற்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 209 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த வீரர்கள் இந்த தாக்குதலில் உயிரிழந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து ஆப்கன் கொமாண்டோ படை அதிகாரி தெரிவிக்கையில், தலிபான்களின் இந்தத் தாக்குதலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கன் பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் தவ்லாத் வசிரி தெரிவித்தவை வருமாறு:-

ஆப்கன் வீரர்களின் சீருடைகளுடன் வந்த தீவிரவாதிகளே இந்தத் தாக்குதல் சம்பவத்தை நிகழ்த்தியுள்ளனர்.

10 பேர் இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்றும், அதில் 7 பேர் தாக்குதலின் போது உயிரிழந்துள்ளனர். மீதமுள்ள 3 பேரில் 2 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒருவரை மட்டும் இராணுவத்தினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுள்ளனர். அதற்காக இராணுவ ஹெலிகொப்டர்கள், அம்புலன்ஸ்கள் பயன்படுத்தப்பட்டன.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஆப்கானிஸ்தானில் சுமார் 50 பேர் பலியாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெனிசுலா ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டம்:

# ஒரே நாளில் 11 பேர் பலி!





கராகஸ், ஏப். 23

வெனிசுலா ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் இதுவரை 11 பேர் பலியாகியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெனிசுலா ஜனாதிபதியை பதவி விலகக்கோரி அந்நாட்டில் பெரும் போராட்டம் வெடித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அங்கு போராட்டம் தீவிரமடைந்ததில் 11 பேர் பலியாகினர்.

எண்ணெய் வளம் நிறைந்த நாடு வெனிசுலா. எனினும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவை அடுத்து அங்கு பணவீக்கம் அதிகரித்தது.

இந்நிலையில், அன்றாடம் வாங்கும் அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதில் மக்கள் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்தனர்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட எதிர்க்கட்சியினர் ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட பல தலைவர்களைத் தற்போதைய வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும், நிக்கோலஸ் மதுரோவை பதவி விலக வலியுறுத்தியும் போராட்டம் நடந்து வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை மத்திய கராகஸ் மற்றும் முக்கிய நகரங்களில் போராட்டம் நடத்தப்பட்டது. நாடு முழுவதும் தங்கள் நாட்டு ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் அணி திரண்டு போராட்டம் நடத்தினார்கள். இதனால் அந்நாட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தால் நேற்று முன்தினம் மட்டும் 11 பேர் உயிரிழந்துள்ளனர். பொலிஸாருக்கும் போராட்டக்காரருக்கும் இடையில் இடம்பெற்ற இந்த மோதலிலேயே அவர்கள் பலியாகியுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, வெனிசுலாவில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 20 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 126 பேர் உயிரிழந்த தாக்குதலுக்கு அல் குவைதா அமைப்பே காரணம்!

## குற்றஞ்சாட்டுகிறார் சிரிய ஜனாதிபதி



மாஸ்கோ, ஏப். 23

கடந்த சில வாரங்களுக்கு முன் 126 பேர் உயிரிழந்த கொடூரத் தாக்குதலுக்கு அல்-குவைதா அமைப்பே காரணம் என சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத் குற்றஞ்சாட்டி உள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான உள்நாட்டுப்போர், 6 ஆவது ஆண்டாக நீடித்து வருகிறது. கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள அலெப்போ நகரை முழுமையாக மீட்பதற்காக ஜனாதிபதி ஆதரவு படையினர், தீவிர சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, மீதமுள்ள மக்களை அங்கிருந்து தொடர்ந்து வெளியேற்றி வருகின்றனர். இவ்வாறு கடந்த வாரம் 16 ஆம் திகதி அலெப்போ நகரில் இருந்து மக்களை வெளியேற்றிய போது பேருந்துகள் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 68 குழந்தைகள் உட்பட 126 பேர் உயிரிழந்தனர். இதுவரை எந்த அமைப்பும் இந்த தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லை.

இந்நிலையில், இந்தக் கொடூர தாக்குதலுக்கு, அல்குவைதாவின் முன்னாள் துணை அமைப்பு தான் காரணம் என்று சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# உலகின் மிக வயதான ராணி எலிசபெத்துக்கு 91 ஆவது வயது பிறந்தது!

லண்டன், ஏப். 23

உலகின் மிக வயதான ராணி எலிசபெத்துக்கு 91 ஆவது வயது பிறந்தது. அதையொட்டி பக்கிங்காம் அரண்மனையில் தனது பிறந்தநாளை கேக் வெட்டி குடும்பத்தினருடன் கோலாகலமாக அவர் கொண்டாடியுள்ளார்.

இங்கிலாந்து ராணி எலிசபெத், கடந்த மாதம் 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி லண்டனில் பிறந்தார். இவரது முழுப் பெயர் எலிசபெத் அலெக்சாண்ட்ரா மேரி. இவரது தந்தை மன்னர் 4 ஆம் ஜோர்ஜ் மறைவுக்கு பின்னர் 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6



ஆம் திகதி இங்கிலாந்து ராணியாக இவர் முடிசூட்டப்பட்டார்.

இவருக்கு நேற்று முன்தினம் 91 ஆவது வயது பிறந்தது. அதையொட்டி பக்கிங்காம் அரண்மனையில் தனது பிறந்த நாளைக் கேக் வெட்டிக் குடும்பத்தினருடன் கோலாகலமாகக் கொண்டாடினார்.

உலகில் உள்ள மன்னர் மற்றும் ராணிகளில் இவரே மிக வயதானவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். மேலும், இங்கிலாந்து அரச குடும்பத்தில் முடிசூட்டப்பட்டவர்களில் மிக நீண்ட நாள்கள் ராணியாக வலம் வருபவர்களில் இவரே முதலிடம் பெற்றுள்ளார்.

# அ.தி.மு.க. அணிகள் இணைப்புக் குறித்து பேச்சு; இரு தரப்புக் குழுக்களும் விரைவில் சந்திப்பு!

சென்னை, ஏப். 23

அ.தி.மு.க. அணிகள் இணைப்புக் குறித்துப் பேச்சு நடத்த இரு தரப்பிலும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் ஓரிரு நாளில் பேச்சு வார்த்தையைத் தொடங்குவார்கள் என்று கூறப்படுகிறது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர், அ.தி.மு.கவில் 2 அணிகளாக பிளவு ஏற்பட்டது. கட்சியையும், ஆட்சியையும் தொடர்ந்து நடத்துவதற்கு, பிரிந்த அணிகள் மீண்டும் இணைவது அவசியம் என்பதை உணர்ந்து, முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அணியும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் அணியும் அதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றன.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை, கட்சியில் இருந்து சசிகலா, தினகரன் குடும்பத்தினரை முழுவதுமாக நீக்குவது என்பதுதான் ஓ.பி.எஸ். தரப்பின் பிரதான கோரிக்கை. இதை நிறைவேற்றினால் மட்டுமே பேச்சு வார்த்தைக்கு தயாராக இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். சில அமைச்சர்கள் இதை விமர்சித்தாலும், எடப்பாடி பழனிச்சாமி தரப்பு இரு அணிகளும் இணைவதற்கான அடுத்தகட்ட முயற்சிகளை நோக்கி நகர்ந்து வருகிறது.



இந்த நிலையில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் முதல்வர் பழனிச்சாமி தலைமையில் நேற்று முன்தினம் காலை ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

இதில் மூத்த அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், பி.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம், கே.பி.அன்பழகன், எம்.சி.சம்பத், ஆர்.காமராஜ், பி.பெஞ்சமின் மற்றும் வைத்திலிங்கம் எம்.பி. ஆகியோர் பங்கேற்றனர். ஓ.பி.எஸ். தரப்பு நிபந்தனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த சில அமைச்சர்கள், முதல்வர் பதவி தொடர்பாகவும் பேசியுள்ளனர்.

அதைத் தொடர்ந்து, முதலில் பேச்சு நடத்த குழு அமைப்பது, அதன்பின்னர், ஓ.பி.எஸ். அணியுடன் பேசி முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் வேலுமணி தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சி தொடர, முதல்வருடன் ஆலோசனை நடத்தினோம். இந்தக் கட்சிக்காக ஜெயலலிதா கடினமாக உழைத்துள்ளார். எனவே, கட்சி, ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும். இரட்டை இலை சின்னத்தை மீட்க வேண்டும். அ.தி.மு.க. தொண்டர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்காக இரு அணிகளும் இணைவது குறித்து பேச்சு நடத்த வைத்திலிங்கம் எம்.பி. தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு அவர் தினமும் வந்து நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசுவார். அமைச்சர்கள் தங்களது துறைசார்ந்த பணிகளைகவனிப்பார்கள். ஓ.பி.எஸ். தரப்பினர் எப்போது வேண்டுமானாலும் இங்கு வந்து பேச்சு நடத்தலாம். எம்.ஜி.ஆர். உருவாக்கிய, ஜெயலலிதா வளர்த்த இந்த இயக்கம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.- என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அமைச்சர் சி.வி.சண்முகம் கூறியபோது, ''இரு அணிகள் இணைப்பு பேச்சு நல்லபடியாக அமைய வேண்டும். அதற்கு குந்தகம் ஏற்படாமல் இருக்க, ஊடகங்களில் ஆளாளுக்கு பேசவேண்டாம் என்று எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது'' என்றும் தெரிவித்துள்ளார்.

### ஓ.பிஎஸ். தரப்பு ஆலோசனை

இதற்கிடையில், சென்னைகிரீன்வேஸ்சாலையில் உள்ள தனது வீட்டில் ஆதரவாளர்களுடன் 2 ஆவது நாளாக நேற்றுமுன்தினமும் ஓ.பன்னீர் செல்வம் தீவிர ஆலோசனை நடத்தியுள்ளார். 4 மணி நேரத் துக்கு மேலாக இக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

சசிகலா குடும்பத்தினர் அனை வரையும் கட்சியில் இருந்து நீக்காத வரை, பேச்சுக்குப் போகக்கூடாது எனப் பலர் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. ஆலோசனையின் போது, எடப்பாடி பழனிச்சாமி அணியைச் சேர்ந்த அமைச்சர்கள் பி.தங்கமணி, எஸ்.பி. வேலுமணி ஆகியோருடன் ஓ.பி.எஸ். அணியினர் தொலைபேசியில் உரையாடுகின்றனர் என்று கூறப்படுகிறது.

ஆலோசனைக்குப் பின்னர், ஊடகவியலாளர்களிடம் பேசிய கே.பி.முனுசாமி, ''தொண்டர்கள், தமிழக மக்களின் நலன் கருதி, அவர்களுடன் பேச்சு நடத்த எங்கள் அணியிலும் குழு அமைக்கப்படுகிறது'' என்று தெரிவித்துள்ளார்.

கே.பி.முனுசாமி தலைமையில் சி.பொன்னையன், நத்தம் விஸ்வநாதன், மைத்ரேயன், க.பாண்டியராஜன், ஜேசிடி பிரபாகர், மனோஜ் பாண்டியன் ஆகியோர் கொண்ட 7 பேர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டியதால் பேச்சு நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டது.

ஆனால், இரு அணிகளும் நிதானத்தைக் கடைப்பிடிப்பதால் ஓரிரு நாளில் பேச்சு தொடங்கும் என இரு அணி வட்டாரங்களும் தெரிவிக்கின்றன.

## சசிகலா அணியுடன் இணைந்தால் செல்வாக்கை இழந்து விடுவார் ஓ.பி.எஸ்.!

### கட்சி நிர்வாகிகள் கருத்து



சென்னை, ஏப். 23

சசிகலா அணியில் ஓ.பன்னீர்செல்வம் இணைந்தால் மக்கள் செல்வாக்கு அவருக்கு நிச்சயம் கிடைக்காது என கட்சி நிர்வாகிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி அ.தி.மு.க.வைச் சேர்ந்த முக்கிய நிர்வாகி ஒருவர் தெரிவித்தவை வருமாறு:-

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு சசிகலா எதிர்ப்பு அரசியல் மூலம்தான் ஓ.பன்னீர் செல்வம் பிரபலம் ஆனார். மக்கள் செல்வாக்கும் அதிகரித்தது. கட்சித் தொண்டர்களும் ஓ.பன்னீர்செல்வம் பின்னால் அணி வகுத்து வந்துள்ளனர். யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு ஓ.பன்னீர்செல்வத்துக்கு இன்று மக்கள் செல்வாக்கு அதிகரித் துள்ளது.

ஆனால் சசிகலா அணியில் ஓ.பன்னீர்செல்வம் இணைந்தால் மக்கள் செல்வாக்கு அவருக்கு நிச்சயம் கிடைக்காது. சசிகலா இல்லாத அணியில்தான் அவரால் பிரகாசிக்க முடியும். இல்லையென்றால் அ.தி.மு.க.வில் நாளடைவில் பன்னீர்செல்வம் ஓரங்கட்டப் பட்டு விடுவார்.- என்று தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவு பெருகுகிறது!



புதுடில்லி, ஏப். 23

டில்லிப் போராட்டத்தில் நேற்றுமுன்தினம் மேலும் 100 விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். அத்துடன், போராட்டத்துக்குத் தொடர்ந்து ஆதரவு பெருகி வருகிறது.


பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் டில்லியில் நடத்திவரும் அரை நிர்வாணப் போராட்டம் நேற்று முன்தினம் 39 ஆவது நாளாக நீடித்தது.

இந்த நிலையில் காவிரி டெல்டா மாவட்டங்களில் இருந்து காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் தலைவர் தனபால் தலைமையில் 100 விவசாயிகள் நேற்று முன்தினம் டில்லிக்கு சென்று போராட்டத்தில் பங்கேற்றனர்.

இவர்களையும் சேர்த்து போராட்டத்தில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். அது மட்டுமின்றி போராட்டத்துக்கு ஆதரவு மேலும் பெருகி வருகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, ராஷ்டிரிய ஜனதா தளத்தின் தேசிய பொதுச்செயலாளர் அமர் அலாம், தமிழக தலைவர் கவுரி சங்கர் உள்ளிட்டோர் நேற்றுமுன் தினம் போராட்டக் களத்துக்கு வந்து விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணுவைச் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## டில்லியில் போராடி வரும் விவசாயிகளை தமிழக முதல்வர் எடப்பாடி சந்திக்கிறார்!



சென்னை, ஏப். 23

டில்லியில் இன்று நடைபெறும் மத்திய கொள்கைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு முன்பு ஜந்தர் மந்தர் சென்று போராட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகளை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி சந்தித்துப் பேசவுள்ளார்.

டில்லியில் மத்திய கொள்கைக் குழுக் கூட்டம் பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் இன்று காலை நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று மாலை 5மணியளவில் சென்னையில் இருந்து புறப்பட்டு டில்லியைச் சென்றடைந்தார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்கு முன்பு ஜந்தர் மந்தர் சென்று அங்கு தொடர் போராட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன் மூலம் விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

டில்லியில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக முதலமைச்சர் உறுதி அளித்தால் தங்களது போராட்டத்தை வாபஸ் பெறுவோம் என்றும் கூறியுள்ளனர்.




# குஜராத் லயன்ஸின் வெற்றிக்கு கைகொடுத்தார் சுரேஷ் ரெய்னா!

இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்று முடிந்த போட்டியொன்றில் அபாரத்தை வெளிக்கொணர்ந்த குஜராத்லயன்ஸ் அணி, 4 விக்கெட்டுக்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

கொல்கத்தாவின் சொந்த மைதானத்தில் ஆரம்பமாகியிருந்த இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்றிருந்த குஜராத் அணியின் தலைவர் சுரேஷ் ரெய்னா முதலில் எதிரணிக்கு துடுப்பாடும் சந்தர்ப்பத்தை வழங்கினார்.

இதன்படி, சுனில் நரேன் மற்றும் அணித் தலைவர் கௌதம் கம்பிர் ஆகியோருடன் தமது துடுப்பாட்டத்தை கொல்கத்தா ஆரம்பித்திருந்தது.

ஆரம்ப வீரராக வந்திருந்த மேற்கிந்தியத்தீவுகளின் நரேன், பவுண்டரிகள் மற்றும் சிக்ஸர்கள் மூலம் மாத்திரம் ஓட்டங்களைப் பெற்று, வெறும் 17 பந்துகளில் 42 ஓட்டங்களை 9 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாகப் பெற்றிருந்தார்.

இதனால், அபார ஆரம்பத்தை பெற்றுக்கொண்ட கொல்கத்தா அணி, இந்த பருவகாலத்திற்காக முதலில் துடுப்பாடி, பவர் பிளேயில் அதிக ஓட்டங்களைப் (65) பெற்ற அணியாகத் தமது நாமத்தை பதிவிட்டுக்கொண்டது.

தொடர்ந்து, கம்பீரும் பெறுமதியான ஓட்டங்களைச் சேர்த்து வெளியேற, களத்திற்கு வந்த ரொபின் உத்தப்பா எதிரணி பந்து வீச்சாளர்களை துவைக்கத் தொடங்கினார்.

பிரவீன் குமாரின் பந்து வீச்சில் வீழ்ந்த உத்தப்பா மொத்தமாக, 48 பந்துகளிற்கு 8 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 72 ஓட்டங்களைத் தனது அணிக்காக பெற்றுக் கொடுத்தார்.

இதனால், வலுவடைந்த கொல்கத்தா அணியினர் 20 ஓவர்கள் நிறைவில 5 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைக் குவித்திருந்தனர். பந்துவீச்சில், குஜராத் லயன்ஸ் அணி சார்பாக அணித் தலைவர் சுரேஷ் ரெய்னா, பிரவீன்குமார், ஜேம்ஸ் போல்க்னர் மற்றும் பேஷில் தம்பி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் பகிர்ந்து கொண்டனர்.

சவாலான வெற்றி இலக்காகக் காணப்பட்ட 188 ஓட்டங்களைப் பெறுவதற்குப் பதிலுக்கு ஆடியிருந்த குஜராத் அணிக்கு, ஆஸ்திரேலிய இருபதுக்கு 20 அணியின் தலைவர் ஆரோன் பின்ச் மற்றும் நியூஸிலாந்தின் பிரன்டன் மெக்கலம் ஆகியோர் நல்லதோர் ஆரம்பத்தைப் பெற்றுத் தந்திருந்தனர்.

இதில் பின்ச் 4 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 15 பந்துகளிற்கு 31 ஓட்டங்களையும், மெக்கலம் 17 பந்துகளுக்கு 33 ஓட்டங்களையும் பெற்று ஓய்வறை திரும்பினர்.

தொடர்ந்து களத்திற்கு வந்த குஜராத் அணியின் தலைவர் சுரேஷ் ரெய்னா கொல்கத்தாவின் வேகப் பந்து வீச்சாளர்களைச் சிதைத்து, ஓட்டங்கள் சேர்க்கத் தொடங்கினார். வெறும் 46 பந்துகளை மாத்திரமே எதிர்கொண்ட ரெய்னா 4 சிக்ஸர்கள் மற்றும் 9 பவுண்டரிகளை விளாசித் தள்ளி, மொத்தமாக 84 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இவரது ஆட்டம் பெரும் உதவியாக அமைய முடிவில், ஆறு விக்கெட்டுக்களை இழந்தவாறு 18.2 ஓவர்களில் 188 ஓட்டங்களைப் பெற்று குஜராத் லயன்ஸ் அணி இந்த பருவ காலத்திற்கான ஐ.பி.எல். தொடரில் தமது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

ரெய்னாவை ஆட்டமிழக்கச்செய்யும் சந்தர்ப்பங்களைக் கோட்டைவிட்ட கொல்கத்தா அணியின் பந்து வீச்சில் மொத்தமாக நேத்தன் கொல்டர்-நைல் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றியிருந்தனர்.

# ஒரு நாள் தொடரை ஆஸியிடம் பறிகொடுத்தது இலங்கை கனிஷ்ட அணி!

ஹொபர்ட், ஏப்.23

இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றின் கனிஷ்ட அணிகள் மோதும் ஒரு நாள் தொடரின், நான்காவது போட்டியில் திறமையாக செயற்பட்டிருந்த ஆஸ்திரேலிய இளம் வீரர்கள் இலங்கை கனிஷ்ட அணியை 4 விக்கெட்டுகளால் வீழ்த்தி வெற்றியை தம் வசப்படுத்திக் கொண்டனர்.

அத்துடன் இவ்வெற்றியுடன், ஐந்து போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் தொடரையும் 3:1 என ஆஸ்திரேலிய கனிஷ்ட அணி கைப்பற்றியுள்ளது.


ஹொபர்ட் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியடைந்த இலங்கை கனிஷ்ட அணியின் தலைவர் கமிந்து மெண்டிஸ் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதன்படி, துடுப்பாட மைதானம் சென்ற இலங்கை கனிஷ்ட அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான விஷ்வ சத்துரங்க, தான் எதிர்கொண்ட முதல் பந்தை பவுண்டரியாக மாற்றி அசத்தல் ஆரம்பத்தை தந்திருந்தார்.

எனினும், சிறப்பான முறையில் பந்து வீசினர் ஆஸ்திரேலிய இளம் வீரர்கள். இலங்கை கனிஷ்ட அணியினர் முதல் நான்கு விக்கெட்டுகளையும் 40 ஓட்டங்களைத் தாண்டுவதற்குள் இழந்து போட்டியின் ஆதிக்கத்தையும் எதிரணிக்குக் கொடுத்தனர்.

தொடர்ந்து, அணியின் நிலையறிந்து மத்தியவரிசை வீரர்களாக களமிறங்கியிருந்த புனித ஜோசப் கல்லூரி வீரர் ஜெஹான் டேனியல் மற்றும் கிரிஷான் ஆராச்சிகே ஆகியோர் சாதுவான முறையில் துடுப்பாடி அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை மெது மெதுவாக உயர்த்தியிருந்தனர்.

50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை



இழந்த இலங்கை கனிஷ்ட அணி 163 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இதனை அடுத்து இலகு வெற்றியிலக்கான 164 ஓட்டங்களை 50 ஓவர்களில் பெறுவதற்கு மைதானம் விரைந்த ஆஸ்திரேலிய கனிஷ்ட அணி.

சிறப்பாக விளையாடிய ஆஸ்திரேலிய அணி 45.4 ஓவர்கள் முடிவில் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களுடன் வெற்றி இலக்கை அடைந்தது.

ஆஸ்திரேலிய கனிஷ்ட அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஒஸ்டின் வோஹ் 4 பவுண்டரிகள் அடங்கலாக 125 பந்துகளுக்கு 60 ஓட்டங்களையும், ஜொனதன் மெர்லோ 5 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக இறுதிவரை ஆட்டமிழக்காது நின்று 43 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். போட்டியின் ஆட்ட நாயகனாக பந்துவீச்சில் சிறப்பித்திருந்த ஆஸ்திரேலிய வீரர் ஸேக் ஈவன்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# ஐ.பி.எல். போட்டியில் பிரகாசிக்கத் தவறிய இலங்கை வீரர்கள்!




கொழும்பு, ஏப்.23

இந்தியாவில் நடைபெற்று வரும் பத்தாவது ஐ.பி.எல். தொடரில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா மற்றும் சகலதுறை வீரர் மத்தியூஸ் ஆகியோர் பிரகாசிக்கத் தவறியுள்ளனர்.

இந்தியாவில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் ஐ.பி.எல். தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஏனைய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றி விளையாடி வருகின்றனர்.

அந்த வகையில், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான மலிங்கா; மத்தியூஸ் மற்றும் சில வீரர்களும் பங்கு பெற்று விளையாடி வருகின்றனர்.

ஐ.பி.எல். தொடரில் ஏனைய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் சிலர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் இலங்கை அணி வீரர்களின் செயற்பாடு அந்த அளவிற்கு இல்லை.

உதாரணமாக ஐ.பி.எல். தொடரில் துடுப்பாட்ட வீரர்களை மிரட்டி வந்த யோர்க்கர் மன்னன் மலிங்க இந்த ஐ.பி.எல். தொடரில் கூறும் அளவிற்கு சிறப்பாகச் செயற்படவில்லை.

பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது 4 ஓவர்கள் வீசி 58 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட் கூட வீழ்த்தவில்லை.

அதேபோன்று மத்தியூஸும் ஹைதராபாத்தின் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது சிறப்பாகச் செயற்படவில்லை. அந்த ஆட்டத்தில் டில்லி அணி 41 பந்துகளுக்கு 87 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தது.

அப்போது மத்தியூஸ் களத்தில் இருந்தார். இவர் போட்டியை எப்படியும் வெற்றி பெற வைத்துவிடுவார் என்று டில்லி ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், 23 பந்துகளைச் சந்தித்த அவர் வெறும் 31 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

டில்லியும் அப்போட்டியில் தோல்வியை சந்தித்தது. இதனால் இலங்கை அணியின் நட்சத்திர வீரர்களான இவர்கள் இந்தாண்டு ஐ.பி.எல். தொடரில் சொதப்பி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி, மலிங்கவுக்கு இந்த ஐ.பி.எல். தொடர்தான், இங்கிலாந்தில் நடக்கும் சம்பியன் கிண்ணத்துக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் என்று கூறப்பட்டது. ஆனால், மலிங்கா சொதப்பி வரும் நிலையில் அவருக்கு சம்பியன் கிண்ணத் தொடரில் பார்க்க முடியுமா என்பது கேள்விக்குறிதான் என்று கூறப்படுகிறது.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் இன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் புதிய அரசமைப்புச்சீர்திருத்தம்கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தமிழ் மக்கள் அதைக் குழப்பினார்கள் என்ற பழிச்சொல் வரக்கூடாது என்பதற்காகவே தாங்கள் அவ்வாறுசெயற்படவுள்ளார்கள்எனவும் அவர் தெரிவித்தார்.

"தடுமாறும் தமிழ்த் தலைவர்களால் தளர்வடைகின்றார்களா தமிழ் மக்கள்? அடுத்தது என்ன?-என்றதலைப்பில் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால்ஏற்பாடுசெய்யப்பட்ட கருத்தாய்வு நிலை கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வு நேற்றுப் பகல் வவுனியா நகர விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே த.சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக, அதிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இந்தநிலையில், நடுநிலையாக நின்று செயற்படக்கூடிய மாற்றுத்தலைமை ஒன்று அவசியம் என இந்தக்கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன், கூட்டமைப்புத் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மீது கடுமையானகுற்றச்சாட்டுக்களைமுன்வைத்தார்.

படையினரால்ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை விடுவிக்கக் கோரி மக்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள். இது தொடர்பாக இராணுவத் தளபதியைநேரில்அழைத்துப்பேசக்கூடிய ஆசனத்தில் அமர்ந்திருக்கும் இரா.சம்பந்தன் தானாக இராணுவத்திடம் சென்று பேசுகின்றார். இது சிறந்த போக்கு அல்ல என்றார் சுரேஷ்.

எதிர்கட்சித் தலைவராக இருந்துஅவர்தமிழ்மக்களுக்கு என்ன செய்திருக்கின்றார் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தனது உரையில், சம்பந்தனை ஹிட்லருடன் ஒப்பிட்டார். சம்பந்தன் கூட்டமைப்புக்குள் ஹிட்லர் போன்று சர்வாதிகாரியாகச் செயற்படுகின்றார். அவ்வாறான ஒரு தலைவர் எங்களுக்குத் தேவையில்லை என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவரும்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரிஉரையாற்றுகையில்,தனதுஅரசியல்வாழ்வை சம்பந்தன் வேண்டுமென்றே மண்ணாக்கினார்என்றுதனக்கே உரிய பாணியில் கூறினார்.

'சம்பந்தன் திட்டமிட்டு எனக்குத் துரோகிப் பட்டம் சூட்டினார்' என ஆனந்தசங்கரி தெரிவித்தார். சம்பந்தனின் எதேச்சாதிகாரப் போக்கு குறித்தும் அவர் அங்கு கடுமையாகச் சாடினார். தான் புலிகளுக்கு எதிரானவன் அல்லன் என்று தெரிவித்த அவர்.அதேவேளை,புலிகளுடன் இணங்கிச் செயற்படவில்லை என்றும் கூறினார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், சுமந்திரன்போன்றஒருசிலர்மட்டுமே முடிவெடுக்கும் அதிகார பீடத்தில் இருக்கின்றனர் எனவும், இதனால் கூட்டமைப்பில் மக்கள்நம்பிக்கைஇழந்துவிட்டனர் எனவும் அங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இங்கு கருத்துத் தெரிவித்த சித்தார்த்தன் எம்.பி, கூட்டமைப்பில் நீங்கள் கூறுகின்ற முரண்பாடுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அரசமைப்புஉபகுழுவில் நானும் இருக்கின்றேன். அரசாங்கம் இந்த விடயத்தில் உரியவாறு செயற்படவில்லை என்பதும் உண்மை.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தலைவராக உள்ள இரா.சம்பந்தனின் தலைமையை விட்டு இப்போது நான் வெளியேறமாட்டேன். புதிய அரசமைப்பு உருவாக்கத்தை தமிழ் மக்கள் குழப்பினார்கள் என்று எம்மீது குற்றச்சாட்டு வருவதற்கு இடமளிக்கக்கூடாது. அந்த விடயம் தொடர்பில் சம்பந்தனின் முயற்சிகளுக்கு இடையூறு செய்யாமல் அது முடியும் வரை நாம் காத்திருப்போம். - என்று தெரிவித்தார்.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிவகரன்தலைமையில்நடைபெற்ற இந்தநிகழ்வில், மன்னார்மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந்தன், முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, இலங்கைத் தமிழரசுக்கட்சியின்சாவகச்சேரி கிளைத் தலைவர் அருந்தவபாலன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் துறைசார்ந்தபலரும்பொதுமக்களும் கலந்துகொண்டனர். (ம-100)

## மயங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்சம்பவம் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றது.

கைதடிப்பிரதேசமாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்க ளின் ஒன்றியம்ஏற்பாடுசெய்திருந்த இந்த ஆண்டுக்கான மகளிர் விழா நேற்றுப் பிற்பகல் 2 மணி முதல் அங்கு இடம்பெற் றது.

கடைசி நிகழ்வாக, பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட மாவை சேனாதிராசா மாலை 5 மணியளவில் உரை யாற்றத் தொடங்கினார்.

வழமை போல தமது நீண்ட உரையை - தமது சுகவீனத்தையும் மறந்து - தமக்கேயுரிய ஆவேசப் பேச்சில் அவர் தொடர்ந்தார். கண்ணகி, கோவலன் சாரப்பட இலக்கியம்பற்றிய அவரது நெடு உரை தொடர்ந்த சமயத்தில் - மாலை 5.45 மணியளவில் - திடீரென அவரது வார்த்தைகள் தடுமாறின. அதை அருகில் இருந்தோர் அவதானித்து அவரை நெருங்கவும், அவர் சரியவும் சரியாக இருந்தது.

அருகில் இருந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபனும், நிகழ்வு ஏற்பாட்டாளர்களும், பார்வையாளர்கள் சிலரும் அவரைத் தாங்கிப் பிடித்து அமர்த்தினர். அவரதுமுகத்துக்கு குளிர்ந்த நீர் தெளிக்கப்பட்டு, அவர்ஆசுவாசப்படுத்தப்பட்டார். குடிப்பதற்கு சுடுதண்ணீர் வழங்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தை அடுத்து நன்றியுரையோடு நிகழ்ச்சி உடனடியாக முடிவுறுத்தப்பட்டது. (உ)

## வரலாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெஹிவளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

காலிமுகத்திடலைக் கூட்டு எதிரணியினரால் நிரப்ப முடியாது என்று அரசு நினைக்கிறது. அதனால்தான் எதிர்ப்பு ஏதுமின்றி அந்தத் திடலை இம்முறை மேதினநிகழ்வை நடத்துவதற்குக்கூட்டுஎதிரணிக்கு அரசு விட்டுக் கொடுத்தது. ஆனால், அரசின் அந்த எண்ணம் தவறு என்பதைச் சனசமுத்திரத்தைக் காலி முகத்திடலில் மே தினத்தன்று கூட்டி நிரூபிப்போம். - என்றார் நாமல் ராஜபக்ஷ. (உ)

## மீதொட்டமுல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் விவாதம் நடத்துவதற்கான ஏற்பாட்டை நாடாளுமன்ற சபாநாயகர் கருஜெயசூரிய முன்னெடுத்து வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு இந்த வரிச்சலுகை கிடைப்பது துர்லபமாகிவிடும்.

மனிதஉரிமைகள்உள்ளிட்ட முக்கியமான விடயங்களில் இலங்கை கவலையளிக்கும் அளவுக்கு மெதுவாகவே செயற்படுவதாகச் சுட்டிக்காட்டியே இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஐக்கிய இடது - நோர்டிக் பசுமை இடது கூட்டமைப்புக் குழு என்ற ஐரோப்பிய ஒன்றியநாடாளுமன்றக்குழுவே இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளது. இந்தக் குழுவின் 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இதனை முன்வைத்துள்ளனர்.

எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் நடக்கும் அமர்வில் இந்த விடயம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்து கரிசனை எழுப்பியுள்ள இந்தப் பிரேரணையில், ஜி.எஸ்.பி. பிளஸ்வரிச்சலுகையைவழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு இலங்கையில் போதுமான,உண்மையானமுன்னேற்றங்கள் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி அதற்கு மாற்றான சட்டத்தைக் கொண்டு வர இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு அரசாங்கப் பதவிகள் அளிக்கப்படுவதனால், தண்டனையில் இருந்து விலக்குப் பெறும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம்போதியநடவடிக்கைஎடுக்கத் தயாராக இல்லையோ என்று சந்தேகம் ஏற்படுவதாகப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக, புதிய சட்டத்தை அனைத்துலக தர நியமங்களுக்கு ஏற்ப கொண்டு வருவது தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகள் குறித்து, கூட்டம் ஒன்றை நடத்தி வருவதாக இலங்கைஅரசவட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தற்போதைய பிரேரணையில், கவலையளிக்கக்கூடிய மெதுவான முன்னேற்றங்களே இடம் பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது. (உ

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் அடுத்த மூன்று மாதங்களில் முடிவுக்கு வருகின்றது. முன்னைய காங்கிரஸ் அரசு அவரை வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெற வைத்திருந்தது.

இப்போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் - மாநிலங்கள் அவை மற்றும் மக்களவை இரண்டிலும் - ஆளும் பாரதீயஜனதாக்கட்சிக்குகணிசமான செல்வாக்கு உள்ளது. மாநில சட்ட மன்றங்களிலும் அக்கட்சிக்குவலுவான ஆதரவு உள்ளது.

மாநிலங்கள் அவை, மக்கள் அவைமற்றும்மாநிலசட்டசபைகளின் உறுப்பினர்களே வாக்களித்து ஜனாதிபதியைத் தெரிவு செய்வர்.

அதனால் இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி முன்னிறுத்தும் வேட்பாளரே புதிய ஜனாதிபதியாக வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நடிகர்ரஜனிகாந்தைஅரசியலுக்கு இழுத்து வந்து, அதன் மூலம் அவரது ரசிகர்களைத் தனது கைகளுக்குள் போட்டு, தமிழகத்தில் தன்னை வலுவாகக் காலூன்ற பாரதீய ஜனதாக் கட்சி திட்டமிடுவதாகக் கூறப்படுகின்றது.

தமிழகத்தில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி அங்குபாரதீயஜனதாக்கட்சியை வலுவாகநிலை நிறுத்த இதுவே பொருத்தமான வாய்ப்பு என அக்கட்சியின் தலைமை கருவதாகவும் கூறப்படுகின்றது.

அகில இந்திய ரீதியில் நன்கு அறியப்பட்டவரானரஜனிகாந்த், பிரதமர் மோடிக்கும் நெருக்கமான நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேசியரீதியில்பாரதீயஜனதா கட்சியினரால் மதிப்பளிக்கப்படும் வகையில் இந்துமத ஈடுபாடு, சுவாமிப் போக்கு போன்றவற்றைப் பிரதிபலித்து வரும் ரஜனிகாந்த், அரசியலிலோ அல்லது பொதுவாழ்விலோ தமது பெயரைக்கெடுத்துக்கொள்ளாதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய ஜனாதிபதிக்கான பாரதீய ஜனதாக் கட்சியின் வேட்பாளர் தேர்வுப் பட்டியலில் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் எல்.கே.அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், மக்களவைசபாநாயகர்சுமித்ரா மகாஜன், ஜார்கண்ட் மாநில ஆளுநரான திரவுபதி முர்மும் அம்மையார், ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன் ஆகியோரின் பெயர்களும் உள்ளன என்று கூறப்படுகின்றது.

தென்னிந்தியாவிலிருந்து நடிகர் ரஜனிகாந்த், தொழிலதிபர் 'இன்போகிஸ்' நாராயண மூர்த்தி ஆகியோரின் பெயர்களை பாரதீய ஜனதாக் கட்சி இரகசியமாகவைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரத்தை ஒட்டி பிரபல 'இந்தியாடுடே' ஆங்கிலப் பத்திரிகையில் 'அடுத்த முதலாவது பிரஜை' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் ஜனாதிபதி பதவிக்கு நடிகர் ரஜனிகாந்தின் பெயர் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அதில் -

''தென்னிந்தியாவைப் பொறுத்த வரை மிகப்பெரிய ரசிகர் படையை வைத்திருக்கும் 'மெகா ஸ்டார்' ஆன ரஜினிகாந்தைத் தவிர வேறு யாரை மிகப் பெரியதலைவராகமுன்னிறுத்த முடியும்? ஜெயலலிதா காலமாகியமை முதல்கொண்டே அவரை வளைத்துப் போட பாரதீய ஜனதாக் கட்சி முயற்சித்து வருகின்றது.

"ரஜினி - மெகா ஸ்டார், அரசியல் பக்கச் சார்பற்றவர், சர்ச்சைகளில் சிக்காதவர். பாரதீய ஜனதாவுடன் இணங்கியே செயற்பட்டவர். தெற்கில் கால் பதிக்கத் துடிக்கும் பாரதீய ஜனதாவுக்கு அதற்கு உதவக் கூடியவர். அவரின்தேகாரோக்கியம், சிறுநீரகப் பிரச்சினை போன்றவை குறித்து நீண்ட கால வதந்திகள் உண்டு'' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு கூறுகின்றார்தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோனாதிராசா.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் நேற்று 62 ஆவது நாளாகத் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள - காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை - சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

நாங்கள் அரசாங்கம் அல்லர். அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள். மக்களின் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே அரசாங்கத்திற்கு வாக்களித்தோம்.

ஆனால், அந்த விடயங்கள் எவையும் சரிவர நடக்கவில்லை. மக்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்றால் அது நல்லாட்சி அரசாக இருக்க முடியாது.

கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக் கூடா.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயம் தொடர்பில் இரண்டு வாரங்களில் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தர முயற்சி செய்கிறோம்.

இரண்டு அல்லது மூன்றாம் திகதி ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் பல பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளோம். அதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவோம்.

இவ்வளவு காலமும் சர்வதேசசமூகமும், கடந்தகால அரசாங்கங்களுக்கும் தற்போதைய அரசாங்கத்திற்கும் போதிய அழுத்தத்தைக் கொடுக்கவில்லை.

எனவே, இனி நாங்களும் சேர்ந்து அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகத்தை கொண்டு போதியஅழுத்தத்தைக்கொடுக்கச் செய்து பிரச்சினைகளுக்குரியதீர்வைநோக்கிக்கொண்டு செல்ல வேண்டும்.

மேற்குலக நாடுகள் இந்த அரசாங்கத்திற்குஒருவாய்ப்பை வழங்க வேண்டும் என்று எங்களோடும் பேச்சு நடத்தித்தான் அரசாங்கத்திற்குக் கால அவகாசத்தை வழங்கின.

யார் இந்த ஐ.நா. தீர்மானத்திற்குஅடிப்படையாகஇருந்தார்களோ, அவர்கள்தான் இந்த அரசாங்கத்திற்கு நெருக்கடிகளைக் கொடுக்க வேண்டும். சட்டரீதியாகவோ அல்லது அவர்களின் செல்வாக்கின் அடிப்படையிலோ அதனை மேற்கொள்வார்கள். அதற்காகத்தான் நாங்களும் இந்தத் தீர்மானத்திற்கு உடன்பட்டோம்.

மாறாகச் சர்வதேச சமூகத்தின் இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவுவழங்கமுடியாது என்று சொன்னால் நாங்கள் அவர்களிடமிருந்துதனிமைப்பட்டுவிடுவோம்.

நாங்கள் ஓர் அரசியல் கட்சி. நாடு அல்ல. ஆகவே, இதில் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். சர்வதேச சமூகத்தோடு சேர்ந்து நாங்களும் ஒன்றாகப் பயணித்தால்தான் இந்த அரசாங்கம்எங்களைக்கைவிட்டாலும் சர்வதேச சமூகம் எங்களைக் கைவிடாது.

எனவே, நாங்கள் சர்வதேச சமூகத்தோடு இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளலாம். அதனால் தான் நாங்கள் சர்வதேச சமூகத்தோடுஇணங்கிநிற்கவிரும்புகின்றோம்.

இதில் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் வேறுபட்டு நிற்கின்றார்கள் என்றோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளில் அக்கறையின்றி இருக்கின்றார்கள் என்றோ நான் நினைக்கவில்லை. நாங்கள் அனைவரும் ஒருமித்துத்தான் விடயங்களைச் செய்கிறோம்.

ஐரோப்பிய சமூகம், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14 பேர் வந்து சந்தித்த போதும் கூட நாங்கள் ஒருமித்தே கருத்துக்களைக் கூறியிருந்தோம்.

சம்பந்தன் மிகத்தெளிவாக கூறியமைக்குஅமைவாகநாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் ஜெனீவாத் தீர்மானத்திற்கு உடன்பட்டிருந்தோம். - என்று தெரிவித்தார்.

## குப்பைகளை முகாமை செய்வதற்கு மீள் சுழற்சி இயந்திரம் உருவாக்கம்

கொழும்பு, ஏப்.23

மீதொட்டமுல்ல அனர்த்தத்துக்குப் பின்னர் குப்பைகளை முகாமை செய்வது தொடர்பில் சமூகத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கம்பளை - தொலுவ பிரதேசத்தில் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் குப்பைகளை மீள் சுழற்சி செய்யக் கூடிய இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் உருவாக்கியிருக்கும் இந்த இயந்திரம் ஊடாக குப்பை பிரச்சினைக்குத் தீர்வு பெற்று கொள்ள முடியும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

விக்கும் சம்பத் என்ற 37 வயதான நபர் தொழில் ரீதியாக தொழில்நுட்பவியலாளர் ஆவார். அவர் 2011 ஆம் ஆண்டு இந்த இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.

கம்பளை பிரதேசத்தில் நாள்தோறும் அதிகரித்துச் சென்ற குப்பை பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலேயே அவர் இதனை உருவாக்கியுள்ளார்.

இந்த இயந்திரத்தின் ஊடாக நாளொன்றுக்கு 300 டிரெக்டர் குப்பைகளை மீள்சுழற்சி செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# சிங்களமயமாகும் திரியாய் கிராமம்: வைத்தியசாலையை மூடவும் ஏற்பாடு!

## பல்வேறு தரப்பினரும் விசனம்

திருகோணமலை, ஏப்.23

திருகோணமலை மாவட்டத்தின் கிராமங்களை சிங்களமயமாக்கும் முயற்சியின் தொடராக தற்போது திரியாய் கிராமத்தையும் சிங்கள மயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று பல்வேறு தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

புல்மோட்டை ஊடான திருகோணமலையின் பிரதான போக்குவரத்துப் பாதையில் திரியாய் கிராமம் அமைந்துள் ளது.

திரியாய் கிராமத்துக்குச் சமீபமாகக் காணப்படும் தமிழ் கிராமங்களின் பெயர்கள் சிங்களமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது திரியாய் தமிழ்க் கிராமமும் இந்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

திரியாய் கிராமத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் காணப்பட்ட வைத்தியசாலையை முற்றாக மூடுவதற்கு நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வைத்தியசாலையை நிரந்தரமாக மூடினால் அங்கு வாழும் மக்கள் உடனடி மருத்துவ தேவைகளுக்காக பதினொரு கிலோ மீற்றர் தூரம் பயணித்து குச்சவெளி வைத்தியசாலைக்கோ அல்லது பன்னிரண்டு கிலோ மீற்றர் தூரம் பயணித்து புல்மோட்டை வைத்தியசாலைக்கோ செல்ல வேண்டிய அவல நிலை ஏற்படும்.

அண்மைய காலமாக திரியாய் கிராமத்தில் யானை தாக்கி பன்னிரண்டு உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல பாம்புக் கடிக்கு அடிக்கடி ஆளாகும் நிலையையும் அந்தக் கிராமத்து மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

அந்த வைத்தியசாலையைத் தற்காலிமாக மூடுவதாக மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மக்கள் எதிர்பைத் தவிர்த்து எதிர்காலத்தில் அதனை முற்றாக மூடுவதே உள்நோக்கம் என்றும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே திரியாய் மற்றும் அதனை அண்மித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து திருகோணமலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் குடியேறியிருக்கின்றனர்.

தொழில் நிமித்தம் வாழும் மக்கள் மட்டுமே திரியாயில் தற்போது உள்ளனர். எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எஞ்சியிருக்கின்ற மக்களையும் இடம்பெயர வைத்துத் திரியாய் கிராமத்தையும் முற்றுமுழுதான சிங்களக் கிராமமாக மாற்றிவிட நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் தடை: விழிப்புணர்வு ஊர்வலம் சாவகச்சேரியில்

## நடைபெற்றது நேற்று

தென்மராட்சி, ஏப்.23

சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தலைமையில் நேற்று சனிக்கிழமை பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

இந்த ஊர்வலம் காலை சாவகச்சேரி பொது நூலகத்தில் ஆரம்பமாகி நண்பகல் சாவகச்சேரி பஸ் நிலையத்தை வந்தடைந்து நிறைவு பெற்றது.

இதன் போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

விழிப்புணர்வு நடைபவனியின் போது நகரசபை ஊழியர்கள் சூழலில் காணப்பட்ட பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற பொருள்களை அகற்றினர்.

பொது மக்களால் வீதிகளில் கட்டி வைக்கப்பட்ட குப்பைகளையும் அப்புறப்படுத்தி சூழலை தூய்மைப்படுத்தினர்.

விழிப்புணர்வுஊர்வலத்தில் வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில், "இன்று உலகத்தை



ஆக்கிரமித்துக் காணப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் போன்ற உக்கலடையாத இரசாயனங்களால் ஆக்கப்பட்ட பொருள்களைத் தொடும் போதும், அவற்றை எரிக்கும் போதும் வெளியிடப்படும் இரசாயனங்களால் புற்றுநோய் ஏற்படும்.

"பிரிகை அடையாத இந்தப் பொருள்களை வீட்டிலோ அல்லது சுற்றுச் சூழலிலோ விடுவதால் இயற்கை அழகு கெட்டு மன அழுத்தம் ஏற்படும்.

"நுளம்பு பெருக்கத்துக்குக் காரணமாக உக்கலடையாத பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன அமையும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு இது தொடர்பில் தெளிவூட்டப்பட்டது. அத்துடன், திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களில் பொலித்தீன் பாவனையைத் தவிர்க்குமாறும், பொலித்தீன் போன்ற உக்காத பொருள்களைத் தனியாகச் சேர்த்து நகரசபையினரிடம் ஒப்படைக்குமாறும் இதன்போது கோரிக்கை விடப்பட்டது.

இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன், சாவகச்சேரி நகர இளைஞர் கழக தலைவர் மற்றும் உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-21)

# குப்பை அகற்றுவதை எதிர்த்தால் அனைவரையும் கைது செய்யுங்கள்!

## பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு

கொழும்பு, ஏப்.23

குப்பை அகற்றல் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவோரை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபடுவோரை தராதரம் பார்க்காது கைது செய்யுமாறும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொம்பே, ஜாஎல, சுதுவெல்ல, இரத்மலானை, கரதியான போன்ற இடங்களில் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகிறது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சமூகத்தில் காணப்படும் அனைத்து மோசடிகளும் பொலிஸுக்குள்ளும் இடம்பெறுகின்றன என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களின் வரிப் பணத்தில் ஊதியம் பெறும் பொலிஸார், மக்களுக்குச் சேவையாற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பொலிஸார் காக்கிச் சட்டை அணிந்தாலும், அவர்களின் இரத்தத்தில் உள்ளதையும், உடலில் உள்ளதையும் மாற்ற முடியாதுள்ளது. இதுவே கசப்பான உண்மை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# விலங்குகளுக்கு வழங்கும் மருந்தை நோயாளிக்குக் கொடுத்த மருந்தகம்!

கொழும்பு, ஏப்.23

மருந்தகம் ஒன்றில், விலங்குகளுக்கு வழங்கும் மருந்தை நோயாளி ஒருவருக்கு வழங்கிய சம்பவம் ஒன்று கம்பஹா - ஹஸ்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பெண் ஒருவர் தமது கையில் ஏற்பட்ட நோய்த் தாக்கம் ஒன்றுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டதன் பின்னர், கம்பஹா பிரதேசத்தில் உள்ள மருந்தகம் ஒன்றுக்கு சென்று, மருந்துகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

அந்த மருந்துகளை அருந்துவதற்கு முன்னர் சந்தேகமுற்று ஆராய்ந்தபோது, விலங்குகளுக்கு வழங்கும் மருந்துகள் தமது தாயாருக்கு வழங்கப்பட்டுள்ளமையை அவரின் மகன் இனங்கண்டுள்ளார்.

அந்த மருந்தகத்தில், விலங்குகளுக்கென வழங்கப்படும் மருந்துகள் தமது தாயாருக்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கம்பஹா மாவட்ட சுகாதார பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மார்க்சிஷ லெனினிசக் கட்சியின் மே தினக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.23

புதிய ஜனநாயக மார்க்சிஷ லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் 'ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சியின் பாதையில் அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து மக்கள் அதிகாரத்தை வென்றெடுக்க அணிதிரள்வோம்' எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் மே தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன்படி, புதிய ஜனநாயக மார்க்சிஷ லெனினிசக் கட்சி யாழ்ப்பாணம், வவுனியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மே தினப் பேரணிகள், பொதுக் கூட்டங்களை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கட்சியின் ஏற்பாட்டில் மே தினப் பேரணி பிற்பகல் 3.30 மணிக்குக் கொக்குவில் சந்தியில் ஆரம்பமாகிப் பிற்பகல் 5 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்து அங்கு பொதுக் கூட்டம் இடம்பெறும்.

அன்றைய தினம் இடம்பெறவுள்ள மே தினப் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் மக்களை ஒன்று கூடுமாறு புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# அனைத்துலக சைவமாநாடுக் காட்சிகள்



யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும் அனைத்துலக சைவ மாநாடு நேற்று முன்தினமும், நேற்றும் இடம்பெற்ற நிகழ்வுகளின் காட்சிகள்.




ஊர்காவற்றுறை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 3 ஆயிரம் பேருக்கு துருக்கி நாட்டின் அன்பளிப்பான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ். வேலணை மத்திய கல்லூரியில் நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் துங்கா ஒஸ்கா, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், பிரதேச செயலர் எழிலரசி மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# கேப்பாபிலவில் போராடும் மக்களுக்காக மாவட்டம் முழுவதும் போராட வேண்டும்

## வடமாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் புவனேஸ்வரன் அழைப்பு



முல்லைத்தீவு - கேப்பாபிலவில் நிலம் மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கு ஆதரவாக மாவட்டம் தழுவிய போராட்டங்களில் ஈடுபடவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் கோரியுள்ளார்.

கேப்பாபிலவில் மக்கள் போராட்டம் நடத்தும் இடத்திற்கு நேற்றுச் சென்ற அவர் மக்கள் மத்தியில் இருந்து இந்த வேண்டுகோளை முன்வைத்தார். பிலக்குடியிருப்பில் போராடிய மக்களுக்கு வழங்கிய ஆதரவைப்போலகேப்பாபிலவு மக்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கேப்பாபிலவுமக்களின் நிலம் மீட்புப் போராட்டம் நேற்று 52 ஆவது நாளாகவும் இடம்பெற்றது. இந் நிலையில், நேற்று அங்கு சென்ற வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், மக்களின் போராட்டம் தீர்வின்றித் தொடர்வதற்கு மக்களின் பிரதிநிதிகள் செய்கின்ற தவறுகளே காரணம் என்றார்.

மக்கள் 53 நாள்களாக வீதியோரத்தில் இருந்து போராடி நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் தற்போது இறுதிக் கட்டத்தில் இருக்கின்றனர். ஆனால், காணி விடுவிப்புத் தொடர்பாக இதுவரை எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை.

மக்களின் போராட்டம் இனியும் தொடரக்கூடாது, அதற்காக நாம் விரைந்து செயற்பட வேண்டும். இந்த மக்களுக்கு ஆதரவாக மாவட்டம் தழுவிய போராட்டங்களை நடத்த ஒன்றிணையுங்கள். - எனத் தெரிவித்தார். (ம-8)

வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வாழ்விலே சுபீட்சம் மலரச்செய்யும்
அக்ஷய திருதியை

இன் நன்நாளில்
நர்மதாவில் நகைகள் வாங்கும்
வாடிக்கையாளர்களில் அன்றே
குலுக்கல் முறையில் தெரிவு
செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு
28,29.04.2017

மேலும் 10 அதிஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க
மின்னுபகரணங்கள் ஆறுதல் பரிசுகளாக
வழங்கப்படும்

1ம் பரிசு சலவை இயந்திரம்
2ம் பரிசு தொலைக்காட்சிப் பெட்டி
3ம் பரிசு நவீன மின்னடுப்பு

குறிப்பு -
1 பவுணும் அதற்கு உட்பட்ட நகைகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு வெற்றி வாய்ப்பும்,
1 பவுணுக்கு மேற்பட்ட நகைகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் நிறைக்கேற்ப வெற்றி வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

வாடிக்கையாளர் அனைவருக்கும்
நர்மதாவின் அக்ஷய திருதியை ஞாபகார்த்த
பரிசுகள் காத்திருக்கின்றன.

நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள
ஓடர்களை முற்பதிவு செய்து கொள்ளுங்கள்.

நாணயமிக்க, நர்மதாவின் நாணயமாற்று சேவையில் உங்கள் வெளிநாட்டு கரன்சிகளுக்கு வேறெங்கும் கிடைக்காத மிகச்சிறந்த பெறுமதி கிடைக்கும்

நர்மதா கோல்ட் சென்ரர்

யாழ்ப்பாணம்
வெளிநாட்டு நாணய மாற்றுநர்.
WESTERN UNION MONEY TRANSFER
தொ.பே: 021 222 1933
தொ.ந: 021 222 4779
E- mail : narmathagc187@gmail.com
187, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

கொழும்பு
தொ.பே: 011 238 92 82
தொ.ந : 011 239 95 41
E- mail : narmathagc187@gmail.com
151, செட்டியார் தெரு, கொழும்பு 11

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை

எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும்
72 மணி நேரத்தில்
உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்
(EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து
பொதிகள் ஏற்கப்பட்டு
வெளிநாடுகளில்
ஒப்படைக்கப்படும்
(Door to Door Service)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 6720 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.